விலை ரூபா 2-00

16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 ஆவணி 17 ஜுலகம் 5 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (2—9—84) இதழ் 195

## ஓய்ந்தது!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி பகுதிகள் நேற்று நண்பகலுடன் ஓய்ந்துவிட்டன. இதனையடுத்து அங்கிருந்து பஸ் சேவைகளும் யாழ்ப்பாணத்துக்கு வெகுவாகக் குறைந்தன. யாழ் நகர பஸ் நிலையத்தில் இருந்த கலகலப்பும் மாலையில் திடீரென மறைந்து, கடைகளும் மூடப்பட்டு, வெறிச்சோடிப்போய்விட்டது.

# 'தமிழகத்தில் ஏராளமான இலங்கை அரசு உளவாளிகள்!'

## அமிர்தலிங்கம் கூறுகிறார்

சென்னை

தமிழகத்தில் இலங்கை அரசின் உளவாளிகள் இப்போது ஏராளமாக இருக்கிறார்கள் என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இவர்கள் மாறு பெயர்களில் தமிழகத்தில் உலாவி வருகிறார்கள் என்றும் அவர் சொன்னார்.

சென்னைக்கு விஜயம் செய்திருந்த திரு. அமிர்தலிங்கம் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் இத்தகவலைக் கூறினார்.

இலங்கை விவகாரத்தில் இந்தியா மேற்கொண்டுள்ள நிலைப்பாட்டினை தங்கள் தீர்மானங்கள் மோசமான முறையில் பாதித்துவிடக் கூடாது என்பதே இப்போது தங்களின் முக்கிய நோக்கமாக இருக்கிறது என்று திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

தமிழருக்கு ஓரளவாதல் சுயாட்சி வழங்க வேண்டும் என்றும் அமைதியான ஒரு தீர்வினைக்காண முயல வேண்டும் என்றும் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன மீது இந்திய அரசு சில நிர்ப்பந்தங்க[illegible] அமைதியான தீர்வுக்கு சர்வகட்சி மாகாநாடுதான் ஒரேவழி. இதனை தமிழ்க் கட்சிகளே முறியடித்து விட்டதாக காரணம் கூறும்படியான சந்தர்ப்பத்தை கொடுக்விரும்பவில்லை யென்றும் அவர் கூறினார்.

## '50 பேரை ராணுவம் கொலை செய்தது!'

[கொழும்பு]

குறிகவத்துச் சூடுவதில் திறமைசாலிகளான சுமார் 50 தீவிரவாதிகளை அண்மையில் ராணுவத்தினர் கொலை செய்துவிட்டதால் பயங்கரவாத நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

தீவிரவாதக் குழுக்கள் இப்போது தீவிர பயிற்சி பெற்று வருவதாகத் தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தமிழ்நாடு அமைச்சர் சொன்னார்

## "அ.தி.மு.க. ஊழல்களை அம்பலப்படுத்துவேன்!"

[சென்னை]

எம்.ஜி.ஆர். தலைமையிலான அ. தி. மு க.விலுள்ள முக்கிய தலைவர்களின் ஊழல்களை அம்பலப்படுத்தப்போவதாகத் தமிழக உணவு அமைச்சராகப் பதவி வகிக்கும் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் நேற்று அறிவித்தார்.

நேற்று இவருக்கு எதிராக அ. தி. மு. க. செயற்குழு சென்னையில் தீர்மானம் நிறைவேற்றியது. அமைச்சரவையிலிருந்தும், கட்சியிலிருந்தும் நீக்குமாறும் அத் தீர்மானம் கூறுகிறது.

அமைச்சரவையிலிருந்து கொண்டு அ. தி. மு. க. வின் மீது தேவையில்லா குற்றங்களை சுமத்தியும், முறைகேடாகவும் கட்சிக்கு எதிராகவும் அண்மைக்காலமாக இவர் இயங்கி வந்துள்ளார். ஆகவே இவரைக் கட்சியிலிருந்தும், அமைச்சரவையிலிருந்தும் நீக்க வேண்டும்'' என்றும் செயற்குழு முதலமைச்சரைக் கேட்டுள்ளது.

''மற்றவர்கள் தமது குற்றங்களை மறைக்க என்மீது பழியைப்போடுகிறார்கள். என்னைக் கட்சியிலிருந்து நீக்கட்டும் பின்னர் என்ன நடக்கிறது என்று பார்க்கட்டும்'' என்று சோமசுந்தரம் கருத்து தெரிவித்துள்ளார்

## வல்வையில் கைதான

## 16 இளைஞர் நேற்றுவந்தனர்! 23 பேர் இன்று வருவர்!!

[அலுவலக நிருபர்]

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டு காலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்களில் 16 பேர் விடுதலைசெய்யப்பட்டு நேற்று ரயிலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

விடுதலையாகி வந்தவர்களுடன் ஏற்கனவே நெடுந்தீவுக் கடலில்வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட இருவரில் ஒருவரான சைமன் கபிரியல் யேசுதாஸ் என்பவரும் வந்திருந்தார்.

இவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் கொழும்பு ராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை விடுதலைசெய்யப்பட்ட 23 இளைஞர்கள் ரயிலில் யாழ்ப்பாணம் வந்து சேருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்டு விடுதலை பெற்றவர்களில் நேற்றுவரை 229 இளைஞர்கள் அடங்குவர் என்று வல்வை பிரஜைகள் குழுப் பொருளாளர் திரு. முருகமூர்த்தி தெரிவித்தார். (மா)

## புதிய கண்ணோட்டத்தில்

## இலங்கை தமிழர் பிரச்னை

[சென்னை]

''இலங்கைத் தமிழர்களின் பிரச்னையை வேறொரு கண்ணோட்டத்தில் அணுகவேண்டு'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைக் கேட்டுக்கொள்வதென நேற்று சென்னையில் கூடிய அ. தி. மு. க. செயற்குழு முடிவு செய்துள்ளது.

## நேற்று நடந்த மாநாட்டுக் கூட்டம்

[கொழும்பு]

சர்வகட்சி மாநாட்டுத் தூதுக் குழுத் தலைவர்களின் கூட்டம் நேற்றுக் காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகி 11-15க்கு முடிவடைந்தது.

திரு. கே. டபிள்யூ தேவநாயகம், மகா சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினரும், சிங்கள அமைப்பைச் சேர்ந்த உறுப்பினரும் பேசியதாகத் தெரிகிறது.

இன்று காலை 9-30 மணிக்கு மீண்டும் கூடக்கூடும்.

## ஆங்கிலக் கால்வாயில் மரணமான ஆழிக்குமரன் அஸ்தியை தாயார் கொண்டுவந்தார்!

[வல்வெட்டித்துறை]

ஆங்கிலக் கால்வாயை நீந்தும்போது வீரமரணமெய்திய சாதனை வீரர் ஆழிக்குமரன் ஆனந்தனின் அஸ்தியை அவரது தாயார் லண்டனிலிருந்து இங்குகொண்டு வந்துள்ளார்.

ஆனந்தனின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட பின்னர் மனைவி, தாயார், இரண்டு ஆண்பிள்ளைகளும் திரும்பிவந்து சேர்ந்தனர்,

இந்து முறைப்படி அங்கு இறுதிக்கிரியைகள் நடந்ததாகவும், அவரது மூத்த மகன் ரஜன் தந்தையின் உடலுக்குத் தீமூட்டியதாகவும் ஆனந்தனின் தாயார் இராஜரத்தின அம்மாள் விவேகானந்தன் தெரிவித்தார்.

வரும் புதன்கிழமை காலை ஆனந்தனின் அஸ்திகரைக்கும் 30 வது நினைவுநாளும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வல்வெட்டித்துறையில் நடைபெறவுள்ளது.

## ஸ்ரீமா பேச்சுவார்த்தை எதிரொலி

## நீதி அமைச்சர் நிஸங்கா பதவியிலிருந்து விலகுவாரா?

[கொழும்பு]

இலங்கை அரசின் சிரேஷ்ட அமைச்சரான டாக்டர் நிஸங்க விஜயரத்தின பதவியிலிருந்து எந்தநேரத்திலும் விலகலாம் என்று அரசியல் வட்டாரங்களில் இப்போது பலமாகச் செய்திகள் அடிபடுகின்றன

நீதியமைச்சரான நிஸங்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித்தலைவி திருமதி ஸ்ரீமாவோபண்டார நாயக்காவை அவரது இல்லத்தில் சந்தித்து இரகசியப் பேச்சுவார்த்தை நடாத்திய விவகாரம் இப்போது ஐ. தே. கட்சிக்குள் பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளது. அமைச்சரவையிலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவுடன் இரகசியப் பேச்சுவார்த்தை நடாத்தியமை குறித்து விசாரிப்பதற்காக நீதியமைச்சர் டாக்டர் நிஸங்கா விஜயரத்ன ஜனாதிபதி மாளிகைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

திருமதி சிறிமா பண்டார

(8ம் பக்கம் பார்க்க)

## அப்பாவி மக்களுக்காக

## அமைச்சர் லலித் வருத்தப்படுகிறார்!

[கொழும்பு]

''இந்த நாட்டிலிருந்து பயங்கரவாதத்தைப் பூண்டோடு ஒழிப்பதே எமது நோக்கம். ஆனாலும் அப்பாவி மக்கள் துன்புறுத்தல்களுக்குள்ளாவது எமக்கு வருத்தத்தை ஏற்படுத்தத்தான் செய்கிறது'' என்று தேசிய பந்தோபஸ்துஅமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்றுக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அப்பாவி மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களுக்குதமது வருத்தத்தை அமைச்சர் தெரிவித்தார்.

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

சகலவிதமான வீட்டுத்தளபாடங்களும், 7 ஸ்ரீ 304பேஜோ S மொடல் 45000 மைல்கள் ஓடக்கூடியது. விற்பனைக்குண்டு. தொடர்பு Dr த. நாகரத்தினம் 19/1 கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குழி பிற்பகல் 2மணி—6மணி வரை பார்வையிடலாம். 1512

105 கட்சன் ரோட் வட்டக்கச்சி கிளிநொச்சியில் மூன்று ஏக்கர் நீர்ப்பாசன நெற்காணியும், இரண்டு ஏக்கர் வீட்டுடன் தென்னம்பிள்ளை காணியும், விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: சண்முகராசா, 32 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1520

யாழ்ப்பாணம் பீச் ரோட்டிற்கு அருகாமையில் உள்ள இராஜேந்திரா வீதியில் ½ பரப்புக்காணி [2 குழி குறைய) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இலக்கம்1546 C/O ஈழநாடு 1546

யப்பான் மேக் கற்பூரம் செய்யும் மெஷின் [ஓட்ட மெற்றிக்]விற்பனைக்குண்டு ஓமேகா. கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில்) 1547

நாவலர் வீதியில் 1½ பரப்புடன் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல 1569 C/O ஈழநாடு. 1569

தனிப்பாவிப்பிலுள்ள ரொயாற்ரு கொறலா (Toyata Corolla) 2 கதவுகளுடைய 7 ஸ்ரீ தொடரிலக்க கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr வி. சிவகுமாரவேலு, ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி, 1568

சாவகச்சேரி தனங்கிளப்பு சந்திக்கருகாமையிலும் நகர சபையிலிருந்து 2 மைல் தூரத்தில் அமைந்துள்ள 2 ஏக்கர் நெல்வயல் காணி விற்பனைக்குண்டு. கயிலாசபிள்ளையின் வயல், தொடர்பு: அரியராசா 182/2 நாவலர் ரோட் பெருமாள் கோவிலடி. 1567

வண்ணார்பண்ணை, ஓட்டுமடம் வீதியில் 3¼ பரப்புக் காணி, வீட்டுடன் உடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு விளம்பர இலக்கம்1565 C/O ஈழநாடு யாழ்ப்பாணம். 1565

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் சிவன்கோவிலுக்கு சமீபத்தில் இருக்கும் நம்பர் 248 மேல் மாடியுடனும் பின்னுக்கு அறைகளையும் கொண்டவியாபாரம் நடந்து கொண்டிருக்கும் T. N. லிங்கம் மோட்டார்பாட்ஸ் கடை உடனடியாக விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு 179, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24160 22108 1539

## விற்பனைக்கு

சுன்னாகம் சந்தியிலிருந்து ½ மைல் தூரத்திற்குள் தொழிற்சாலை அமைக்கக்கூடியதும் வீடுகட்டக் கூடியதுமான நல்ல காணி 10 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: சு. தம்பித்துரை ஆசிரியர், தனலக்குமி வாசா, சுன்னாகம். 1489

யாழ்ப்பாணம் நாலாம் குறுக்கு சந்தியில் 3 1/2 பரப்பு காணி பழைய வீட்டுடன் விற்பனைக்குண்டு. (இரு பகுதிகளாகவும் விற்கப்படும்)தொடர்பு: 37/1, மாட்டீன் ரோட், யாழ்ப்பாணம். (15 5)

கண்டி ரோட் அரியாலையில் பொன்னம்பலம் வீதிச்சந்திக்கு அருகில் தென்னை, பனைகளுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு: ஆ. கெலன் இல: 1, கதீற்றல் வீதி, யாழ்ப்பாணம். 1524

கொழும்புத்துறையில் புங்கன்குளம் ரோட்டை சார்ந்த கந்தர்மணியம் வீதியில் 3 பரப்பு நன்னீர் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 74 புங்கன்குள வீதி, கொழும்புத்துறை. 1570

எமது ஸ்தாபனத்தில் பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்ட விலையில இரு Honda Motor Cycles C B125N, C 70 Econo Power விற்பனைக்குண்டு. C B 125 N தொடரிலக்கம் 86 Sri 8000 C 70 Econo Power தொடரிலக்கம் 86 Sri 4000 அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். Agromac Ltd, மஸ்கன் லிமிட்டெட்டுக்கு பக்கத்தில், 37/3, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1499

## தவறிவிட்டது

திறப்புக்கோர்வை ஒன்று யாழ்/கன்னியாஸ்திரி மடபாடசாலையின் வாசலடியில் அல்லது திறந்தவெளியரங்கு வடக்குப் பக்க வீதியில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ம. வை. வீரசிங்கம், சேகரம் அன் சன்ஸ், 74,[198] ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். போன் 22693 1549

**Glasgow Nelliady**

A/L 85 AUGUST
(One year course)

**ஆரம்பம்: 3-9-84 திங்கள் மாலை 2-30 மணி**

**ஆசிரியர்கள்:**

இரசாயனம் - சண்;
பௌதிகம் - வர்ணன்
தூயபிரயோக கணிதம் - வெக்ரர்;
விலங்கியல் - சிவபாதம்;
தாவரவியல் - பாலா
1548

**கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,**

**கொழும்பு ஸ்ரூடியோ**

**படித்தீர்களா? ரஜனி மாதநாவல் இதழ்**

1564

## தேவை

85 A/L பரீட்சை மாணவனுக்கு பிரத்தியேக பௌதிகவியல் ஆசிரியர் (Individual Tutor தேவை. R. துரைராஜா, 45, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1540

Building Supervisors தேவை யாழ்நகரில் அல்லது அண்மையில் வசிப்பவர்கள் விரும்பப்படுவர்- Draughtsman தகைமை இருப்பின் நன்று 4-9-84 இன் முன் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1536, மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 1536

Electric Weldingஇல் 2வருட அனுபவமுடையவர்கள் தேவை சான்றிதழ்களுடனும், விண்ணப்பத்துடனும், தகுந்த சிபாரிசுடனும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 2-ம், 3-ம் திகதிகளில் நேரில் சமூகமளிக்கவும். டைனமிக் என்ஜினியறிங் லிமிடெட், 43, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 1483

விரைவில் தொடங்கும் சிவாஸ் அபிவிருத்திச் சேவைக்கு (கம, கைத்தொழில் வீட்டுத்தேவைகள் விநியோகஸ்தர்கள்) பிராந்திய விற்பனை நிலையங்களுக்கு முகாமையாளர்கள் தேவை. பிணைப் பணம் தேவை. 14-9-84 இற்கு முன் சொந்தக் கையெழுத்தில் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். நா. சிவமுத்துலிங்கம். முதலியார்வளவு, சபாபதி வீதி தலையாளி, கொக்குவில். 1495

யாழ் மாநகர எல்லைக்குள் ஒரு சிறிய வீடு தேவை தொடர்பு; 59 Old Park Road, Jaffna. 1572

நன்கு அனுபவமுள்ள A/C Mechanics, Auto Mechanics உடன் தேவைப்படுகிறார்கள் அத்தாட்சிப் பத்திரத்துடன் கீழ்க்கண்ட விலாசத்துக்குத் தொடர்பு கொள்ளவும். M இந்திரன், 75, கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம். 1501

## சேவை

ஆங்கிலத்தில் பிரதி தட்டெழுத்து வேலைகள், சுருக்கெழுத்து வேலைகள், ஆங்கில சுருக்கெழுத்தில் பயிற்சி அளித்தல், மனுக்கள் தயாரித்தல் போன்ற கடமைகள் அனுபவமுள்ள சுருக்கெழுத்தாளரால் வேண்டுகோளுக்கிணங்க பொறுப்பேற்கப்படும். எஸ். ஜெ. ராஜா, இராசமன்றம், உத்தரிய மாதா கோவில் வீதி, வயாவிளான். 1552

## CLASSES

Spoken English/Modern Cake Decorations Classes commersing shortly for both Contact. Mrs. Sugumar 139, Kannathiddy Road, Jaffna. 1555

★ மனுக்குலத்தின் போக்குகளை மாற்றியமைக்க வேண்டுமென்று அனைவரும் சிந்திக்கின்றார்கள். ஒருவர் கூடத் தனது போக்குகளை மாற்றியமைக்க வேண்டுமென்று சிந்தித்ததாகத் தெரியவில்லை.

— லியோடால்ஸ்டாய்

உபயோகித்து பழுதடைந்து கிறல் விழுந்து மங்கிய எவர்சில்வர் பாத்திரங்களை திருத்தி புதியன போல் மெருகிட்டு வழங்கப்படும். உங்கள் தேவைக்கு

**பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்,**

257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(1519)

**Mayfair Ladies Acadamy**

**புதிய வகுப்புகள் ஆரம்பம்: 9-9-84**

CAKE ICING
GLASS PAITTING
STRAW WORK
KNITTING
FABRIC PAINTING

இன்னும் பல வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

விபரங்கட்கு:

MAFAIR LADIES ACADAMY
51/1 Kannathiddy Road,
Jaffna.

என்ற முகவரியுடன் தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். 1556

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பித்துரை செல்வரத்தினம்

திருமதி தம்பித்துரை செல்வரத்தினம் காலமாகி விட்டார். இவர் கொக்குவில் மேற்கு காலஞ்சென்ற இளையதம்பி தம்பித்துரைப்பத்தரின் அன்பு மனைவியும், இலங்கை இராணுவ இளைப்பாறிய சாஜன்ட் மேஜர் நவனீதகிருஸ்ணன், கொழும்பு றஸ்ரம்ஜீ லிமிட்டெட் கணக்காளர் யோகேஸ்வரன்; சிரோன்மணி, ரதிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், கொக்குவில் மேற்கு இராசரெத்தினம், தும்பளை சிவானந்தம், ரூபவதி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாருமாவர். அன்னாரின் இறுதிச் சடங்குகள் இலக்கம் 36, நாயன்மார் வீதி, நல்லூரில் 02-9-84 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று தகனக்கிரிகைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். 1566

## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்— நன்றி நவிலலும்



தோற்றம்: 18-6-1959

மறைவு: 28-7-1984

செல்வன் சுப்பிரமணியம் செல்வகுமார் (அப்பு)
(புளியங்கூடல்)

எம்மையெல்லாம் ஆறுமீளாத் துயரில் ஆழ்த்தி விட்டு கடந்த 28—7—1984 அன்று அகால மரணமடைந்த எமது அன்புச் செல்வன் குமாரின் ஈமக்கிரிகைகளில் கலந்து கொண்டு தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்ட சுற்றத்தார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் 3—9—84 அன்று காலை அந்தியெட்டிக் கிரியைகள் கீரிமலையிலும், வீட்டிலும் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

பிரிவால் துயருறும்
தாயாரும், சகோதரர்களும்,
16, சீனிவாசகம் ரோட்,
கொட்டடி. 1571

# வார மலர்

ஈழநாடு லங்கா

EELANADU VARAMALAR


# 1884-ல் யாழ்ப்பாணத்தைக் கலக்கிய சூறாவளியும் வெள்ளப்பெருக்கும்

## இயற்கையின் இன்னொரு சீற்றத்திற்கு யாழ்ப்பாணம் இலக்காகுமா?

வ. மகாதேவன்

நூறு ஆண்டுகளுக்கு முன் 1884 ஒக்டோபர் மாதத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் இயற்கையின் பயங்கர சீற்றமொன்றினுக்கு இலக்காகியிருந்தது. சுமார் இருநூற்றூண்டுகளுக்கு ஒருமுறைதான் இத்தகைய பயங்கர சம்பவங்கள் நிகழ்வதுண்டு எனப் பொதுவாகக் கருதப்பட்டு வருகிறது. குடாநாடு முழுவதும் வெள்ளத்தில் மூழ்கியிருந்தது என்றும் சகல வீதிகள் வழியாகவும் வெள்ளம் நிரம்பி வடிந்துகொண்டிருந்ததாகவும் அறியப்படுகிறது.

மிகவும் அதிர்ச்சிதரக்கூடிய நிகழ்ச்சி யாதெனில் கடலில் சென்றுகொண்டிருந்த சில படகுகளும் கரையோரத்தில் கட்டிவைக்கப்பட்டிருந்த படகுகளிற் சிலவும் பயங்கர புயற்காற்றினுல் உள்நோக்கிக் கொண்டுசெல்லப்பட்டு உள்நாட்டிலிருந்த நெல்வயல்களில் வீசப்பட்டிருந்தனவாம்! அராலிக் கடலிலிருந்த படகுகளிற் சில கல்லுண்டாய் வெளியில் காணப்பட்டன என்று நிலைமையை நேரில் பார்வையிட்டவர்கள்கூறக்கேட்டிருக்கிறேன்.

இதற்கான காரணம் பெரும் புயல் (Hurricane) என்றும் அத்தடன் முகில் வெடிப்புகள் (Cloudbursts) என்றும் கூறப்பட்டது. படகுகள்உள்நோக்கி அதிகதூரம் வீசப்பட்டமைக்கு இவை திருப்திகரமான விளக்கங்களாகஅமையவில்லை. அண்மையில் அமைந்துள்ள கடலடித்தளத்தில் திடீரெனஉடைவுகளும் அசைவுகளும் ஏற்பட்டபோது உருவாகிய கடற்பெருக்கும் கடற்கொந்தளிப்புமே படகுகள் தூக்கியெறியப்பட்டதற்குப் பொருத்தமானவிளக்கமாக இருக்கவேண்டும்.

தூரகிழக்கில்மலேசியாதீவுத்தொகுதியில் சுமாத்திரா, யாவா ஆகிய தீவுகளுக்கு இடையே உள்ள சண்டா தொடுகடலில் கிருக்கற்றோவா (KRAKATOA) என்ற எரிமலை இருந்தது. இந்தஎரிமலை சுமார் 200 ஆண்டுகள்வரை கக்காமல் இருந்துவிட்டு 1883 மே, ஜூன் ஆகிய மாதங்களில் மீண்டும் கக்குவதற்கு ஆரம்பித்தது. அதே ஆண்டில் ஓகஸ்ட் 26, 27, 28 ஆகிய திகதிகளில் பயங்கர பேரதிர்ச்சியுடனும், பேரொலியுடனும் கக்கி வெடித்தது! சுமார் 2000 அடி உயரமான இந்த மலையும் அது அமைந்துள்ள 18 சதுர மைல் பரப்பளவான தீவொன்றும் சின்னாபின்னமாகிச் சுக்குநூறாகி மறைந்தன! இதுவே உலக வரலாற்றில் பதிவாகியுள்ள மிகப் பயங்கரமான இயற்கைச்சீற்றமாகும். ஓகஸ்ட் 27ல் எழுந்த பேரொலி 2 000 மைல் தூரத்திலுள்ள இலங்கையிலும் கேட்டதாம்! சுமார் 3,000 மைல் தூரத்திலுள்ள வேறிடங்களிலும் கேட்டதாம்!!

சுமார் 5,000 மைல் தூரத்திலுள்ள தென்னபிரிக்கத் துறைமுகமான கேப் டவுனை அடுத்துள்ள கடலின் பெருக்கு நீர் மட்டம் மேலதிகமாக 18 அங்குலங்கள் வரை உயர்ந்தது! சுமார் 30 மைல் உயரம் வரை எழுந்த தூசுப் படலம் ஏழு தடவைகள் பூமியைச் சுற்றி வந்ததாக அவதானிக்கப்பட்டது சுமார் 30,000 மக்கள் உயிரிழந்தனர்.

இதனையடுத்து சுமார் ஈராண்டு காலம்வரை ஏராளமான இடங்களில் இந்தியா தொடக்கம், ஜப்பான், அவுஸ்திரேலியா வரை புவி நடுக்க நிகழ்ச்சிகள் அடிக்கடி நிகழ்ந்த வண்ணம் இருந்தன. இவற்றுள் பல கடலடித்தளத்தில் நிகழ்ந்தன.

எனவே, கிருக்கற்றோவா எரிமலை வெடிப்பைத் தொடர்ந்து கிழக்கு உலகில் தரையின் கீழும் கடலடித்தளங்களிலும் தொடர்ச்சியாகப் புவியோட்டில் நிகழ்ந்துகொண்டிருந்த மாற்றங்களின் ஒரு விளைவாகவே 1884 ஒக்டோபர் 16இல் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கதிகலங்க வைத்த 'சூருவளி' அமைந்திருந்தது.

இன்னுமொரு நூற்றூண்டு கழிவதற்குள் பேரழிவுகளைக் கொடுக்கக்கூடிய பயங்கரமான இயற்கையன்னையின் சீற்றமொன்றினுக்கு யாழ்ப்பாணக் குடாநாடு இலக்காகுமா? புவி நடுக்கங்களையும் எரிமலைக் கக்கல்களையும் முன்னதாகக் கூறுதல் தொடர்பான ஆராய்ச்சிகள் பலனளிக்குமானல் சில மாதங்கள், சில நாட்கள் அல்லது சில மணித்தியாலங்களுக்கு முன் எச்சரிக்கைகள் வெளியிடப்படலாம். ஆனல் திடீரென ஏற்படக்கூடிய அழிவுகளை முன்னதாகக் கூறுவது சாத்தியமான காரியமென நாம் எதிர்பார்க்க முடியாது.

★

நீ யாருக்கும் பக்கத்திலிருக்காதே: தூரத்திலேயே இரு? பக்கத்தில் இருக்கும் இமையைப் பார்க்க முடியாத கண்கள் தூரத்தில் இருக்கும் நட்சத்திரத்தைப் பார்த்துவிடுகின்றன.

— கண்ணதாசன்

## விந்தை விஞ்ஞானிகள் இருவர்

பெரியதில் மிகப்பெரியது பேரன்பு.
நாளை மறுதினம் டாகடர் அல்பேர்ட் சுவீட்சர் நினைவு தினம் என்பதால் இதுவே பாடம்

ஐரோப்பா பெற்றெடுத்த 'காந்தி' சுவீட்சர் என்பது இன்று சாதாரணமாகிவிட்டது.

சீவகாருண்யம் என்ற கிறித்தவ தத்துவத்தை திருக்குறளில்ஆராய தமிழ்படித்த மருத்துவமேதை சுவீட்சர்.

மருத்துவ மாதைக் கல்யாணம் செய்து, மத்திய ஆபிரிக்க நாடுகளில் வாழும் மனிதருக்கு தெய்வீக சேவை ஆற்றி அங்கே சமாதியானவர்

M D , DSe , D. D., போன்ற பெருங் கலாநிதிப் பட்டங்கள் பெற்ற இந்த அதிமனிதன் விண்ணரசை மண்ணில் காணமுடியுமென்பதை தமது வாழ்நாளிலேயே நிரூபித்தவர்.

உயிர் வாழும் எந்த இனத்துக்கும் இடுக்கண்களையும் இலட்சியத்தில் ஊறித் திளைத்த அஹிம்சாமூர்த்தி அல்பேர்ட் சுவீட்சரை நினைக்கும்போது தோற்றத்தில் அவர் போன்ற இன்னெரு அல்பேர்ட் நினைவுக்கு வரும்.

டாக்டர் அல்பேர்ட் ஐன்ஸ்டின் உலகம் கண்ட மாபெரும் விஞ்ஞானி. தம்முடைய அணுகுண்டு விளைவித்த பேரழிவு கேட்டு குழந்தை போல அழுதார் தெய்வம் உண்டென்ற சித்தம் மானிட தெய்வமாகிய மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் உண்டான தென்று அடிக்கடி நினைப்பூட்டியிருக்கிருர்.

இந்த அல்பேர்ட்டுகள் விந்தை விஞ்ஞானிகள். ஐரோப்பா ஈன்றெடுத்த இரு மகாத்மாககள். உலக அமைதிக்கு இவர்களின் வாழ்க்கை இன்றியமையாதது.



## முதலாவது தமிழ் பட்டதாரி ஆசிரியை !

பிறவியிலேயே கண்பார்வையற்றவரான திருமதி சுப்பிரமணியம் மங்களராணி தற்போது பட்டதாரி ஆசிரியையாக நியமனம் பெற்றுள்ளார்: இந்த வகையில் நியமனம் பெற்ற முதற் தமிழ் பெண்மணி இவராவார். இவரது தன்னம்பிக்கையும் அயராத உழைப்பும் மிக்க வாழ்வு பலருக்கும் எடுத்துக் காட்டுக்குரியதாகும், கண்பார்வையற்றவராயிருந்தும் உயர் கல்வி கற்று, ஆசிரியையாகி, இன்று ஓர் குழந்தைக்குத்தாயாகவும் உள்ள இவரது தன்னம்பிக்கை மிக்க வாழ்வு மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

இவர் 1957ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலுள்ள தென்புலோலியில் கிறிஸ்தோபர் திரேசம்மா தம்பதிகளின் மகளாய்ப் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியைக் கைதடியிலுள்ள நவீல்ட் பாடசாலையில் 1963ஆம் ஆண்டு ஆரம்பித்தார் பின்பு 1972ஆம் ஆண்டு சாவகச்சேரி ட்றிபேகசல்லூரியில் 9ஆம் வகுப்பிற் சேர்ந்தார். அங்கிருந்து 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையிற் தோற்றிச் சித்திபெற்ருர். 1974ஆம் ஆண்டு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் க. பொ. த (உயர்தரம்) கல்வியைத் தொடர்ந்தார், 1978ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டார். யாழ் பல்கலைககழகத்தில் வரலாற்றை விசேட பாடமாய்ப் பயின்று அதில் இரண்டாம் வகுப்பில் மேல் நிலையில் சித்தி பெற்ருர்.

இவ்வாறு சித்தி பெற்றதும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் பகுதிநேர ஆசிரியையாக 1983ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பதவியேற்ருர். இன்று அரசாங்கப் பாடசாலையில் பட்டதாரி ஆசிரியையாக நியமனம் பெற்றுள்ளார். இவரது இந்நியமனத்திற்கு கலாநிதி ஆ. கந்தையா அவர்கள் பெரிதும் உதவி புரிந்துள்ளார்.

இனிமையாகப் பாடக்கூடிய

(15ம் பக்கம் பார்க்க)

## ஹி..ஹி..

நண்பர்: தம்பி' கடை பூட்டி இருக்கிறதே, என்ன நடந்தது?
பையன்: முதலாளி கடைத் திறப்பைத் தொலைத்து விட்டார், அது தான்.

★

ஒருவர்: அகதிகளுக்கென்று நேற்றுக் காசு வாங்கினீர்களே, பின் ஏன் இன்று வந்தீர்கள்?
காசு சேர்ப்பவர்: நேற்று வல்வெட்டித்துறை அகதிகளுக்காக வந்தோம். இன்று அச்சுவேலி அகதிகளுக்கு......

★

ஒருவர்: உங்கள் மகன் இன்று பள்ளிக்குப் போகவில்லையே! ஏதும் பிரச்னையா?
மற்றவர்: ''ஹோம் வேர்க்'' ஒன்றும் செய்யவில்லையாம். அது தான் போகவில்லை.

★

தந்தை: வரும்போது பஸ்ஸில் சோதனை நடந்ததா?
மகள்: இல்லையப்பா, பாடசாலையில் தான் கணித பாட சோதனை நடந்தது.

★

ஒருவர்: என்னப்பா போனகையோடை திரும்பி வாருய், ஏதாவது ''ஜீப்'' வருகுதோ?
மற்றவர்: இல்லையண்ணை. கடன்காரன் ஒருவன் வாருன், அதுதான்......

★

ஒருவர்: அண்ணே இந்த வீதியால் பஸ் ஒன்றும் ஓடவில்லையே ஏதும் பிரச்னையா?
மற்றவர்: நடுவீதியிலே பெரிய மரம் விழுந்து கிடக்குது.

★

ஒருவர்: தம்பி! இன்று யாழ்ப்பாணத்தில் ஒரு தியேட்டரிலும் படங்கள் ஓடவில்லையாமே என்ன பிரச்னை?
மற்றவர்; இன்று போயா தினம் அதுதான் படங்கள் இல்லை.

★

ஒருவர்: இன்று யாழ்தேவி நாலுமணி நேரம் தாமதமாக வந்ததே, என்ன நடந்தது?
மற்றவர்: கொழும்பிலிருந்து நாலுமணி நேரம் தாமதித்துத்தான் புறப்பட்டதாம்,

-கா. யோ. கிரிதரன்

# முத்திரைபதித்த டாக்டர் நாகநாதன்

எஸ். எம். ஜி.

இரும்பு மனிதர் என்று டாக்டர் நாகநாதனைத் தமிழ் அரசுக் கட்சியினர் அழைத்து வந்தபோது மாற்றுக்கட்சியினர் அதைக் கேலி செய்ததுண்டு. ஆனால் அவர் இரும்பு மனிதர்தான் என்பதை நிரூபிப்பது போன்று ஒரு சம்பவம் 1961ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கச்சேரி முன் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் இடம் பெற்றது. யாழ். கச்சேரி முன் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் முதல் நாள் நடைபெற்ற இழுபறி, குண்டாந்தடிப் பிரயோகத்தின் போது ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் டாக்டர் நாகநாதனின் தலையில் அடித்தார், குண்டாந்தடி முறிந்துவிட்டது!

இரும்பு மனிதர்தான் என்பதை நிரூபித்த இச்சம்பவத்தில் முறிந்த குண்டாந்தடியின் ஒருபகுதியை அவர்தொடர்ந்து வைத்திருந்தார்.

### அரசியலால் வருமானத்தை இழந்தவர்

டாக்டர் நாகநாதன் புகழ் பூத்த வைத்தியர். இலங்கையிலுள்ள பெரும் அரசியல் தலைவர்கள் பலருக்கும்அவர்குடும்ப வைத்தியர். அவர்களின் அடுக்களை வரை சென்றுவரக் கூடிய செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்தவர். ஆனாலும் வைத்தியத்துக்கும் அரசியலுக்கும் தொடர்பில்லாமல் வாழ்ந்தவர் நிறையச் சம்பாதித்தவர். அரசியலில் நுழைந்ததால் அவற்றைஇழந்தனர். பம்பலப்பிட்டியில் அவரது 'டிஸ்பென்சரி'க்கு அருகே ஐக்கிய தேசியக்கட்சியின் ஒரு பிரமுகரின் இல்லம். அங்கு கட்சியின்ஆதரவாளர்கள் கூடி நிற்பார்கள். இங்கு நோயாளிகளின்கூட்டம் திரண்டு நிற்கும்! அரசியலில் ஈடுபட்டு அந்த 'டிஸ்பென்சரி' யையே மூடிவிடவேண்டி ஏற்பட்டது!

### திருஞானமும் நாகநாதனும்

இப்பொழுது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவைப் பணிப்பாளராகப் பணியாற்றும் திரு. வி ஏ. திருஞானசுந்தரத்துக்கு வயிற்றில் ஒரு பெரும் வியாதி வந்து விட்டது. கிருன்ட்பாஸில் உள்ள ஒரு தனியார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், சில தினங்கள் பெரும் பணத்தைச் செலவிட்டும் குணம் ஏதும் காணப்படவில்லை சத்திரசிகிச்சை செய்வதைத்தவிர வேறு வழியில்லை என்று அங்குள்ள வைத்திய நிபுணர்கள் தெரிவித்துவிட்டனர். ஆனால் சத்திரசிகிச்சை செய்வதற்கு அவரது அண்ணர் சிவஞானம் விரும்பவில்லை. டாக்டர் நாகநாதனிடம் திருஞானத்தைக் காண்பித்தார், சத்திரசிகிச்சை தேவையில்லை யென்று கூறிய டாக்டர் நாகநாதன் அவரைக் கொள்ளுப்பிட்டியிலுள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கும்படியும் தாம் ஊசிமருந்து மூலமே குணப்படுத்தித் தருவதாகவும் சொன்னார். இதன் படியேதிருஞானம்குணமடைந்தார். சத்திரசிகிச்சை இல்லாமலே இன்று உற்சாகமாகத் தமது கடமைகளைச்செய்துவருகின்றார் திருஞானம் இது எனக்குத் தெரிந்த ஒரு 'கேஸ்' மட்டுமே!

டாக்டர் நாகநாதன் எந்த ஒரு மாநாட்டிலும் பேச்சு வார்த்தைகளிலும் கூட ஓர் இடத்தில் அமர்ந்திருக்கமாட்டார். அங்கும் இங்குமாக நடமாடிக்கொண்டும் மேசையிலுள்ளவைகளைப் புரட்டிக் கொண்டும் வீசிக்கொண்டும் குழந்தைப் பிள்ளைகள் போல் திரிவார். அவருடன் சமரசத்துக்கு வருவது கடினம்! ஆனாலும் சில விஷயங்களில் அவரால்தான் வெற்றியும் கிடைத்திருக்கிறது!

### பண்டா – செல்வா ஒப்பந்தம்

பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னர் பல வாரங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது இரவு பகலாக நித்திரை விழித்துப் பாடுபட்டவர்களில் டாக்டர் நாகநாதனும் ஒருவர் என்று சொல்வதைவிட அந்த ஒப்பந்தம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதற்கும் அவர் ஒரு முக்கிய காரணம் என்று சொல்லலாம்!

பண்டா — செல்வா ஒப்பந்தம் சரியான முறையில் செயல்படுத்தப்பட்டிருந்தால் இன்று தமிழர் பிரச்னை இந்த அளவுக்கு மோசமாகப் போயிருக்காது என்று துணிந்து சொல்லலாம்!

இதே சமயம் டாக்டர் நாகநாதன் இளைஞர் குழுவினருடனும் நல்லுறவு வைத்திருந்தார். இன்று இளைஞர்கள் வெவ்வேறு பிரிவாகப் பிரிந்து போனதுக்கும் டாக்டர் நாகநாதன் மறைவு ஒரு கராணமென்று சொல்லலாமா?

டாக்டர் இலங்கை முருகேசு விஜயரத்தினம் நாகநாதன் 1906ம் ஆண்டு ஜனவரிமாதம் 31ந்தேதி பிறந்தார். யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் பாடசாலையிலும் யாழ்ப்பாணம் செல் ஜோன்ஸ் கல்லூரியிலும் கல்வி கற்ற நாகநாதன் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்து படித்த பின் இங்கிலாந்தில் பிரபல்யம் பெற்ற செல்ற்றன் ஹாம் பாடசாலையில் சேர்ந்தார். இதன் பின் மருத்துவப் படிப்பிற்காக லண்டன் சென் பார்தலோமியஸ் ஆஸ்பத்திரியில் சேர்ந்தார். கடைசியாக எம் பி பி எஸ், எம் ஆர் சி.எஸ், எல்.ஆர்.சி.பி [லண்டன்] பட்டங்களைப் பெற்று வெளியேறினார்.

### விளையாட்டு வீரர்

மாணவனாக இருந்த காலத்தில் டாக்டர் நாகநாதன் விளையாட்டுக்களிலும் ஆர்வம் கொண்டிருந்தார் செல்ற்றன் ஹாம் பாடசாலைக் கிரிக்கெட் கோஷ்டியில் டாக்டர் நாகநாதன் முதல் துடுப்பெடுத்தாடும் வீரராகவும் விக்கட் காப்பாளராகவும் விளங்கினார், றகர், ஹொக்கி விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கிய டாக்டர் நாகநாதன் இங்கிலாந்தில் தாம் படித்த பாடசாலைக் கோஷ்டிகளில் சேர்ந்து விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றினார். இந்தியன் ஒலிம்பிக் ஹொக்கிக்குழுவிலும் அங்கம் வகித்தார். அரசியலில் ஆர்வம் கொண்ட டாக்டர் 1927ஆம் ஆண்டிலிருந்து 1929-ஆம் ஆண்டு வரை இங்கிலாந்தில் 'இந்தியன் 'மஜ்லிஸ்' செயலாளராகவும் தலைவராகவும் பணியாற்றினார்.

### தீவிர அரசியலில் ஜி. ஜி. யுடன்!

ஜி. ஜி, யின் ஐம்பதுக்கைம்பது கோரிக்கையுடன் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட டாக்டர் நாகநாதன் 1947-ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் எந்தத் தொகுதியிலும் போட்டிக்கு நிற்கவில்லை. இத்தேர்தலில் தமிழ்க்காங்கிரஸ் அமோக வெற்றிபெற்றது. டாக்டர் நாகநாதன் மூதவை (செனட் சபை) உறுப்பினராகத் தமிழ்க்காங்கிரஸால் நியமிக்கப்பட்டார்.

1948-ஆம் ஆண்டில் திரு. டி. எஸ் சேனநாயக்கா அமைசரவையில் பதவியேற்பதற்குத் திரு ஜி ஜி பொன்னம்பலம் முடிவு செய்தபோது அதை எதிர்த்த டாக்டர் நாகநாதன் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. கு. வன்னியசிங்கம் ஆகியோரும் தமிழ்க் காங்கிரஸிலிருந்து வெளியேறி 1949-ஆம் ஆண்டில் தமிழ்க் காங்கிரசுக்கு எதிராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்தனர்

1952-ஆம் ஆண்டில் இரண்டாவது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் யாழ்ப்பாணத் தொகுதியில் திரு. ஜி. ஜி பொன்னம்பலத்தை எதிர்த்துப் போட்டியிடுவதற்காக மூதவை உறுப்பினர் பதவியை டாக்டர் நாகநாதன் ராஜினாமாச் செய்தார். தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட அவர்

(14ம் பக்கம் பார்க்க)

---

# நுழைவதற்கு நூறுதடை!

இளமுளமிங் கேதேதோ கனவுகண்டே
இயலுவழி உடலாலும் உள்ளத் தாலும்
'வளமுமெமை வந்தணையும் வாழ்வ மென்று
வருந்துமுடல் உள்ளமிவை வதங்க வாட
அளவில்லா ஆசைமிக ஆர்வம் மேவ
அயர்வுணரா தலைந்து பயன்காணு வேளை
வளமுலைவந் தடையவழி விடுவே னல்லன்
வழியடைப்பன் எனஒருவன் வரினென் னாகும்?

ஆண்டுபல உடல்வாட உள்ளம் சோர
அலமந்த நெஞ்சுபல அளந்து மாழ்க
ஈண்டுநிலைத் திடலறியா நெஞ்சை இங்கே
இருத்தியென இருத்திநினை வொன்றே யாகி
மாண்டிடினும் எமக்குவழி இதுவே யென்ற
மனவுரத்தாற் கற்குமிளஞ் செல்வர் பெற்ற
ஆண்டிறுதித் தேர்வுமதிப் பெண்ணுக் கிங்கே
அதற்குரிய மதிப்பளித்தல் உண்டோ சொல்வீர்!

அரசியல்பே சிடுவார்க்(கு) அஞ்சி ஆன்ற
அடிப்படையாம் திறமைநெறி யகற்றி வைத்து
தரமிலதாம் மாவட்டம் என்று சோம்பித்
தருகின்றார் தனிமதிப்பு தரமற் றார்க்கே
பரபரென அவர்கழகம் நுழையுங் காலை
பயில்திறனாற் பலபடியும் உயர்ந்து நின்றார்
சிரங்கவியச் சிந்தைகெடச் சினம்மிக் கோங்க
சிந்துதிரக் கண்ணீர்தான் சீறி டாதோ?

திறமைமிகு இளைஞரை ஓரணியிற் சேர்த்தல்
சீர்வளங்கள் திரள்வழி வகுக்கு மிந்நாள்
அறமுமிது வன்றோ இங்கரிதிற் தேர்ந்த
ஆள்திறமை மிக்காசை அணியிலேற்றல்
பிறகுபல காரணங்கள் காட்டி யன்னார்
பின்னடையச் செய்துதரம் பிந்தி னாரை
சிறகுஒட்டிப் பறக்கவழி செய்வ தாலே
சேருமோ பெருமையெதும் அரசுக் கிங்கே?

இருநூற்று அறுபத்து மூன்று புள்ளி
இயன்றவர்க்கு நுழைவாயில் திறப்ப தில்லை
ஒருநூற்று எழுபத்து மூன்று புள்ளி
ஒய்வாகப் பெற்றவர்க்கு உண்டு வாழ்வு
பெருநூற்றின் மிக்க இடர் இந்த நாட்டைப்
பேதலிக்க வைத்திடுநாள் பிறப்ப துண்மை
வருங்காலத் தொளிர்சுடரை வதைக்குந் நாடு
வளங்கள்பல பெற்றுலகில் வளர்வ துண்டோ?

வி. ம. க.

---

# இலக்கியத்திறனாய்வு: சில கருத்துக்கள்

'ஈழநாடு' வாரமலரில் 'இலக்கியமும் விமரிசனமும்' என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று வெளியானது. அதில் காணப்படும் கருத்துகளுட் சில தெளிவு நோக்கி இங்கு கூர்ந்தாயப்படுகின்றன.

(1) கற்பனையை முதலாகக் கொண்டு சமுதாய வாழ்க்கையை அணுகி இலக்கியம் படைப்பதைவிட பொருள் முதலாகச் சமுதாயத்தை நோக்கிக் காண்பதை அப்படியே வெளிப்படுத்தும் (யதார்த்த)இலக்கியம் படைப்பதே சிறப்புடையது என்னும் பொருள்படக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது

### கவின்கலை

கவின்கலை என்னும் பொதுத் தலைப்புள். இலக்கியமும் அடங்கும், உணர்ச்சிப் பரிமாற்றத்தை நிலைக்களனாக உடையது இக்கலை. இது கலைஞனது பட்டறிவின் (அநுபவத்தின்) வெளிப்பாடே. கலைஞன் முழுக் கற்பனையிலாழ்ந்தோ அல்லது சமுதாயநிகழ்ச்சிகளிலிருந்து பெறப்படும் உரிப்பொருளை மையமாக வைத்துக் கற்பனையைப் படரவிட்டோ பெறும் பட்டறிவின் வழியே ஒரு படைப்புக்குக் கலைவடிவம் அளிக்கிறான். கலைஞனது உணர்ச்சி சுவைஞனிடத்துத் தோன்றுவதற்குச் சிறந்த உத்தியாகப் பயன்படுவதும் இந்தக் கற்பனையே. எந்த நிலையிலும் கற்பனையைத் துறந்த ஒரு படைப்பு இலக்கியமாவதில்லை. முழுக் கற்பனையில் பிறந்த இலக்கியத்துக்குப் பேராசான் மு. வ. வின் கி பி. 2000 என்னும் சிறு நவீனமும் எச். ஜி. உவெல்ஸ் எழுதிய 'நேரப்பொறி (TimeMachine) என்னும் நவீனமும் சிறந்த எடுத்துக் காட்டுகள். இத்தகைய தூயகற்பனையே புதிய கண்டுபிடிப்புகள், கருத்துகள் என்பன பிறப்பதற்கு முன்னோடி என்பதை நாம் மறத்தலாகாது.

வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்து இலக்கியம் வடிக்கப்படுமேயன்றி அந் நிகழ்ச்சிகளின் தொகுப்பே இலக்கியமாவதில்லை. நிகழ்ச்சித் தொகுப்பு வரலாறுஎனப்படும். உள்ளதை உள்ளபடி (யதார்த்தமாக) கூறுவது வரலாற்று இயல்பு பெறுமேயன்றி இலக்கியத் தன்மை எய்தாது. உள்ளபடி உரைப்போரை 'மெய்யியல்' வாதிகள் எனவும் இவர் பெயரிட்டுள்ளார். 'மெய்யியல்' மெய்விளக்கியல் என்பன ஒரு பொருட் சொற்கள். (Philosophy) என்னும் ஆங்கிலச் சொல் குறிப்பதையே இவையும் குறிக்கின்றன. இந் நிலையில் யதார்த்தவாதி எவ்வாறு மெய்யியல் வாதியாதல் கூடும் என்பது தெளிவாகவில்லை.

### இலக்கியம் கருவி

(2) ஒரு கருத்தைப் பரப்ப மக்களை ஈர்க்கும் எதனையும் தக்க கருவியாகப் பயன்படுத்தலாம் இலக்கியம் மக்களிடையே செல்வாக்கடைந்து வருவது கண்கூடு. ஆகவே அது பரப்புரைக் கருவியாக அமைவது புதுமையல்ல ஆனால் எகருறிக்கோளை யடைவதற்கு அது கருவியாக்கப்படலாம் என்பதே இன்று நாம் விடைகாண வேண்டிய கேள்வி கலை என்பது உண்மையின் தேடலே. இத்தேடலின் கருவியாகும்போது கலை விழுமியதாகிறது. இதன் பின்னணியில் மக்கள் நலநாட்டம் என்னும் சீரிய விளைவு தலைதூக்கி நிற்கிறது சார்புடைக் கோட்பாடுகளை மக்களிடையே பரப்புவதற்கு இது கருவியாக்கப்படும் பொழுது மக்கள் நலம் என்னும் உன்னத நோக்கு முதன்மை பெறாது சார்புடைக் கருத்துகளின் மக்களை ஊறவைத்தலே முதன்மை பெறுகிறது. சார்புடைக்கருத்துகள் பலவாகி, அவை வலியுறுத்தப்படும் போது இலக்கியம் என்ற போர்வையில் இக்கருத்துப்

(14-ம் பக்கம் பார்க்க)

★ 'கங்கை ஆதரன்'

## எமது சிறுகதை

# பேதங்கள்



தர்ம.ஞானி

பல வர்ணக் குரோட்டன் செடிகள் குதூகலிப்பது போல் குருத்து விட்டிருந்தன. காற்று மென்மையாக அவற்றோடு புகுந்து குளிர்ந்து வெளியே றிக்கொண்டிருந்தது.

பச்சை இளம் அரும்புகள் எங்களையும் வாழ வடுங்கள் என்பது போல் முதிர்ந்த இலை களிடையே தலையை நீட்டி அசைத்துக்கொண்டிருந்தன.

மழைத்துளிகள் மண்ணில் பட்டும் படாமலும் விழுந்தி ருந்ததால் 'புழுதி' வாடை அடித்துக்கொண்டிருந்தது.

''அச்சா பபா சாப் பிடுங்கோ'' என்ற அன்பு கலந்த குரல் அசரீரி போல் கேட்டது. குழந்தை 'ரஜி' சாப்பிட மறுத்து அடம்பிடித் துக்கொண்டிருந்தாள். தாய் சரளா ஏதோ பார்ட்டிக்குப் போவது போன்ற அலங்காரத் துடன் கையில் 'சில்வர்' தட் டொன்றுடன் அந்தக் குழந்தை 'ரஜிக்கு ஊட்டிக் கொண்டிருந்தாள்.

அதுமாலைவேளை, இரவுஉண வல்ல. இடையில் அளிக்கப் படும் ஆடம்பர 'ரிபன்'

''மம்மி! வாண்டாம்'' குழந்தை சாப்பிட மறுத்து அடம்பிடித்தாள்.

''நல்ல பபா! இன்னெண்டு, இன்னெண்டு'' என்று ஒவ் வொரு சாட்டுச்சொல்லி முழு உணவையும் தீர்த்துவிட்டாள் தாய்.

அந்த அழகிய வீட்டின் ஹோலினுள்ளே 'ரிபன்' உசா ரில் துள்ளிக்கொண்டிந்தது ரஜி.

''மம்மி மூண் பாப்பம்'' தாயைப் பிடித்து இழுத்து வெளியே கொண்டு வர முயன் ருள் ரஜி. நாலு மணிப்பொழு தில் மூண் ..ப்படி வரும்? சரளா ஏதோ சாக்குப்போக் குச் சொல்லிக்கொண்டிருந் தாள். இறுதியில் 'பற்றரியில்' இயங்கும் விமானத்தை 'ஸ்ராட்' செய்து நிலத்தில் விட்டாள், அது 'ரீ! ரீ!' சத்த முடன் சுற்றிச் சுற்றி ஓடியது. ரஜியும் அதைச் சுற்றிச் சுற்றி ஓடிஞள்.

''அம்மா''... ஆழமான அடித்தளத்தில் இருந்து வந்த ஒரு குரல் 'ஸ்ரீரியோ' இசையை ஊடுருவி சரளாவின் காதில் விழுந்தது. அது அவ ளுக்குப் பழக்கப்பட்ட குரல், காலையில் கேட்கும் அந்தப் பெண்குரல். ஆனுல் காலையில் கேட்கும் அந்தப் பெண்குரல் இன்று மாலையில் கேட்டது. 'அபா'வைகேட்காது விட மனமின்றி 'ரீயூனிங்கை'க் கூட்டி விட்டு வாசலுக்கு வந் தாள் சரளா.

''என்ன வள்ளியம்மை! விடிய வரேல்லே. வளவுக்கை குப்பை கூடிட்டுது'' சரளா வின் அதிகாரக் குரல் ஒலித் தது.

'அம்மா' என்ற குரலுக் குரிய அந்த வளவு கூட்டும் 'வள்ளியம்மை' நின்றுகொண் டிருந்தாள் சுவரில கூடக் கைபட்டால் துடக்குப்போல் தூர வைத்தே கேள்வி எழுப்பி னுள் சரளா. அவளுக்குப்பக் கத்தில் ஒரு குழந்தை நின்று கொண்டிருந்தது. மூக்குச்சளி வடிந்து கொண்டிருந்தது. ஆண்டாண்டு காலம் எண்ணை காணுத பரட்டைத்தலை. ஒரு சின்னச்சட்டை சர்க்கரை மூடைச்சாக்கிலே தைத்தது போன்ற நிறம், அது விரலைச் சூப்பி எச்சிலை பொச்சடித்தது.

''இல்லையம்மா! காலத் தாலைமழை தூறிச்சுது அது தான் வரேல்லே... இப்பசெய்து முடிச்சிடுவேன்...'' குழைந்து கூனிக்குறுகி பதிலளித்தாள் வள்ளி.

''மழை, வெய்யில் ஞாயம் எல்லாம் இங்கை செல்லாது. விளல் கதை கதையாமல் இனி மேல் ஒழுங்காக வரோணும் விளங்கிசசே...'' - சரளாவின் குரல் சன்னமாக வெளிப்பட் டது. அவளின் கண் வள்ளி யின் அருகில் நின்ற அந்த சிறிய உருவத்தையும் சாணத் தவறவில்லை.

''உதார்! உன்ரை கடை சியே?''

ஓமம்மா! இதுதான்கடைசி- லச்சுமி! வீட்டை நிண்டா மற்றதுகளை இருக்க விடாது. அதுதான் கையோடை கூட் டியந்தனுன்.

''சரி! சரி! போய் வேலை யைப்பார்'' சரளா வெறுப் போடு பதிலளித்தாள்.

காற்றுக்குத் திரைவிலகிய போது 'ஹோலை' நோட்ட மிட்டன லட்சுமியின் கண்கள் ரீரீ சத்தத்துடன் ஓடிக் கொண்டிருந்தபிளேன் அவள் கண்களினுள்ளே ஒரு வியப் பைக் கொடுத்தது. அதனைச் சுற்றி ஓடிக்கொண்டிருந்த ரஜியையும் கண்டாள், ரஜியும் லட்சுமியைக் காணத்தவற வில்லை.

ரஜிக்கு லட்சுமியின் உடுப்பு, சளி வடியும்முகம் அனைத்துமே ஆச்சரிய மூட்டியது. தாயின் கையை இழுத்து, இழுத்து தொங்கித் தொங்கி வெளியே பார்த்தது. சரளாவுக்கு ஆத்தி ரமாக இருந்தது.

'சரி வள்யளிம்மை, நீ போய் பின்னலை கூட்டுமாறு வைச்சி ருக்கு, கடகமும் இருக்கு வேலையைப்பார். நான் பபா வுக்கு இராச்சாப்பாடு சரிப் பண்ணேணும்'' என்றவள்படீ ரென்று கதவைச்சாத்திஞள். சரளா. கதவைச் சாத்திய விதத்திலேயே வெறுப்பு பிரதி பலித்தது.

வள்ளியம்மை லட்சுமியை இழுத்துக்கொண்டு கோடிப் பகுதிக்குச் சென்றபோது லட் சுமியின் காதில் அந்த 'ரீ! ரீ' சத்தமே எதிரொலித்துக் கொண்டிருந்தது அந்தப்பிஞ்சு மனம் அது என்னஎன்பதையே எண்ணி மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தது.

''அம்மா, அதென்னம்மா அந்த வீட்டுக்கை ஓடினது'' -வியப்புடன் கேட்டது வள்ளி யம்மைக்குப் புரியவில்லை.

''எது புள்ளை?''

''ரீ! ரீ! எண்டு சிவப்புச் சிவப்பா...மின்னி; மின்னி!...'' வார்த்தைகளை முடிக்குமுன்னே வள்ளிக்கு விளங்கிவிட்டது.

''அது ஏரோப்பிளேன். மேலை பறக்கும் நீ பாத்திருக் கிறியே!'' என்ருள்.

''அது பெரிசெல்லோ. எப் பிடி இவை வீட்டுக்கை வரும்? இது சின்னனெல்லவோ?...''

''இது சின்னன்தான். ஆனுல் பெரிசும் இப்படித்தான் இருக் கும். ஆனுல் இதை வீட்டுக்கை வைச்சுவிளையாடலாம். சும்மா வடிவா இருக்கும்'' தாய்க்குப் பிள்ளையின் உள்ளம் புரியா மலா இருக்கும்.

கதையை வேறு பக்கம் திருப்ப முயன்ருள். முடிய வில்லை. லட்சுமி கேட்டுக் கொண்டே இருந்தாள்.

''நாங்கள் வாங்கேலாதே? நாங்கள் வைச்சிருக்கப் படாதே...?''

''கன காசு வரும் மோனே! காசிருந்தா எல்லாம் வாங்க லாம், வீட்டுக்கையும் வைச் சிருக்கலாம். காசிருந்தா என்ன தான் ஏலாது?''

வள்ளியம்மை தன்னுடைய வேலையில் தீவிரமாக ஈடுபட் டாள்.

●

குருகுமணல் மேட்டில் மணல் வீடுகள் சின்னஞ் சின் னஞகக் கட்டப்பட்டிருந்தன லட்சுமியும் ரஜியும் மணல் வீடு கட்டி விளையாடிக்கொண் டிருந்தனர். லட்சுமிக்கு உள் ளுக்குள் பயமாக இருந்தது. ''உன்ரை அம்மா கண்டா மணலிலை வீடு கட்டிறதுக்கு அடிக்காவா?'' -லட்சுமி கேட் டாள்.

''சீச்சீ! மம்மி டின்னர் செய் யிரு. நான் இரகசியமா வந் திட்டன், அவ காண மாட்டா...''- ரஜி பதிலளித் தாள்.

''அதென்னடி டின்னர்?'' பாவம், லட்சுமி! பரிதாபமா கக் கேட்டாள். ரஜி கையிலே தட்டிச் சிரித்ததுதான் மிச்சம். கதையோடு கதையாக இருவ ரும் மணல் வீடு கட்டுவதில் கண்ணுக இருந்தனர்.

மணல் வீடு கட்டுவதில் ஏழைக்குழந்தை லட்சுமி கெட் டிக்காரிதான். மனத்தாலே மணல்வீடு கட்டி கடைசி யிலே கரைந்து போகின்ற கற்பனை வடிவங்கள்தானே ஏழைகளின் வாழ்வு. அந்த வகையிலோ என்னவோ லட் சுமியும் அழகாக மணல் வீடு கட்டிக்கொண்டிருந்தாள். ரீ!ரீ! பிளேன் மணற் குவியலின் ஒரு பக்கத்தில் கிடந்தது.

''நான்தான் வெண்டிட் டன்! என்ரை வீடுதான் பெரிசு'' இலையொன்றை மணல் வீட்டின் நுனியில் குத்திவிட்டு கைதட்டிக் கத்தி ஞள் ரஜி. ஆனுல் மிகஆறுத லாக அழகாக மணலில் ஒரு கோயில் போல் கோபுரம் கட் டிஞள் லட்சுமி. சுற்றி மணை லில் அணையும் போட்டாள்.

''என்ரை கோயில் எப்பிடி! டும்; டும்! பீ பீ!'' என்று தான் கட்டிய மணல் கோயிலில் பூசை செய்யத் தொடங்கி விட்டாள் இலட் சுமி. ரஜியும் ஓடி ஓடிப்போய் அருகிலிருந்த மரங்களில் பூப் பிடுங்கிவந்து பூசை செய்து விளையாடிஞள். பிஞ்சு மனங் கள் இரண்டும் குதூகலித்து மகிழ்ந்து கொண்டிருந்த வேளை— எங்கிருந்தோ பேரிடி யாக ஒரு சத்தம் கேட்டது

''ரஜி! ...''

இரண்டு குழந்தைகளும் திரும்பிப்பார்த்தன சரளா வேகமாக வந்துவிட்டாள். வெறி பிடித்தவள் போல் சிறிஞள் கால்கள் மணல் வீட்டைச் சிதறின 'பூஜைக்கு வந்த மலர்கள் நசுங்கின. இந்தச் சத்தம் வள்ளியையும் உலுக்கிவிட்டது. வள்ளி ஓடி வந்தாள். தன் குழந்தை ஏதும் செய்துவிட்டதோ என்ற ஏக்கம். சிதறிக் கிடந்த மணற் கோயில் -- காலில் நசுங்கிய பூக்கள்-- போர்த்துக்கீசர் கால இடிந்த ஆலயக் கோலங்கள்.

சரளா ரஜியின் கையைப் பிடித்து அதட்டிஞள். ரஜி அசையவில்லை.

''மம்மி! ஏன் கோவிக்கி றேங்க?''

''பபாவுக்கு லெட்சுமி வேண்டாம் வாங்கோ வீட்டை போகலாம்'' கையைப்பற்றி அன்போடு தலையைவருடிஞள்.

ரஜியின் சட்டையிலிருந்த மணலைத் தட்டிவிட்ட சரளா வுக்கு வள்ளிவந்து நின்றது கண்களில் பட்டது.

''வள்ளி...!''

''இனிமேல் 'இதையெல் லாம்' இங்கை கூட்டிவராதை விளங்கிச்சே?''

வள்ளி தலையசைத்தாள். ரஜியை இழுத்தபடி நடந் தால் சரளா. ரஜி கேட்டது வள்ளியின் செவியிலும் கேட் டது;

''மம்மி! ஏன் லட்சுமியை இங்கை கூட்டிவரக்கூடாதா?''

சரளா சொன்னது வள்ளிக் குக்கேட்டது ஏன் லட்சுமிக் கும் கேட்டது,

''பபா, அதுகளெல்லாம் கூடாத ஆட்கள்! அந்தக் கறுப்பு லட்சுமியோடை சேர்ந்தா நாங்களெல்லாம் கறுப்பாப் போயிடுவம் பொல் லாத வருத்தமெல்லாம் வரும். பிறகு பபாவும் லட்சுமியைப் போல கறுப்பாயிடும். அதுக ளோடை சேர்ந்தா 'சொக்கா, கொண்டாற 'அங்கிள்' 'அன்ரி'யெல்லாம் பிறகு இங்கை வரமாட்டினம்''.

''ரஜிக்கு ஏக்கம் பிடித்து விட்டது. லெட்சுமியோடை சேர்ந்தா தானும் கறுப்பாகி விடுவோமா என்ற பயம் வாட்டியது.

வள்ளி லெட்சுமியின் கை யைப் பிடித்து இழுத்தபடி திரும்பினுள் லெட்சுமி கேட் டாள்-

''அம்மா! நாங்களெல்லாம் கறுப்பு அவர்களெல்லாம் வெள்ளை அதேனம்மா?''

''அது அப்படித்தான்''

லெட்சுமி மீண்டும் கேட் டாள்-

''நாங்கள் அவையளோடை சேர்ந்தா அவை கறுப்பாகிற மாதிரி எங்களில் அவையிலை இருக்கிற வெள்ளை நிறம் வராதாம்மா?''

வள்ளிக்குப் பதில் சொல்ல முடியவில்லை. பதிலுக்குக் காத்து நிற்கும் அந்த ஏழைக் குழந்தையின் கேள்வி நடந்து சென்ற சரளாவின் செவியி லும் கேட்டது.

[யாவும் கற்பனை]

## ★ ஒலிம்பிக் தங்கவிருது

ஒலிம்பிக் பந்தயத்தில் வழங்கப்படும் தங்கவிருது களுக்கான மதிப்பு சுமார் 3000 ரூபாய் மட்டில் தான் இருக்கும் இவ் விருதில் 90 சதவீதம் வெள்ளி.

## ★ பொற்கோயில்

சீக்கியர்களின் புனித ஸ்தலமான பொற்கோயி லில், விக்கிரகங்களோ, சிலைகளோ இல்லை. இங்கு அவர்களது புனித நூலையே வணங்குகிறூர் கள் மதகுருமார்கள் போதனைகள் செய்வர்.

-சச்சி

## வையஞ்செழித்திட...

காரிருள் தன்னை நீக்கக்
கதிரொளி வேண்டு மிந்த
ஆரிருளகல நல்ல
அறிவொளி வேண்டு மின்று
பாரினிலுள்ள யுத்தப்
பயத்தினை நீக்க வல்ல
சீரிய தன்மையுள்ளார்
செகத்தினி லெங்கேயுள்ளார்?

அரசினர் தேடுகின்ருர்
அறிஞரும் தேடுகின்ருர்
உரமுடை யார்கள் தாமும்
உலகெலாந் தேடுகின்ருர்
திரமுடன் யுத்தபீதி தீர்ந்திட
வல்லார் தம்மைக்
கரமெலா முயர்தி மாந்தர்
கணமெலாந் தேடுகின்ருர்!

சண்டையிலமைதி யில்லை.
சாவினிலமைதி யில்லை
மண்டைகளுடையும் போது
மாந்தர்கள் மகிழுவாரோ?
கண்டனம் அணு நியூட்ரோன்
களங்களில் உலகம் சாம்பும்
திண்டிறல் கொண்டு வையம்
செழித்திடப் பாதை செய்வோம்!

மதியரசி திருநாவுக்கரசு

# வரதபண்டிதர் தந்த அருங்கொடைகள்

வரதராசர் வடமொழி தென்மொழி கைவந்த வைத்தியர். அவர் பல துறைகளிலும் பலதரப்பட்ட மக்களுக்கும் பலவாய பிரபந்த நூல்கள் செய்தவர். மக்கள் இலக்கிய வரிசையிலும் அவர் பல தனிப்பாடல்கள் செய்தவர். அவை யாவும் எழுதிவைக்கப் பெறுமல் எமக்குக் கிடையாமற் போயின.

போர்த்துக்கேயர் செய்த பெரிய அழிவுகளால் பெருங்கோயில்கள் பல தரை மட்டமான காலத்தில் உற்சவங்கள் செய்ய முடியாத சூழ்நிலையில், பக்திவயப்பட்ட மக்கள் தங்களுள் மூலைக்கு மூலை வழிபாட்டு முறைகளை வகுத்து வணங்கி வந்தார்கள்.

அந்த வகையில் அரசமரங்களினடியிலும், குளத்தங்கரைகளிலும், வயலோரங்களிலும் பிள்ளையார் வழிபாடு பெருமளவில் பெருகலாயிற்று மூத்த கணபதிக்குத் தோத்திரங்கள் சொல்லி, முடியோடு தேங்காயைப் படியிலடித்து, மூன்று முறை தலையிலே குட்டி, கை மாறிக் காதுகளைப் பிடித்தவாறு குந்தியெழும்பித் தோப்புக் கரணம் போட்டாலே போதும். பிள்ளையார் வழிபாடு மிகவும் இலேசானது; வரமும் பெருமளவில் கிடைக்கும் என்பது உறுதி.

தமிழ் நாட்டிலே இருமொழிப் பெரும் புலவரான சிவஞான சுவாமிகளின் மாணுக்கர்கள் வரிசையில் கச்சியபப முனிவர் கவிராட்சதர் அவர் செய்த புராணங்களின் வரிசை பெரிது. அவர் விநாயக புராணம் எனப் பெரிய அளவில் ஒரு புராணம் செய்துள்ளார் அவருக்குப் பல ஆண்டுகளுக்கு முன் வரதபண்டிதர் யாழ்ப்பாணத்தில் பிள்ளையார் கதையென்னும் மகத்துவமான நூலைச் சிறிய அளவில் பெரிய விடயங்களை அடக்கிப் பாடியுள்ளார்.

## 60 நாள் விரதம்

விநாயகர் விரதங்களுள் அவரைக் குறித்து இருபத்தொரு நாள்கள் அனுட்டிக்கும் விரதமும் ஒன்ருகும். கார்த்திகை மாதத்து அபர பக்கப் பிரதமை நாள் முதல், மார்கழி மாதத்துப் பூர்வபக்க சஷ்டி நாள் வரையுள்ள காலம்,இவ் விரதநாள்களாகும்.

இருபத்தொரு இழைகளைக் கொண்ட காப்பை ஆடவர் வலக் கையிலும், மகளிர் இடக் கையிலும் கட்டித் தம்மைக் காவல் செய்து மெய்யன்போடு அநுட்டிக்கும் விரதம் இதுவாகும்

மாலை நேரத்தில் மங்கலகரமாக ஆலயத்தில் பூசைகள் நடைபெற்ற பின், மக்கள் பக்தியோடு இருந்து கேட்பது இப்பிள்ளையார் கதை. காப்புச் செய்யுளிற் குறித்த வண்

## தமிழ்தந்த தாதாக்கள்

ணம் பிள்ளையாருக்கு நைவேத்தியமாக கரும்பு, இளநீர்'என், தேன், அவல் முதலியனவும் இன்னும் மோதகம் முதலியனவும் அங்கே குவியல் குவியலாகப் படைக்கப்பெறுவது வழக்கம்

## நாட்டுக்கோட்டைச் செட்டிமார்

ஒரு காலத்தில் நாட்டுக் கோட்டைச் செட்டிமார் யாழ்ப்பாணத்தில் இவ்விரதத்தை நல்ல முறையில் கொண்டாடினர்கள். யாழ்ப்பாணத்து நீராவியடியில் உள்ள பெரிய பிள்ளையார் கோயில் நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களுடைய உபயங்களிலொன்று. அவர்கள் இக் கோயிலுக்குப் பல நிலங்களைத் தரும சாதனஞ் செய்ததும் உண்டு.

பிள்ளையார் கதையில் தோத்திர ரூபமான செய்யுள்கள் முன்னும் பின்னும் உள்ளன. திருவாக்கும் செய் கருமம் கைகூட்டும் செஞ்சொல் பெருவாக்கும் பீடும் பெருக்கும் இந்த வகையில் அடியார்களை இவ்விரதம் உருவாக்கும் எனப் புலவர் வழிபாட்டுப் பயனை முற்பகுதியிலும் பாடியுள்ளார். இறுதியிலும் நூற்பயன் கூறுமிடத்திலும நான்கு செய்யுள்கள் நயம்படச் தந்துள்ளார். இப்பிறப்பிலே பொன்மிகும்,கல்வி புகும், புத்திரச் செல்வம் முதலியன வாய்க்கும் என்றெல்லாம் வரங்களைக் கூறிய வரதபண்டிதர், இந்தப் பிறப்பிலேயன்றி, இனிமேல் வரும் பிறப்புக்களிலும் வாழ்வு நல்ல பெருஞ் செல்வம் எய்திச் சிறக்கும் என்பர்.

## 500 அடிகளிலான அகவற்பா

பிள்ளையார் கதை ஏறக்குறைய 500 அடிகள் நீளமுள்ள அகவற் பாவாலானது எதுகை மோனை நயங் கனியப் பொருள் நனி சிறக்க வந்த பாடலில் போற்றித் திருவகவல் பகுதியும் ஒன்றுண்டு. அருள் புரிந்தருளும் அரசே போற்றி என்றெடுத்து, இருவினை துடைக்கும் இறைவனைப் போற்றுகின்றது. இதனையடுத்து வரும் வருகைக் கோவை அகர வரிசையில் செய செய என வெற்றிக் கீதம் ஒலிக்கிறது

வரதபண்டிதர் செய்த நூல்களுள் பிள்ளையார் கதையே முதலில் வந்தது எனக் கருத இடமுண்டு அதன் சிறப்பு நோக்கி இலங்கையில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பலர் அவ்வப்போது அதனை அச்சிட்டு மலிவுப் பதிப்பாக வெளியிட்டு வந்தனர். வரதபண்டிதர் தமது பிற்காலத்தில் செய்தது குருநாத சுவாமி கிள்ளைவிடு தூது என்னும் பிரபந்தமாகும்.

**க.சி.குலரத்தினம்**

இது காங்கேயன் துறையைச் சேர்ந்த கண்ணியவளை என்னுமிடத்தில் கோயில் கொண்டருளியுள்ள முருகப் பெருமான் மீது ஆனமீகக் காதல் கொண்ட நாயகியாகிய ஆன்மா கிளியைத் தூது விடுத்த பாவனையிலமைந்ததாகும். இந்நூல் பக்தி பூர்வமாக அமைந்துள்ள போதிலும் நூலின் இடையிடையே பிரதேசத்தில் அக்காலத்தில் புகழ் பூத்து நிலவிய பலஊர்களின் பெயர்களையும் வரிசையாகக் கூறுகிறது.

கிள்ளைவிடுதூது துள்ளிப் பாடும் வகையில் கலிவெண்பாவினுல் இருநூற்றுப் பதிஞறு கண்ணிகளைக் கொண்டமைந்துள்ளது நாயகி பாவனையில் நனைந்த புலவர் கிளியை விளித்துப் புகழ்ந்துரைத்துத் தூது செல்வதன் பெருமையைக் கூறுமிடம் பக்திபூர்வமானது முன்னர் தியாகப் பெருமானுன சிவபெருமானே சுந்தரமூர்த்தி நாயனுருக்காகத் தூது சென்றருளியதை நினைப்பூட்டுவர் இன்னும் கிருஷ்ணன, அநுமான்,நளன்முதலானேர் தூது சென்ற வைபவங்களையும் கூறுவர்.

காதலுற்ற மாதொருத்திக்காகத் தூது போவதால் வரும் புண்ணியத்தைப் புலவர் குறிப்பிட்டுக் கிளியைத் தூது சென்று காதலனுகிய குருநாத சுவாமியிடம் மாலை வாங்கி வருமாறு வேண்டுவர்.

காங்கேயன் துறையைஅடுத்துள்ள தெல்லிப்பழையைத் தெல்லிநகர் என்றும், அயலில் மாவை, பழை, வீமன்காமம், மயிலை, வயாவிளான், வறுத்தலைவிளான்? தையிட்டி, பலாலி முதலிய ஊர்களையும் கூறுவர்.

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா பாடியருளிய குமரகுருபரசுவாமிகள். முருகப் பெருமானின் திருவவதாரச் சிறப்புரைத்த வழியிலே வரதபண்டிதரும் பாடியுள்ளார் பாண்டியனை மன்னவன், மீனவன், பாண்டியன், தென்னவன், பஞ்சவன் என்றெல்லாம் புகழ்வர். இத்தகைய புகழ் பூத்த பாண்டியன் கோவலனை ஆராயாமற் கள்வன் எனக் கருதிக் கொலைத் தண்டனை விதித்தமையை ஆற்ருத கண்ணகி மதுரையை எரித்த வைபவத்தை ''திரிபுரத்தைச் சுட்ட சிவன்போற் சினந்து'' எனக்கூறுவர்.

மதுரைமாநகர் எரிந்தபின் நாட்டில் எழுந்த நோய்களால் மக்கள் வருந்தக் கண்டிரங்கிய சிவன், உமை இருவரும் நேசமுடன் தம்மைந்தனுக்குக் குருநாதன் எனத் திருநாமமிட்டு முடிபுனைந்து அனுப்பியருளினர். முருகனைக் கடம்பன், குறிஞ்சி வனநாதன் சீதை மருகன், குறவர்மகள் காந்தன், சேந்தன், முருகன் அமரர் முதல்வன் என்றெல்லாம் போற்றும் புலவர்,அவர் தெற்கே எழுந்தருளி வந்து, கோயிற்கடவை முதலிய பதிகளடங்கிய சூழலில் கோயில் கொண்டருளியமையைக் கூறுவர். ''அறங்கண்ணிய பெரியோர் ஆதரித்துப் போற்ற விளங்கண்ணிய வளையில் என்றும் பிறங்கணியாய் உற்றுறையும் நாதன், உலகந் தொழுநாதன், கொற்றமிகு நாதன் குருநாதன்'' என்று காதல் வயப்பட்ட புலவர் தன் ஆன்ம நாயகனுக்குத் திருநாமங்கள் சூட்டிப் போற்றுவர்.

## இரத்தினேசுவர ஐயர்

தாமே ஒரு பிராமணுதல் கோயிற் பூசைமுறைகளை நன்கறிந்தவராதலால், வரதபண்டிதர், '' பூசாரியார்கள் புனிதப் புனலாட்டி' ஆசாரஞ் சேர்த்துப்'' பூசை செய்யும் முறைகளையெல்லாம் அடுக்கடுக்காக அருமையாக ஆகம விதிகள் தவருமல் இத் தூதுப் பிரபந்தத்தில நுணுக்கமாகக் கூறுவதை அறியலாம். பறங்கியால் எங்கள் பாரம்பரியம் பட்டழிந்த வேளையில் வரதபண்டிதர் வரன் முறையைக் காத்துத் தந்த பிரபந்தம் இது இப்பிரபந்தத்தின மிகப் பழைய பதிப்பையும், அதனைத் திருத்தித் தாம் 1921ம் ஆண்டிற் பதித்த பதிப்பையும் வரத பண்டிதர் மரபில் வந்த இரத்தினேசுவர ஐயர் அவர்கள் தமது இறுதிக் காலத்தில் எமக்குத் தந்துதவினர்கள்.

---

கூட்டம் நிரம்பி வழிந்த ஒரு பஸ்ஸில் தன் நாயுடன் ஏறிய ஒரு பெண் கண்டக்டரிடம ''என் நாய்க்கும் நான் டிக்கட் வாங்கியிருக்கிறேன், அதற்கும் மற்றபிரயாணிகளைப்போல சீட்டில்உட்கார உரிமை உண்டு தெரியுமா?'' என்று தகராறுசெய்தாள். கண்டக்டர் அது சரி. ஆனுல் மற்ற பிரயாணிகளுக்கு எப்படி சீட்டில் தங்கள் கால்களை வைக்க உரிமையில்லையோ அதுபோல உன் நாய்க்கும் சீட்டில் கால்வைக்க உரிமை இல்லை அதைப் புரிந்துகொள்'' என்றுர். பஸ் முழுவதும் 'கொல்'என்று சிரிப்பு எழுந்தது.

—ராணி

---

# புதிய புத்தகம்

## நூல்: 'இராசசேகரம்'

[வைத்திய நூல்]

ஆசிரியர்: வைத்திய கலாநிதி க. பாலசுப்பிரமணியம்

வைத்திய மாமேதை பிரபு பெரிய பரிகாரியார் வை.ஆறுமுகம்பிள்ளை அவர்கள் சில மூலிகைகளின் கஷாயங்களைக் கொண்டு தனது வைத்திய நுட்ப அறிவினுலும் ஆற்றலினுலும் அநேக நோய்களைக் குணமாக்கிய சித்தியுடையவர் என்பது முதியோர் கூற்று.

பல நூற்ருண்டுகாலமாகப் பெரியபரிகாரியார் குடும்பச் சொத்தாகக் காப்பாற்றி வந்த வைத்திய முறைகளை இக் குடும்பத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி க பாலசுப்பிரமணியம் அவர்கள் அநுபவ ரீதியாகப் பாவித்துவரும் பயனுள்ள அநேக குடிநீர் வகைகளைத் தொகுத்து 'இராசசேகரம்' என்னும் சந்ததி நாமத்துடன் பெரியபரிகாரியார் ஞாபகார்த்த சித்த வைத்திய சங்கத்தின் ஆதரவில் வெளியிட்டுள்ளார்.

இருபதாம் நூற்ருண்டிலே மேல்நாட்டு விஞ்ஞானிகள் பலர் நம்நாட்டிலுண்டாகும் சில மூலிகைகளை ஆராய்ச்சி செய்து அவற்றின் அருங்குணங்கள் நிரூபிக்கப்பட்டு பின் நவீன வைத்தியத் துறையில் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக மேல் நாட்டு வைத்திய ஆராய்ச்சியாளர்களால் மூலிகைகளைச் சேர்த்து மருந்துகள் தயாரிக்கப்பட்டு வைத்தியத்துறையில் பாவிக்கப்பட்டு வருகின்றன.

விஞ்ஞான முறையில் தாயாரிக்கபபட்ட இரசாயன மருந்துகளிற் சில தீய பக்க விளைவுகளை பின் விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை. ஆனுல் நமது நாட்டில் மருந்து பாக விதிப்படி தயாரிக்கப்பட்ட மருந்துகளால் எவ்வித தீமைகளையும் உண்டாக்காது.

உலக சுகாதார தாபனமும் கி.பி. 2000 ஆண்டளவில் உலக மக்கள் அனைவருக்கும் அடிப்படைச் சுகாதார வசதிகள் ஏற்படுத்தவேண்டுமென்ற கொள்கையை நிறைவேற்றுவதற்கு மாற்று மருத்துவ முறைகளாகிய, பெருமளவில் மூலிகைப்பிரயோகத்தை அடக்கியுள்ள சித்த, ஆயுர்வேத யூநாநி. சீனமருத்துவ முறைகளை அபிவிருத்தி செய்து வருகிறது. மேலும் வைத்திய சம்பந்தமான கருத்தரங்குகள், மாநாடுகள் நடத்துவதன் மூலம் பண்டைய வைத்தியக் கலையை உலகின் பலபாகங்களிலும் பரப்பியும் வருகின்றது. இந்த நிலையில் நமது பூமியிலே சுலபமாகவும் மலிவாகவும் பெறக்கூடிய மூலிகைகளின் உதவியால் நாமனைவரும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு இந்த நூல் ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நூலில் மாதர்கள், கர்ப்பிணிகள், பாலர், முதியோர் ஆகிய அனைவருக்கும் ஏற்படக்கூடிய ரோகங்களுக்கு தாங்களே சுலபமாகத் தயாரித்துப் பாவிக்கத்தக்க முறையில் மூலிகைகளின் நிறை, தண்ணீரின் அளவு, குடிக்க வேண்டிய பிரமாணம்,காலம், துணை மருந்துகள் உட்பட உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆகவே இந்த வைத்திய நூல் தமிழ் மக்கள் ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்க வேண்டியது முக்கியம். மேலும் வைத்திய மாணவர்களுக்கும் இன்றியமையாத புத்தகமாகும்.

டாக்டர் ரி. சுப்பிரமணியம்

(முன்னுள் விரிவுரையாளர் இலங்கா ஆயுர் வேத வைத்தியக்கல்லூரி யாழ்ப்பாணம்)


வெளிநாடு செல்வதற்கு

* விமான டிக்கட்
* அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை (வங்கியின் கட்டணத்தில்)
* விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக் கொடுக்கப்படமாட்டாது. இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை.)

இன்றே நாடுங்கள்

மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways) பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154

# 'சிவ சிவா! யேசுவை மறப்பேனு?'

**1658,** ஆவணி 12ஆம் திகதி.

தெல்லிப்பளையில் தமது முதலாவது சமயப் பிரசங்கத்தை பால்தேயஸ் நடாத்திஞர். ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றியபோது ஆழமாக வேரூன்றி நிலைத்துவிட்ட சைவ சமயிகளையும், நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட கத்தோலிக்க சமயிகளையும் புரட்டஸ்தாந்து சமயத்திற்கு அத்திவாரமிட வந்திருக்கும் குரு பால்தேயஸ் எதிர்கொள்ளநேரிட்டது. வடமாகாணத்தில் இலங்கையின் ஏனைய பகுதிகளைவிட கத்தோலிக்க மதம் நன்கு நிலைபெற்றிருந்தது. நாற்பது வருடங்களாகப் போர்த்துக்கீசரின் ஆதிக்கம் யாழ்ப்பாணத்தில் நிலைத்திருந்த காலவேளையில் நாற்பது கத்தோலிக்ககுருமார்கள் இப்பிரதேசத்தில் சமயப் பிரசாரங்களைக் கிராமங்கள் தோறும் செய்தனர். நாற்பது கத்தோலிக்க குருமார்கள் பிரசார வேலைகளை மேற்கொண்ட பிரதேசத்தில் பால்தேயஸ் தனித்து நின்று கடினமான சூழ்நிலையிலேயே தமது மதப் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

ஒல்லாந்தரின் படையெடுப்பு வெற்றிகரமாக முடிந்துவிட்டது. இப்போது இன்னொரு படையெடுப்பு இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டது. இந்துக்களையும் கத்தோலிக்கர்களையும் மதம் மாற்றிப் புரட்டஸ்தாந்து சமயத்தினை யாழ்ப்பாணத்தில் நிலைநிறுத்தும் பாரிய பொறுப்பு பால்தேயஸிடம் விடப்பட்டது. யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்த 159 கிராமங்கள் 34 தேவாலயங்களின் பொறுப்பில் விடப்பட்டிருந்தன. போர்த்துக்கீசர் வசமிருந்த இத்தேவாலயங்களும் பாடசாலைகளும் ஒல்லாந்தரிடம் கையளிக்கப்பட்டமை பால்தேயஸின் முயற்சியை ஓரளவு இலகுவாக்கியது.

பால்தேயஸ் வலிகாமம் பிரிவிலிருந்த பதினைந்து தேவாலயங்களில் தெல்லிப்பளைத் தேவாலயத்தைப்பிரதான நிலையமாகத் தெரிந்தெடுத்துக் கொண்டார். தெல்லிப்பளைத் தேவாலயம் நன்னீர்க்கிணறுகளுடன் கூடிய தோட்டங்களின் நடுவே அகன்றபரப்பில் அமைந்திருந்தது பிரார்த்தனை மண்டபமும் பிரசங்கியாரி இல்லமும் அருகருகே அமைந்திருந்தன.

பால்தேயஸின் முதல் கூட்டத்திற்கு அவர் எதிர்பார்த்தளவு மக்கள் கூடவில்லை. எனினும் தேவாலயத்தில் கூடிய மக்கள் பால்தேயஸின் பிரசங்கத்தால் கவரப்பட்டிருந்தார்கள் என்பதை பால்தேயஸ் புரிந்துகொண்டார்

அன்று மாலை யாழ்ப்பாணக் கோட்டையில் கொமுசாறி வன்கோயனை அவர் சந்தித்தார்.

''தெல்லிப்பளைப் பிரசங்கம் எப்படி இருந்தது?'' என்று வன்கோயன் கேட்டான்.

''தெல்லிப்பளைப் பகுதியில் வாழும் மக்கள் கூர்மையானவர்கள். கபடமற்றவர்கள் அடிக்கடி புதுமையானகேள்விகளை என்னிடம் கேட்டார்கள். எங்கள் சமயத்தை அம்மக்கள் முழுமனதுடன் ஏற்றுக்கொண்டிருக்கிறுர்கள்...'' என்ருர் பால்தேயஸ்.

''மற்றத் தேவாலயங்கள் எப்படியிருக்கின்றன?''

''தெல்லிப்பளையிலிருந்து அரைமணி நடைத்தூரத்தில் மல்லாகம் தேவாலயம் உள்ளது அது இன்னமும் கட்டிமுடிக்கப்படவில்லை. தொடர்ந்து கட்டிமுடிக்கப்பணித்திருக்கின்றேன். அங்குள்ள பாடசாலையில் 400 பிள்ளைகள் படிக்கின்றனர் ... ஒன்றேமுக்கால் மணிநேர நடைத்தூரத்தில் மயிலிட்டியில் கடற்கரையில் ஒரு தேவாலயம் இருக்கிறது. அற்புதமான சூழலில்உள்ளது முருகைக் கற்களால் கட்டப்பட்டிருக்கின்றது. மீன், நண்டு, இறால் என்பனஅதிகம் ஏராளமான முயல்கள் சுற்றுடலில் உள்ளன தெல்லிப்பளையிலிருந்து இருமணிநேர நடைத்தூரத்தில் அச்சுவேலித்தேவாலயம் அமைந்திருக்கின்றது. அதில் ஒரு பகுதி கட்டிமுடிக்கப்படாமலிருக்கிறது. அங்குள்ள ஒரு பிரமுகர் அதனைக் கட்டித்தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறுர் அச்சுவேலிக் கிராமம் காட்டின் நடுவே அழகாக அமைந்திருக்கிறது. இங்கு முயல்களும் மான்களும் ஏராளமாகவுள்ளன காட்டுப் பன்றிகளுமுள்ளன உடுவிலிலும், வட்டுக்கோட்டையிலும் இரு தேவாலயங்களுள்ளன, வயல்களின் நடுவே வட்டுக்கோட்டைத் தேவாலயம் இருக்கிறது. சங்கானை. பண்டத்தரிப்பு ஆகியவிடங்களிலும் தேவாலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன... மானிப்பாயில் 2000மக்களைக் கொள்ளத்தக்க பெரியதொரு தேவாலயம் இருக்கிறது. இத்தேவாலயத்திற்கு முன் ஒரு குளமிருக்கிறது அதன் அருகில் முன்னர் ஒரு சைவக்கோயில் இருந்திருக்கிறது யாழ்ப்பாணப்பட்டினத்திற்கு அருகில் வண்ணர்பண்ணையில் ஒரு தேவாலயம் உள்ளது. மிகச்சிறியது ''



பெண்கள் மோர் கடையும் காட்சி

# 14

''நல்லூரில் ஒரு தேவாலயம் அமைப்பதற்கு முயலவில்லையா?'' என்று வினவிய வன்கோயனை பால்தேயஸ்நிமிர்ந்து பரர்த்தார் சற்றுநேர அமைதியின் பின்னர் தொடர்ந்தார்:

''நல்லூரில் பெரிதாக ஒரு தேவாலயத்தை அமைக்க முயன்ருேம். பழைய பெரிய சைவக்கோயில் ஒன்றிருந்த விடத்தைப் போர்த்துக்கீசர் இடித்துத் தரைமட்டமாக்கியிருக்கிறுர்கள். அவ்விடத்தில் தேவாலயத்தை அமைக்க முயன்ருேம். ஆனல் இரவோடிரவாக அவ்வூர் மக்கள் அவ்விடத்தில் அமைக்கப்படும் கட்டிடத்தைத் தகர்த்துவிடுகிருர்கள் இப்போது மண்ணினுலும் கிடுகுகளினுலும் ஒரு சிறிய தேவாலயத்தைக் கட்டியிருக்கிறேன். காவலுமிட்டிருக்கிறேன்...''

''நமது முதலியார் பூதத்தம்பி பாதுகாப்பளிக்கவில்லையா?''

''நல்லூர் சைவமக்களின் கோட்டமாகவிருக்கிறது. அவர்களை மதம் மாற்றுவதில் சிரமங்களுள்ளன. நெற்றியில் சாம்பலைப் பூசிக்கொண்டு பெரிதாகச் சந்தனப் பொட்டுமிட்டு அவர்கள் எங்களை அலட்சியமாகப் பார்க்கிறுர்கள்- பூதத்தம்பியும் சிறந்த சைவனுக இருக்கிறுர், கிறிஸ்தவனை முதலியாராக இருக்கலாம் என நாம் சட்டம் கொண்டு வரவேண்டும்...''

''அதில் சிரமமிருக்கிறது... என்ருன் வன்கோயன். ''மத விஷயத்தில் நாம் அளவோடு தலையிடவேண்டும். மனித உணர்சசிகளில் மிகவிரைவாகக்கொழுந்து விட்டெரியக் கூடியது மத உணர்வு நல்லூரிலும் சரி வேறிடங்களிலும் சரி இவ்விஷயத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும்...''

''அதற்காகப் பாவத்தில் விழுந்தழுந்தும் மக்களைக் கரையேற்ற வேண்டாமா?''

''பாவத்தில் விழுந்தழுந்தும் மக்களா?''

''விக்கிரக வழிபாடுகளும் பேய்வழிபாடுகளும் இந்த மக்களிடம் இன்னமும் இருக்கின்றன. மந்திரம் தந்திரங்களில் நம்பிக்கை வைத்திருக்கிருர்கள்...''.

''சைவர்களிடம் மட்டுந்தான் இருககின்றனவா? இல்லை வெளியில் புரட்டஸ்தாந்து சமயத்தவனுகவும் உள்ளுக்குள் சைவனுகவும் வாழ்பவர்களைநான்கண்டிருக்கிறேன். ஒருஇடத்தில்ஒருஏமாற்றைப் பார்த்தேன். வைரவ சூலம் பார்த்திருக்கிறீர்களா?'

''ஆம் ... கிராமங்கள் தோறும, மரங்களின் கீழ் நட்டுவைத்து வழிபட்டார்கள்...''

''அந்த வைரவ சூலத்தை ஒருவன் வழிபட்டான். என் குதிரையின் காலடிச் சத்தம் கேட்டதும் அந்த வைரவ சூலம் சிலுவையாக மாறிய அதிசயத்தைக் கண்டேன். எப்படியென்று அதிசயப்படுகிறீரா? அந்தச் சூலம் சிலுவையாகவும் சூலமாகவும் மாறக்கூடிய அமைப்பில செய்யப்பட்டிருந்தது..''

பால்தேயஸ் வியப்புடன் வன்கோயனைப் பார்த்தார் அவருக்கு இருந்தாற்போல சிரிப்பு வந்தது. சற்றுப் பலமாக நகைத்தார்.

''எனக்கும் அப்படியொரு அனுபவம்... ஞாயிறு தேவாலயத்திற்கு ஒருபிரமுகர் வரவில்லை. சென்ற வாரம் ஏன் வரவில்லை என்று கேட்டேன். உடனே அவர், ''சிவசிவா யேசுவை மறப்பேனு?' என்ருர்''

வன்கோயன் புன்னகைத்தான்.

''இத்தலைமுறை கழிய வேண்டும்.. கிறிஸ்தவர்களாக மாறுபவர்களை விட கிறிஸ்தவர்களாகப் பிறப்பவர்கள் உருவாகும்போதுதான் இப்பிரதேசத்தில் எங்கள் மதம் நிலைக்கும்''.

''உண்மைதான் வடமராட்சிப்பகுதியில் மூன்று திருச்சபைகளும் பச்சிலைப்பள்ளியில் நான்கு தேவாலயங்களும் இருக்கின்றன பச்சிலைப்பள்ளிப்பகுதி மணற்பாங்கானது. வறண்டது நன்னீர் வசதி குறைந்தது. மக்கள் வறியவர்கள். கருவாடு, பனுட்டு. சிறிதளவு அரிசி என்பன இவர்களின் சாப்பாடு. யானைகளின் தொல்லை இங்கு அதிகம். வருடாவருடம் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் யானைகளால் அழிக்கப்படுகின்றன இந்தப்பிரதேசம் முன்னர் கண்டி மன்னன் இராஜசிங்கனின் எல்லைப்பகுதியாக விளங்கியது. இன்று சிங்களவர்கள் எல்லைப் பகுதிகளில் ஊடுருவிக் குடியேறுகிருர்கள்' அதனுல்தான் புலோப்பழையில் கட்டப்பட்டு வரும் தேவாலயத்தை பலமானதாகவும் சுற்று மதில்களை உயரமாகவும் கட்டி வருகிறேன் இப்பகுதியில் ஏராளமான பனைகளுள்ளன. அவை வீடுகள் அமைப்பதற்கு ஏற்றன. இங்கிருந்து சோழ மண்டலக் கரைக்கு அவற்றினை நாம் ஏற்றுமதி செய்ய முடியும். பனைமரங்கள் காய்க்கின்ற வேளைகளில் யானைகள் ஏராளமாக வருகின்றன' இப்பகுதி மக்களில் பெரும்பாலோர் இப்பனைமரங்களின் வருவாய்களிலேயே தங்கியுள்ளனர், பனைமரங்கள் அதிக பயன்பாடு உடையன. அதன் கழியிலிருந்து பனுட்டு என்று ஒரு வகைப் பாணி தயாரிக்கிருர்கள். ஒடியல் என்ற மா தயாரிக்கிருர்கள் பனையோலைகளால் வீடு வேய்கிருர்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?

கொழும்பு சென்று பயணச் சீட்டுக்களைப் பெறுவதில் உள்ள


★ தாமதம் ★ வீண் செலவு

ஆகியவற்றைத் தவிர்த்து யாழ். நகரிலேயே உங்கள் பயணச்சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் திரும்பிச் செல்லும் பயணச் சீட்டுகள் (Return Tickets) வைத்திருப்போரும் கொழும்பு செல்லாமல் தங்கள் ஆசனங்களை இங்கேயே பதிவுசெய்து கொள்ளலாம்.

FLY
To many parts of the world
at Unbeatable Rates

TFC
த பிறண்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
போன்: 23680

# கடல்கோட்டை



செங்கை ஆழியான்

# கடல்கோட்டை

7ம் பக்கத் தொடர்ச்சி)

மயக்கத்தைத் தரக்கூடிய கள் தயாரிக்கிறார்கள். சுவையாக இருக்கிறது ''.

''கோட்டைக்கு அருகில் இருக்கும் சுண்டிக்குளியில் சமயவேலைகள் எப்படியிருக்கின்றன?''

பால்தேயஸ் கவலையுடன் சிரித்தார் ''ரோமிற்கு அருகில் இருப்பவர்களே கிறிஸ்தவப் பற்றுக் குறைந்தவர்கள் என்பர் அதுமாதிரிச் சுண்டிக்குளியில் வாழ்பவர்கள் உள்ளனர். பெரிய தேவாலயக் கட்டிடம் இங்குண்டு. ஆனால் மக்கள் அக்கறை குறைந்தவர்களாகவும் உள்ளனர். இங்குள்ள பாடசாலையில் 400 பிள்ளைகளுள்ளனர். ஆனால் அவர்களிற் பலர் பெற்றோருடன் மீன்பிடிக்கச் சென்றுவிடுகின்றனர். பாடசாலைக்கு ஒழுங்காக வருவதில்லை...''

''இப்போது யாழ்ப்பாண அரசில் எத்தனை கிறிஸ்தவர்களுள்ளனர்?''

''தேவாலயங்களிலுள்ள பட்டோலைகளைப் பரிசீலனை செய்து பார்த்தேன். பனை ஓலைகளை எழுதுவதற்குப் பயன்படுத்துகிறார்கள். பனையோலைகளில் எழுதிவைத்திருக்கிறார்கள்... எனது கணிப்பின்படி 62,558 கிறிஸ்தவர்கள் உள்ளனர்...''

''யாழ்ப்பாணத்தில் சாதிமுறை மோசமானது'' என்றான் வன்கோயன்.

'உண்மைதான்... சாதிப் பாகுபாடு இங்குள்ளது. தொழில் அடிப்படையில் அவர்கள் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். வெள்ளாளரே சாதியில் உயர்ந்தவர்கள். காற்சட்டை அணிவதுபோன்று வேட்டி உடுத்துக்கொள்வார்கள். உடுத்துக்கொள்ளும்போது இடுப்பிற்கு முன் புறத்தில் மடியொன்று அமைத்து அதில் வெற்றிலை பாக்கு வைத்துக்கொள்வார்கள். எழுதுவதற்கு இரண்டு ஏடுகளையும் தம்முடன் எடுத்துக்கொள்வர். இடுப்பில் கத்தியும் சிலர் வைத்திருப்பார்கள். இவர்கள் பொறுமையுடையவர்கள், பிதற்றல்காரர்கள். தங்களைவிட மேலானவர்கள் இல்லையென வாதாடுவார்கள். ஏராளமான மாடுகள் இவர்களிடமுள்ளன. இவர்களின் வீடுகள் பெரியன. துப்புரவானவை நெலவயல்கள், தோட்டங்கள் என்பன இவர்களுக்குச் சொந்தமாகவுள்ளன. கிணறுகளிலிருந்து நீர் அள்ளுகிறாகள். பாலிலிருநது தயிர், மோர், வெண்ணெய் எடுக்கிறார்கள். தயிர் கடைவது மிகவும் நவீனமானது. கலியாணம், செத்த வீடு, திருவிழா என்பவற்றிற்கு வெகு ஆடம்பரமாகச் செலவழிப்பார்கள். பெண்கள் இளமையிலேயே திருமணம் செய்துகொள்வார்கள். பத்து அல்லது பதினொரு வயதில் திருமணம் செய்து பதின்மூன்று அல்லது பதினான்கு வயதில் தாயாகிவிடுவார்கள். இளமை மணம் கண்டிக்கத்தது. யாழ்ப்பாணப் பகுதியில் இளம் வயதுள்ளவர்கள் பெற்றோர்களின் சம்மதமின்றி ஒன்று கூடுவதற்குச் சம்மதிக்க மாட்டார்கள், இது மிகவும் புகழ்ச்சிக்குரியாதகும்.''

''சில. சுதேசியக் கிறிஸ்தவர்கள் இன்னமும் திருமணத்தின்போது தாலி கட்டிக்கொள்கிறார்களாமே?''

''ஆம்... அந்தப்பழக்கத்தைக் கைவிட அவர்கள் தயங்கிறார்கள். மாமிசம் சாப்பிடவும் தயங்குகிறார்கள். மாமிசம் சாப்பிட்டால் சாதியில் தாழ்ந்தவர்கள் எனக் கருதப்படுவார்களாம். இவர்களுடைய மூடநம்பிக்கைகள் சிரிப்பிற்கிடமானவை...'',

''எல்லா மக்களிடமும் மூடநம்பிக்கைகள் இருக்கின்றன '',

''உண்மை... ஆனால் யாழ்ப்பாண மக்களிடம் விசித்திரமான பழக்கவழக்கங்கள் இருக்கின்றன. ஒரு குடும்பத்தில் ஆண் குழந்தை பிறந்தால் தகப்பன், உலக்கை ஒன்றினை எடுத்துத் தனது வீட்டின் கூரையைப்பலமாகத் தட்டி எல்லோருக்கும் தெரிவிக்கிறான். அதனால் ஆண் பிள்ளைகள் கூரைதட்டிப்பிறந்தவர்காளாம். ஆடு குட்டிபோட்டால் இளங்கொடியை உமல் ஒன்றில் இட்டு ஆலமரம் ஒன்றில் கட்டிவிடுகிறார்கள். ஆடு அதிகம்பால்கறக்குமாம்.''

அவர்கள் பேச்சு வேறு விடயங்களுக்குத் தாவியது.

''கோட்டை எப்போது கட்டி முடியும்? ...'' என பால்தேயஸ் கேட்டார்.

' இன்னமும் இரண்டு ஆண்டுகளில் முடிந்துவிடும்... இந்தக்கோட்டை பத்தேவியாவிலுள்ள கோட்டையிலும் பார்க்கப் பெரியது. பன்ரகன் (ஐந்துகோணவடிவம்] அமைப்பினது. நாங்கள் இங்கு தடுத்து வைத்திருக்கும் போர்த்துக்கீசர்கள் கோட்டை அமைப்பதில் திறனுடையவர்களாக இருக்கின்றவா. இவர்களைத் தொடர்ந்து இங்கு கைதிகளாக வைத்திருக்க விரும்புகிறேன். அவர்களில் பலர் டச்சுக் கம்பனியின் சேவையில் சேர்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். அவர்களைத் தேர்ந்தெடுக்கவும் இருக்கிறேன். யாழ்ப்பாணக் கோட்டையில் ஐந்து பெரிய கொத்தளங்களும் 142 பீரங்கித்தளங்களும் அமையவிருக்கின்றன ஐந்து காவலரண்களும் இருக்கும். அகன்ற அகழி இருக்கும். ஏறத்தாழ பன்னிரண்டு ஏக்கர்பரப்பினை இது உள்ளடக்கியிருக்கும்.''

''பார்த்தேன்... இதுபெரிய கோட்டை தான். ஊர்காவற்றுறையில் சிதைந்து கிடக்கும் கடற்கோட்டையையும்திருத்தியமைக்கவேண்டும்......''

''கடற் கோட்டை மீண்டும் கட்டப்படவிருக்கின்றது. எண்கோணக்கோட்டையாக அதை அமைப்பதற்குக் கட்டிடக் கலை விற்பன்னர்கள் மாதிரிப் படம் சமர்ப்பித்துள்ளனர். அதற்கு ஹமன்கீல் எனப் பெயரிடவிருக்கிறேன். அதனைவிட ஆனையிறவில ஒரு கோட்டையும், இயக்கச்சியில் ஒரு கோட்டையும் கட்டப்படவிருக்கின்றன. வடகரையில் காங்கேசன்துறையிலும் பருத்தித்துறையிலும் இரு கோட்டைகள் கட்டப்படவிருக்கின்றன. பூநகரியிலும் ஒரு கோட்டை கட்டப்படவேண்டும். இவற்றோடு பல சுங்கத்துறைகளும் கட்டப்படவிருக்கின்றன. அராலி ஒரு முக்கியமான சுங்கத்துறையாக எனக்குப்படுகிறது... '' என்று விபரித்தான் வன் கோயன்.

வன்கோயன் சாணக்கியத்தை பால்தேயஸ் நன்கு அறிவார். ஒல்லாந்தரின் ஆட்சியை இலங்கையில் நிலைநாட்ட இப்பாதுகாப்பு அரண்கள் அத்தியாவசியமானவை தாம்

மாலை கவியத்தொடங்கியது. கோட்டையமைப்பதில் ஈடுபட்டிருந்தவர்கள் திரும்பிக்

[12ம் பக்கம் பார்க்க]




ஏழு பெண் எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும்

## தொடர் நவீனம்

# சிதைவுகளில் ஓர் உதிப்பு!




## எஸ்.ஸ்ரீரஞ்சனி

## 4

அடர்ந்து வளர்ந்து செழித்திருக்கும் கிளுவை மரங்கள் வேலியாக அமைந்த அந்த ஒற்றையடிப் பாதையூடாகத் தோட்டத்தை நோக்கி நடப்பது அவளுக்கு ஒரு சுகமாகத் தானிருந்தது. முதல் இரண்டு தோட்டங்களிலும் வேலைக்காகச் சென்றது ஏமாற்றமாகியதும் அல்லாமல் வடுக்களை மனதில் பதித்து ரணவேதனைக்குள்ளாகியது ஏதோ அபசகுனம் என மூன்றாவது தோட்டத்தைத் தேடியபோது ஆச்சி பலமாக எதிர்த்தாள்.

''பிரச்சனையை ஏனடி விலைக்கு வாங்கிறாய்?'' என அழுதுகூட மன்றாடிப்பார்த்தாள். ஆனால், ''பிரச்சனையைக் கண்டு ஏன் பயப்பட வேணும்? எதெண்டாலும் துணிஞ்சு எதிர்த்து நிற்கவேணும்'' என்ற மன உறுதியுடன் மகேஸ் புறப்பட்டாள் என்பதைவிட தினம் தினம் வீட்டில் நடக்கும்பிரச்சினைகளை, அப்புவின் திருக்கூத்துகளைப் பார்த்து மனம் சகித்திருக்கும் சக்தியற்றவளாகிப் புறப்பட்டாள் என்பதுதான் உண்மை.

தோட்டச் சொந்தக்காரர் இளையதம்பியருக்கு முன்பு நடந்தவிடயங்களை யாரோ அண்டி விட்டபோது அவளைத் தவிர்த்துக் கொள்ளத்தான் அவர் முயற்சித்தார். ஆயினும் கூலிதேடக் கஷ்டமான இந்தக் காலத்தில் தனக்கு அதுவரை சிரமம் கொடாத அவளுடைய நியாயமான உழைப்பை விட்டுவிட அவருக்கு மனம் வரவில்லை. இதனால் இந்த வாரம் எப்படியோ வண்டி ஓடுகிறது.

இந்தக் கூலி மட்டும் இல்லாமலிருந்தால் பணம் மட்டுமல்ல மனநிம்மதிகூட இருந்திராது நேரம் போவதே தெரியாமல் எப்போதும் சுறுசுறுப்பாக இருந்தால் தான் பிரச்சினைகளின் சுழல் ஓட்டத்திலிருந்து ஓரளவாவது தப்பலாம் முதல் நாள் இரவு தம்பி குமரன்வரப்போகும் ஏலெவல் டின்னருக்கு ஒரு பெல்ஸ் தைத்துத் தரச்சொல்லி அவளைக் கேட்டது அப்புவுக்குக் கேட்டதால் ஏற்பட்ட சண்டையை நினைத்தபோது கண்ணீர்தான் வந்தது.

''இவைக்குப் பிள்ளையளைப் பெறத்தான் தெரியுது. அவையின்ரை நியாயமான ஆசையளைப் பூர்த்தி செய்யவேணும் மன, உடல் வளர்ச்சிக்கு உதவவேணும் எண்ட எண்ணம் இல்லை''

போதுமான மனவளர்ச்சியும் பக்குவமும் ஏற்படும் வரை தாழ்வு மனப்பான்மையைப் போக்குவதற்கு உடையிலும் கவனம் இருக்கத்தான் வேண்டும்.

''எங்கையும் ஒடுங்கி ஒடுங்கிப் போறதிலைதானே சாதிக் கொடுமை வளருது'' என்ற நினைவில்—

''எங்களுக்கென்னடி போராட்டம்? இதுவும் இல்லாட்டி அடுப்பிலை பூனைதான் படுக்கும்'' என்று வைரவப்பிள்ளையரின்

'இவையளும் ஏழைத்தொழிலாளிகள் தானே! அன்றாட வயித்துப் பிழைப்புக்கு அல்லல் படுறவையளாயிருந்தும் எத்தனையோ வாழ்க்கைப் பிரச்சனைகளை எதிர் நோக்கிறவையளாயிருந்தும் எப்பிடி இவையள் இப்பிடிக் கும்மாளமிடுகினம்?' என்று சில வேளை பூதாகாரமாகப் பிரச்சனைகள் அவளை மிரட்டும் நேரங்களில் இவர்களை அவள் அதிசயமாகப் பார்ப்பதும் உண்டு.

இரவுப் போராட்டத்தின் விளைவால் ஆளுக்கு ஒரு மூலையில் சுருண்டுபடுத்து தலையணையைக் கண்ணீரால் நீராட்டிய தன் விளைவு காலையிலும் ஆகாரம் தேடமுடியாததால் எல்லோரும் தத்தம் பாட்டில் சென்றுவிட அவளும் பச்சைத் தண்ணீரால் வயிற்றை நிரப்பிக் கொண்டுதான் தோட்டத்திற்கு வந்திருந்தாள். வேலை செய்துகொண்டிருக்கும் போது களைப்பாக வந்ததால் இறைத்துக்கொண்டிருக்கும் 'மெசின' டியில்வந்து முகத்தைக்கழுவிக் கொண்டு ஆடுகால் மரநிழலில் சிறிதுநேரம் அமர்ந்திருந்தாள்.

தொடர்ந்து கொண்டிருந்த சிந்தனைகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து வேதனைப் பெருமூச்சுடன் நிமிர்ந்த போது, மடியில் மடித்த கடதாசி ஒன்றுவந்து விழுந்தது. என்ன இது: எப்படி வந்தது எனத் திருப்பிப் பார்த்தவள் கமலனைப் பார்த்ததும் ஆத்திரத்துடன் எழுந்தாள்.

''இவன் எல்லாரையும் போல என்னையும் நினைச்சிட்டான். இவன்ரை முகத்திலையே இதைக் கிழிச்செறியவேணும்'' என்ற ஆவேசத்திலும் மன அருவருப்பிலும் எழுந்தவள், தூரத்தில் சின்னம்மாவும் அவளது 'செற்றும்' கிணற்றடியை நோக்கி வருவதைப் பார்த்ததும் அவ்வளவு பேருக்கு முன்பு அவனுடைய மன உணர்ச்சிகளை அவமானப்படுத்துவது பண்பில்லை எனக் கருதி விலகிவிட்டாள்.

தோட்டவேலையின் அலுப்புத் தெரியாமல் வீட்டுப்பிரச்சனைகளின் நினைவுத்துயரத்தை மறப்பதற்குப் போட்டிபோட்டுக்கொண்டு நடுகையில் இறங்கிவிடுவாள் மகேஸ்வரி. தேவையற்ற வம்பளப்புகள், ஊரவர் பற்றிய விமர்சனங்கள், தற்பெருமை பேசும் தம்பட்டங்கள்யாவும் அவளுக்கு விதைக்க இல்லாததால் நேர விரயமின்றி எப்போதும் அவளே முன்வரிசையில் நின்றுகொண்டிருந்தாள். கமலனும் சுறுசுறுப்பாக இயங்கும் ஒரு தொழிலாளிதான். பொழுது போகாதவர்கள் அவனுடன் இவளை இணைத்துப்பகிடியை ஆரம்பித்ததை அவள் பெரிதாக நினைக்கவில்லை அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவுமில்லை. இரண்டு மூன்று நாள் தோட்டக்கார இளையதம்பியரும், ''இரண்டு பேரும் முடிச்சுப்போட்டியள் போலக் கிடக்கு...'' என்று அவளைக் கேட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட பலத்த சிரிப்பொலியின் பின்தான் இப்பகிடி ஆரம்பமானது பகிடி அவளுக்கு மன அரிகண்டமாக, வெறுப்பாகஇருந்தது முதலில் கோபித்துப்பேசிப்பார்த்தாள். பின்னர், தான் ஏதாவது சொல்லப்போனால் தான் அது பெரிதாக வளரும் என்ற நினைவில் எதுவுமே பேசாமல் விட்டுவிட்டாள் அதை அவள் சம்மதித்ததாக அவன் பொருள் கொண்டுவிட்டானோ எனமுதன் முதலாக இப்போது யோசித்தாள்.

''இந்தக்காலத்துச் சினிமாக்களைப் பாக்கிறதுதான - அதின்ரை விளைவுதான் இந்த விளையாட்டெல்லாம். ஏதோ போல இருக்கவேணும் எண்டு பழையாக்கள் சொல்லுவினம்: இந்தக்காலத்துத் தாய்மாரின்ரை பொழுது கழியிற விதம்போலத்தான் பிள்ளையளும் பிறக்குதுகள். எல்லாம் சூழலின்ரை பிழைதான்'' என்ற நினைவுடன் இதற்கு முற்றுப்புள்ளி வைத்தவள், பின்பு அதனைப்பற்றிச் சிந்திக்கவில்லை வேலை அமளியில் இதை மறந்தும் விட்டாள்.

''இன்னும் இரண்டு நாளிலை பள்ளிக்கூடம் தொடங்கிடும். பிறகு இதல்லாம் மறந்திடும். அடுத்த விடுமுறைக்கு மூண்டுமாதம் இருக்கும். எந்தத் தோட்டம் கிடைக்குதோ'' என்ற சிந்தனைகளில் அசட்டையாகவும் இருந்துவிட்டாள்'

அடுத்த நாள் வேலை முடிந்து திரும்பும்போது சின்னம்மா ''என்ன மகேசு, கமலன்ர கடிதம் சாக்காய் இருந்திதோ? எங்களுக்குத் தெரியாமல் இரகசியமாய்ச் சோடி தேடிப் போட்டாய் போலக்கிடக்கு. அதுதானே பார்த்தன் சோழியன் குடுமி சும்மா ஆடாது எங்கிறமாதிரி உனக்குள்ளையும் ஒரு இரகசியம் இருந்தபடியால்தான உனக்கு ஊராக்களின்ரை கதை பிடிக்கிறேல்லை'' என்று தனது ரசிப்பைக் கேட்டு ரசியாத ஆத்திரத்தையும் சேர்த்துக் கொட்டிய போதுதான் அன்று முழுவதும் அவர்கள் கிசுகிசுத்ததன் காரணம் அவளுக்குப் புரிந்தது; அவர்களது கண்ஜாடையின் பொருளும் விளங்கியது.

தோட்டத்தில் ஏற்பட்ட போராட்டத்தில் பங்கு கொள்ள முன்வராதோர் அந்த அனுபவத்தில், தனதுதம்பியை எல்லா வகையிலும் தாழ்வுச் சிக்கல் இல்லாமல் வளர்க்க வேண்டும் என்ற துடிப்பில், அவனை நல்ல நிலைக்கு உயர்த்தும் எதிர்ப்பார்ப்பில் அப்புவின் கோபமும் எரிச்சலுந்தான் அவளுக்கு ஏற்பட்டன

குடியை விலக்கிக் குடும்பத்தை-தான் விதைத்த பயிர்களை-காக்க மாட்டாதவர் மன அடக்கத்தை அதில் அணை முடியாதவர் சிறு பையனை உடுப்பிற்கு ஆசைப்பட்டதை பிழை என்று வாதிட்டதை அவளால் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

சின்னம்மாவின் பலத்த சிரிப்பொலியால் சிந்தனை கலைந்து திரும்பிப் பார்த்தாள் மகேஸ். சின்னம்மாவின் ரசனைகள் அவளுக்கும் தெரிந்தவைதான் எவள் யாருடன் எப்படி ஓடினாள் என்பதிலிருந்து யார் யாருடன் இனி ஓடுவார்கள் என்ற தன் கற்பனை வரை வாய் ஓயாமல் தானே தனக்குள் ரசித்துச் சொல்லும் அவளைச்சூழ ஒரு கும்பல் எப்போதும் இருக்கும்.

''இதுகளைக் கதைச்சு, விமர்சிச்சு ஆருக்கு என்ன லாபம்? கதையாமல் விடுறதாலைஎன்ன நட்டம்?'' என்பது போல் அவள் எப்போதும் விலகியே இருப்பாள், இந்த ரசனையிலிருந்து அவள்விலகியிருப்பதற்கு அவளது பண்பும் அறிவும் கூடக் காரணமாயிருக்கலாம்.

பாக்கிறது, பிறகு கடிதம் குடுக்கிறது. கடைசியிலை காதலிக்கிறது. இவ்வளவுந்தான் வாழ்க்கை எண்டு நினைக்கினம். குழந்தை சர்ப்பத்திலை இருக்கேக்கை நீதிநூல்கள், சமயக் கதையளைப் படிச்சபடி பரிசுத்தமான நினைவோடை புனிதமான யாகம் செய்யிறது

''பிறகென்ன மகேசு வேலைக்கு வந்து வேலியும் அமைச்சிட்டா''

''ஆம்பிளையளை வலைக்குள்ளை விழுத்துறத்துக்கும் ஒரு கெட்டித்தனம் வேணும்... சும்மா சொல்லக்கூடாது, என்ன சின்னம்மாக்கா?'

''எண்டாலும் கமலன் பிழையில்லை... நல்ல ஆம்பிளை தானே?''

--இப்படிப்பலரகப்பட்டவிமர்சனங்கள், கேலிகள் அதற்குள் யாரோ ஒருத்தி ''என்ன இருந்தாலும் ரீச்சருக்குத் தோட்டக்கார மாப்பிளை பொருத்தமில்லை'' என்றதற்குச் சின்னம்மா 'சும்மா இருந்த நாச்சியாருக்கு அரைப் பணத்துத் தாலி போதாதோ?' என்றாள் கிண்டலாக.

அவளுக்கு ஏற்பட்ட மன அருவருப்பிலும் அரிகண்டத்திலும் என்ன நடந்ததென விளக்கமாகச் சொல்ல ஏனோ பிடிக்கவில்லை இவ்வளவும் சொல்லிவிட்டார்கள் இதற்கு மேல் எதைச் சொல்லப் போகிறார்கள் என மனம் இறுகிக் கொண்டது. வந்த ஆத்திரத்தில் அவள் ஏதாவது கதைக்க ஆரம்பித்தால், கண்ணீரில் முடிந்து அவளுடைய பலவீனத்தைத்தான் வெளிக் காட்டும் என்ற நினைவுடன் கண்ணீர் முட்டி நின்றதை வெளிக் காட்டாமல், கண்மடல்களால் தடுத்துக்கொண்டாள் மகேஸ்வரி.

எதுவுமே பேசிக் கதையை விரிவாக்க அவள் விரும்பாவிடினும் அவர்களின் கதையிலிருந்து கமலனின் ஆசை பல தொழிலாளர்களினதும் தூண்டுதலால் வலுப் பெற்றுக் கடிதம் கொடுத்துக் கெட்டித்தனத்தை நிரூபிக்கும் அளவுக்கு வளர்ந்ததை அறிய முடிந்தது. கமலன் தான் போய்த் தனது வீரத்தை மற்றவர்களுக்கு அளந்திருப்பான் போலும்!

முதல் கோணல் முற்றுங் கோணல் என்பதுபோல இவ் விடுமுறையை முழுவதும் துயரம் தோய்ந்த நினைவுகளால் நிரப்பிவிட்டவேதனையை எண்ணித் தன் விதியை நொந்து கொண்டாள் அவள்,

[அடுத்த வாரம் தொடர்பவர் மாவை பாரதி]

### ✯ பக்தன்

பால் பழத்துடன்
பத்து நாட்கள்
பக்குவமாக விரத
மிருந்தவர்...
பதினோராம் நாள்
பத்து ரூபா இறைச்சிப்
பங்கெடுத்து தன்
பக்தியின் வெலிவை
தேற்றிக் கொண்டார்!

### காரணம்

போலிகள் அதிகம்
அதனால்தான்
எங்கள் ஊரில்
வேலிகள் அதிகம்!

— குமார் தனபால்

# தேவரையாளி இந்துக் கல்லூரியின் பிதாமகர் சின்னத்தம்பி

க. எதிர்வீரசிங்கம்
செயலாளர், வதிரி அபிவிருத்தி நிறுவனம்

''தேவரையாளி யென்னும்
செந்தமிழ்க் கூடந்தன்னை
யாவரும் போற்றும் நல்ல
ஆங்கில நிலையமாக்கிக்
காவலனாக நின்று காசொடு
சத்தியாவும்
ஆவலோடு டளித்த
சின்னத்தம்பி நீ சாந்தி
கொள்க''

கவிஞர் காரை
செ. சுந்தரம்பிள்ளை.



வதிரி மக்களால் 'பெரியவர்' என்று அன்பாக அழைக்கப்பட்டவரும் தேவரையாளி இந்துக் கல்லூரியின் பிதாமகருமான க.மு. சின்னத்தம்பி அவர்களின் நூற்றாண்டு நிறைவையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

ஆ-ர்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட மக்கள் கற்பதற்கு எந்த வசதியுமில்லாது கஷ்டப்பட்டனர். அன்றிருந்த ஒரு சில பள்ளிக்கூடங்களும் சாதித்துவேஷம் காரணமாக அவர்களைச் சேர்க்க மறுத்தன. இவர்கள் படித்த இரண்டொரு திண்ணைப்பள்ளிக்கூடங்கள் கூட இவர்களுக்கு கல்வியிலிருந்த அவாவைத் தீர்ப்பதாகவில்லை. கிறிஸ்தவ மிஷனரிப்பள்ளிக்கூடங்களோ இவர்களை மதம் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்தன. யாழ்ப்பாணத்துச் சமூக வரலாற்றில் சாதிக் கொடுமைகளுக்கு எதிராக, வடமராட்சியில் இச்சமூக மக்கள் வதிரி தேவரையாளி சைவவித்தியாசாலையை முதன்முதலாக 1914ல் நிறுவினர். அன்று தொடக்கம் இன்றுவரை இம்மக்களிடையே சைவத்தைக் காக்கவும் தமிழை விருத்திசெய்யவும் இத்தாபனம் அரும்பாடுபட்டு பல அறிஞர்களைத் தோற்றுவித்துள்ளது.

இடையில் இதனைத் தனிச் சொத்தாகப் பாவிக்கும் முயற்சிகள் பகிரங்கமாகவே நடைபெற்றதனால் இதனை இதுகாறும் நிர்வகித்து வந்த தேவரையாளிச் சைவ கலைஞான சபையில் பிழவு ஏற்பட்டு, நீதி மன்றம் மூலம் பலகாலம் நடவடிக்கை எடுக்கப்பெற்று, அல்வாய் வதிரி, கொற்றுவத்தை வாழ் மக்களின் பொதுச்சொத்தாக இப்பாடசாலை ஆக்கப்பெற்று திட்டமிட்ட வளர்ச்சிக்கு அடிகோலப்பெற்றது. இதற்கு முன்னின்று பாடுபட்டவரே 'பெரியவர்' வதிரி க. மு. சின்னத்தம்பி அவர்கள். 1962ஆம் ஆண்டு தொடக்கம் பதினெட்டு ஆண்டுகள் அவர் முகாமைவாளராகக் கடமையாற்றி இதனை ஒரு சைவ ஆங்கிலக் கல்லூரி ஆக்க முயன்று அதில் வெற்றிபெற்று இதன் பொற்காலத்தை முகிழ வைத்தார்கள்.

அவரின் தோற்றம் எளிமையானது. ஓங்கிவளர்ந்த உடலுருவம் களைதவழும் முகம், அன்பொழுகும் பேச்சு பொறுமையின் சிகரம். பிறர் உள்ளம் வருந்தாது நடந்து கொள்ளும் பாங்கு அவரிடம் அபரிமிதமாக விருந்தது. பணக்காரர்களிடம் காணப்படும் படாடோபம் அவரிடம் எப்போதுமிருந்ததில்லை. அவர் 16-11-1883ல் வதிரியில் செல்வம் செல்வாக்குள்ளகுடும்பத்தில் பிறந்தார். சிறு வயதிலேயே காலி மாநகரில் வெற்றிகரமாக வர்த்தகம் நடாத்தி தனவந்தரானார்: அங்கு வருடந்தோறும் கதிர்காம மடத்தில் அன்னதானம் நடைபெற உதவிபுரிந்ததோடு யாத்திரீகர்களுக்குப்பண உதவியும் புரிந்தார். சிங்களமக்களிடையே செல்வாக்குப்பெற்ற ஒரு சில வர்த்தகருள் அவர் முதன்மையானவர். முன்னாள் பிரதமமந்திரியும் கல்வி, உள்விவகார அமைச்சரும், இந்நாள் காலி மாநகர பாராளுமன்ற உறுப்பினர், கலாநிதி டபிள்யு தஹநாயக்கா அவர்கள் அவரைப்பற்றி புகழ்ந்து பேசிய பல சந்தர்ப்பங்களுண்டு. அவர் காலஞ்சென்றபோது, தாம் அனுப்பிய அனுதாபச் செய்தியில், அவர் தமது வாழ்க்கையில் உயர்ந்த கொள்கைகளைக்கைக்கொண்டவரென்றும், சிங்களப் பகுதியில் வாழ்ந்து, சிங்கள் தமிழ் மக்களை இணைத்தவரென்றும் கூறியுள்ளார்.

வதிரி உல்லியநொல்லை அம்பாள் ஆலயத்துடன் இவர் குடும்பத்தினருக்கு பண்டு தொட்டே தொடர்பு இருந்து வந்துள்ளது. இக்கோவிலில் எந்தத் திருப்பணி நடைபெற்றாலும் மனங்கோணாது தமது பங்கைச் செலுத்த அவர் தவறியதில்லை. அந்தக் காலத்தில், தமது சொந்தச் செலவில் இதற்கு மணிக்கோபுரமும், முன்மண்டபமும் அமைத்தார். திருவிழாக் காலத்தில் தென்னிந்திய நாதஸ்வர மேதைகள் முதன்முதலாக இங்கு கச்சேரி செய்ய வழிவகுத்தார்.

அக்காலத்தில் இப்பகுதியில் பாமரமக்கள் வணங்கிய தெய்வம் அண்ணமாராகும். ஏறக்குறைய அறுபத்தையாயிரம் ரூபா செலவில் பதினைந்து வருடங்கள் முயன்று ஆகமமுறைப்படி ஆலயங்கட்டி கும்பாபிஷேகம்' மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம் செய்வித்து. நம்மவர்களை ஊக்கித்தானும் பெருந்தொகைப்பணம் செலவழித்து மூர்த்தி விசேடம் பொருந்திய, வதிரிபூவற்கரைப் பிள்ளையார் ஆலயத்தைக் கட்டி எழுப்பி, புகழையும் புண்ணியத்தையும் எம்மக்களுக்குத் தேடித்தந்த ஆலய தர்மகர்த்தா அவராகும்.

தேவரையாளி ஒரு தமிழ்ப் பாடசாலையாக இருந்த காலத்தில் வசதியற்ற பிள்ளைகள் உயர்தர கல்விபயில இடர்ப்பட்டனர். அத்தோடுஇலவசக் கல்வி 1945ல் ஏற்பட்டபின், மேல் வகுப்பில் படித்த பிள்ளைகள் வேறு பாடசாலைகளில் சேர்ந்ததின்பலனாக, இங்குள்ள மேல்வகுப்புக்கள் நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது, எனவே இதனையும் ஓர் ஆங்கிலக் கல்லூரியாக்கும் முயற்சிகளை முகாமையாளர் என்ற முறையில் தொடர்ந்து திரு.க.மு சி மேற்கொண்டார்.

1-1-50 தொடக்கம் ஒரு புதிய ஜூனியர் பாடசாலையாக இது தரம் உயர்த்தப்பட்டது. அன்றைய கல்வி அமைச்சர். கௌரவ டொக்டர் தஹநாயக்கா அவர்களே இதனை 7-5-57ல் ஓர் உயர்தர ஆங்கிலக் கல்லூரியாக்கினார்கள். யார் சென்ற காலத்தில் இப்பாடசாலையை ஆரம்பித்தாலும் தமது இடையறாத விடாமுயற்சி சொந்தச் செல்வாக்குக் காரணமாக இதனை ஒரு சைவாங்கிலக் கல்லூரியாக்கி இதன் பிதாமகராகும் பெருமையை அவர் தேடிக்கொண்டார்.

ஆரம்பத்தில் போதிய இடவசதியில்லாததும், கொட்டில்களில் வகுப்புகள் நடாத்த வேண்டியிருந்ததுமே இப்பாடசாலையின் பெருங்குறையாக இருந்தது. பின்பு கல்லூரித் தரத்திற்கு ஏற்றவாறு மேலதிக காணிபெற்று விஞ்ஞான கூடங்கள், வாசிகசாலை திறந்த வெளியரங்கு முதலியன அவரால் அமைக்கப்பெற்றன. இவைகளைச் செய்வதற்கு இலங்கை முழுவதும் பெருநிதி திரட்டவேண்டியிருந்தது. பெண்கள் மேல்படிப்பு மேற்கொள்ளச் சகல வசதிகளும் செய்யப்பட்டன. வருடந்தோறும் தமது சொந்தப்பணத்தில் தீபாவளிப் பண்டிகைக்கு வசதியற்ற பிள்ளைகளுக்குத் துணி வழங்கினார். மேல் படிப்பு மேற்கொள்ள புலமைப் பரிசிலும் நிறுவப்பட்டது. இதுவே ஐந்து புலமைப் பரிசில்களை வருஷாவருஷம் வழங்க வழிவகுத்தது. பரிசுத்தினதும் கலை நிகழ்ச்சிகள் மெய் வல்லுனர், பேச்சுப் போட்டிகள் இராப்படிப்பு வகுப்புகள் போனறபுறவேலைகளில் பிள்ளைகள் ஈடுபடுத்தப்பட்டனர் இங்கு ஏறக்குறைய ஆயிரம் பிள்ளைகள் கல்விபயில்கின்றனர். தொழில் நுட்பப் பிரிவில் 500 பெண் - ஆண் உண்டு. பாலர் வகுப்பில் இருந்து க. பொ. த. (உயர் தர) வரை வகுப்புக்கள் உள்ளன பல தொழில் துறைகளைப் பொதிக்கும் புறம்பான தொழில்நுட்பப் பிரிவுமுண்டு.

பொதுக் கருமங்களை உடனுக்குடன் வெற்றிகரமாக நிறைவேற்றும் ஆற்றலும் செலவிடும் பணம் ஒரு சிறு தொகையேனும், அதற்குக் கணக்கு வைக்கும் கண்ணியமும் அவரிடம் இருந்ததனால் மக்கள் அவரிடம் நம்பிக்கை கொண்டு அவர் ஈடுபட்ட கருமங்களில் உதவுவதற்கு முன்வந்தமை வியப்புக்குரிய விஷயமல்ல 1960 இல் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றபின், முகாமையாளர் பதவியிலிருந்து அவர் நீங்கியதும். எங்கள் கல்லூரியினால் பாராட்டுவிழா எடுக்கப் பெற்று. முன்னாள் வடமாநில அரசாங்க அதிபர் அமரர் ஸ்ரீ காந்தா அவர்களால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். யாருக்கும் கிடைப்பதற்கரிதான பூரணவாழ்வு வாழ்ந்து 10-2-67ல் இறைவன் பத நிழல் கண்டு அமரரானார்.

பல செயற்கரிய காரியங்களைத் தம் வாணாளில் சாதித்ததனால், அவரின் புனிதமான சேவையை நன்குணர்ந்த மக்கள் அன்பின் மிகுதியால் அவரைப் 'பெரியவர்' என்று அழைத்ததில் ஒரு வியப்புமில்லை.

முன்னாள் உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு மு சிவசிதம்பரம் அவர்கள் தமது அஞ்சலிச் செய்தியில் அன்று கூறியதை இன்று நினைவு கூர்வது பொருத்தமானது. 'பண்பு, பணம், தொண்டு, மனம் என்றெல்லாம் ஒருவரிடத்தில் ஒன்று சேர்ந்திருக்கக் காணல் அரிது. அதுவும் உழைப்பாலுயர்ந்தவர் மேற்படி நலன்கள் நிறைந்து மிளிர்ந்தவர் அவர் தேவரையாளி அதிபரை தான் விரும்பிய, கல்வித் தொண்டுக்காகப் பெற்றளித்தார். என்றால் அவர் தவம் புரிந்தவர் என்பது நிலைநிறுத்தப்பட்டு விட்டதல்லவா?''

அவரின் நூற்றாண்டு 16-11-1983 இல் நிறைவெய்தியுள்ளது. அமரரின் அரும் பெருஞ்சேவையை இலகுவில் மறக்காதிருக்க, அன்னாருக்கு நினைவுச் சின்னம் நிறுவ நன்றியுள்ள மக்கள் முன்வர வேண்டுகிறேன்.

## தும்மற் பலன்

★ பல முறை தும்மினால் காரிய சித்தியும் தும்மிய பின் இருமினால் லாபமும் உண்டு. ஒரு தும்மல் தீமை தரும்.

★ தாம்பூலம் தரித்துக் கொள்ளப் போகும் போதும், போசனம் செய்யத் தோடங்கும் போதும் படுக்கைக்குப் போகும் போதும் தும்மல் நலமாம்.

★ ஒரு காரியத்தை ஆலோசிக்கும் போதும் பிரயாணம் செய்யும் போதும் தும்மினால் நல்லதல்ல.

★ படுக்கையை விட்டு எழும்போது தும்மினால் நலலது தும்மிக்கொண்டு உட்காந்திருந்தால் காரிய வசியமாகும்.

★ போராடிக்சொண்டே தும்மினால் காரியம் ஜெயம் ஆகாது.

★ இளம் பிள்ளைகளும் குழந்தைகளும் ஒழுக்கமற்ற மாதரும் தும்மினால் காரிய சித்தியாகும்.

★ கர்ப்பவதி, மலடி, வீட்டு விலக்கான மாது. விதவை, ஊமை, நொண்டி இவர்களில் எவர் தும்மினாலும் கஷ்டங்கள் உண்டாகும்.

★ நெடியானாலும் மற்றும் செயற்கையாலும் வரும் தும்மல்களுககுப் பலனுண்டகாது.

— சச்சி —

பவர்ஸ் உரம்
ஒப்பற்றது

ABC

MASTERS ABC 4/82 (A)

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1. தொலைபேசி: 20551-6

# சிதறிய மணிகள்

**தொகுப்பு: அ. கனகசூரியர்**

## ✶ தமிழோசையில் சாதனைவீரர்

பல உலக சாதனைகள் மூலம் இலங்கைக்குப் பெரும் புகழ் ஈட்டித்தந்த பிரபல சாதனை வீரர் ஆழிக்குமரன் ஆனந்தன் தனது இன்னொரு சாதனையாக ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபொழுது எதிர்பாராதவிதமாக மரணமானது அனைவருக்கும் மிகவும் துயரத்தை அளிப்பதாகவே இருக்கிறது. இவர் தனது சாதனை முயற்சி சம்பந்தமாக லண்டன் பி.பி.ஸி. தமிழோசை நிகழ்ச்சிக்கு அளித்துள்ள பேட்டியொன்று கடந்த ஜூலை முதலாம் திகதியன்று தமிழோசை வண்ணக் கதம்பம் நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகியது. இவ்வருட ஆகஸ்ட் மாத இறுதியில் அல்லது செப்டம்பர் மாதத்தில் தனது நீச்சல் சாதனையை மேற்கொள்ள விருப்பதாகத் தெரிவித்த ஆனந்தன், ஆங்கிலக் கால்வாயை ஏற்கனவே ஆறுபேர் இரு தடவைகளும், ஒருவர் மூன்று தடவைகளும் நீந்தியிருப்பதாகவும், தான் நான்கு தடவைகள் நீந்துவதற்கு விரும்புவதாகவும், ஒருமுறை நீந்துவதற்கு இந்தியநாணயப்படி 30,000 ரூபா தேவைப்படுமென்றும், தனக்குத் தேவையான முழுப்பணத்தையும் சேகரிக்கும் பணியில் தான் ஈடுபட்டிருப்பதாகவும் சொன்னார். இந்த சாதனை ஒரு தனிப்பட்ட முயற்சி என்றும், பிரிட்டிஷ் செய்திப்பத்திரிகையொன்றின் ஆதரவும்கிடைத்திருப்பதாகவும் தனது பேட்டியின் போது தெரிவித்த ஆனந்தன், தான் ஏற்கனவே செய்த முக்கிய சாதனைகளைப் பற்றியும் விபரித்தார். தான் இதுவரையில் 27 சாதனைகள் செய்திருப்பதாகவும், அதில் 7 சாதனைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டு உலக சாதனைகளைக் குறிப்பிடும் 'கின்னஸ்' புத்தகத்தில் வெளிவந்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

பி.பி.ஸி. தமிழோசை நிகழ்ச்சி அறிவிப்பாளராகக் கடமையாற்றும் இலங்கையைச் சேர்ந்த திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம், சாதனைவீரர் ஆனந்தனை பேட்டிகண்டிருந்தார்.

## ✶ சக்தியுள்ள எவ்.எம் அலைவரிசை

எவ். எம். அலை வரிசையிலுள்ள வானொலிப் பெட்டி

[12ம் பக்கம் பார்க்க]




# இவ்வாரம் எப்படி?

### இன்று

மாதம்- ஆவணி
திகதி- [02-09-1984]
வாரம்- ஞாயிறு
திதி- ஸப்தமி காலை 10-30ன் மேல் அட்டமி
நக்ஷத்திரம்- அனுஷம் முன் இரவு 10-21 வரை

### மேஷம்

தாய்வழிப் பெருமையும் அவ்வழி இலாபமும் ஏறபடும். உயர்கல்விகளும் இடம்பெறும் நீண்டநாள் பிணிநீங்க இடமுண்டு. அவசரப்போக்கையும், ஆத்திர உணர்ச்சியையும் தடுமாற்றத்தையும் தவிர்க்கவும் சிவ சூர்யப்பெருமானை வழிபடவும்.

### ரிஷபம்

எப்பக்கம் திரும்பினாலும் அன்பர்கள் ஆதரவு தருவர். வெளியிடத் தொடர்புகள் சிறப்பைத்தரலாம் படித்தவர்களால் பயன் கிட்டும் சகோதரங்களால் தொல்லைகள் அதிகரிக்கும். பிரயாணங்களைத் தவிர்ப்பது நன்று. பேச்சாளர்கள் புகழ் ஈட்டுவர். மகா விஷ்ணுவை வழிபடவும்.

### மிதுனம்

பகை மூட்டம் தோன்றும். பதற்றமும் சேரும். மிகையானபோக்குக் கசப்பாக இருக்கும். குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும். புதிய பொருள்கள் கொள்வனவு செய்வதற்கு நன்று. பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும். இளையோர் கசப்பர். தட்சணாமூர்த்திப் பெருமானை வழிபடவும்.

### கடகம்

கண்வலைவீசி காதல்களை தொடுப்பீர் குடும்பத்தில் சிறுபூசலின் பின்குதூகலம் நிலைக்கும் ஆயுதபீடையும், எதிரிகள் சச்சரவும், பிரிவும் உங்களை நிலைதடுமாறவைக்கும். களஸ்திரவழியால் புத்திரருக்கு இலாபம் கிட்டும். அவ்வழியில் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு. சிவபெருமானை வழிபடவும்.

### சிம்மம்

எண்ணிய காரியத்தில்தடை ஏற்படும். மேலதிகாரிகளின் கண்டிப்பு உண்டு குடும்பப் பிணைப்புகள் இறுகும் சிறிய விபத்துக்களும் இடம்பெறலாம் வஞ்சகர் வலைவிரிப்பர். பிள்ளைகளால் உதவியுமாகும். புகழ்ச்சியும் உண்டு. காதலர்களுக்குக் கருப்பானவாரம். ஈஸ்வர வழிபாடு செய்யவும்

### கன்னி

தனவரவும் தருமசிந்தையும் மேலோங்கும் நஷ்டத்திற்கும் இடமுண்டு முதலீடுகளைத் தவிர்த்துக்கொள்ளவும். விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும். களஸ்திரவிடயங்களும் அவ்வழிச் சிறப்புமுண்டு புதிய சந்திப்புக்கள் பிரச்சினைகளைஉண்டாக்கலாம். எவ்விடத்திலும் நேர்மையுடனும் உண்மையுடனும் நடக்கவும். சனீஸ்வரப்பெருமானை வழிபடவும்.

### துலாம்

பெரியோர் புகழ்ச்சியும்புதுப் பிரயாணங்களும் பூமிபொருள் லாபங்களும் கிட்டும். தடைகள் பல உருவாகலாம் பெயரைக்கெடுப்பதற்கும் பொருளைப் பறிப்பதற்கும் சிலர் எத்தனிப்பர். அவதானமும் நிதானமும் வேண்டும். நீண்டநாள் தொடர்பில் மனதிற்கு இதமான மாற்றம் ஏற்படும். எதிலும் அமைதிவேண்டும். சனீஸ்வரனை வழிபடவும்.

### விருச்சிகம்

தனவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் தொழில்துறையில் முன்னேற்றமும் உயர்ச்சியான மாற்றங்களும் உண்டு. பெரியோரும் அயலோரும் அன்பு காட்டுவர். சிலவிஷயங்களுக்குத் தடைவிதிக்கத் தரகர்கள் எத்தனிப்பர் விழிப்புடனிருக்கவும். துர்க்கையம்மனைவழிபடவும்.

### தனுசு

திடீரெனவரும் வருவாயால் கடன்தொல்லைகள் தீரும். அனைபுக்கரங்கள் அணைக்கும். நல்லவிஷயங்களுக்குவழி கோலப்படும். பிதாவழி சுகம் கிடைக்கும். துர்க்கையம்மனை வழிபடவும்.

### மகரம்

சிறுவிபத்து ஏற்படலாம் ஆத்திரம் சிந்தனையைக்குழப்பும். நிதானத்துடன் செயல்படவும் உடல் நலன் பாதிக்கப்படலாம். பெண்கள் மிகவும் அவதானமாக நடக்கவும். அதிஷ்டதேவதையின் பார்வையும் கிடைக்கலாம். குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையலாம். பத்திரகாளி அம்மனை வழிபடவும்.

(12-ம் பக்கம் பார்க்க)

●

அழும்போது தனியாக இருந்து அழவேண்டும்; சிரிக்கும்போது நண்பர்களோடு இருந்து சிரிக்க வேண்டும் கூட்டத்தோடு அழுதால் நடிப்பு என்பார்கள்; தனியாக இருந்து சிரித்தால் சந்தேகப்படுவார்கள்.

— கண்ணதாசன்

## ✶ கொடிது எது?

இளமையில்
வறுமை
கொடியது என்றால்...
இப்போது—
இளமையே
கொடிது!

— கவிப்பிரியர்

## கடல் கோட்டை

[8ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டிருந்தார்கள். கைதிகளாக இருக்கும் போர்த்துக்கீச வீரர்கள் விலங்கு மாட்டப்பட்டநிலையில் கோட்டைச் சிறைகளில் அடைப்பதற்காக வரிசையாக அழைத்துவரப்பட்டார்கள். அவர்கள் மிகவும் களைத்துக் காணப்பட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டனர். சிறைக்கோட்டத்தினுள் அவர்கள் விடப்படும் பொழுது கைவிலங்குகள் அகற்றப்பட்டன.

அவ்வாறு சிறைக்கோட்டத்திற்குள் விடப்பட்டவர்களில் ஒருவன் தப்பி ஓடிவிட்டான் என்பதும் புதிதாக ஒருவன் சேர்ந்துவிட்டான் என்பதும் ஒல்லாந்த வீரர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை

எண்ணிக்கை சரியாக இருந்ததால் அவர்கள் அக்கறை எடுக்கவில்லை.

திசைவீரசிங்கன் அற்புதமாக அக்காரியத்தைச் சாதித்திருந்தான். கோட்டைகட்டுபவர்களுக்குத்தேவையான நீரை ஒரு மணி நேர நடைத்தூரத்தில் பெறவேண்டியிருந்தது. அவ்வாறு நன்னீரைப்பெற வந்தவர்களில் ஒருவனைக் கடத்திவிட்டு அவ்விடத்தில் வைஸ் கமாண்டர் பிகாறேவை அவன் புகுத்திவிட்டான்,

வெயிலில் கறுத்து, தாடி வளர்ந்து உருவம்மாறியிருந்த அவனை ஒல்லாந்தரால் அடையாளம் காண முடியவில்லை.

''என் பெயர் டொன் லூயிஸ்'' என்றான் பிகாறே.

(வளரும்)

## சிதறிய மணி

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வைத்திருக்கும் நேயர்கள் அன்ரனாவின் உதவியுடன் நிகழ்ச்சிகளை தெளிவாகக் கேட்கச் செய்வதற்கான ஆலோசனையொன்று அண்மையில் பத்திரிகையில் வெளிவந்திருந்ததை வாசக நேயர்கள் வாசித்திருப்பார்கள் பிரத்தியேக அன்ரனா இல்லாமலே வானொலிப் பெட்டியுடன் பொருத்தப்பட்டிருக்கும் அன்ரனாவின் உதவியுடனும் எவ். எம் அலைவரிசையில் இரவு வேளையில் நிகழ்ச்சிகளை ஓரளவு தெளிவாகக் கேட்க முடியும். அதாவது வானொலிப் பெட்டி அன்ரனாவை முழுமையாக உயர்த்தி வானொலியின் மேற்பக்கமாக அதிக சாய்வாகச் சரிப்பதன் மூலம் நிகழ்ச்சிகளைக் கேட்கக்கூடியதாக இருக்கும். இதன்மூலம் தமிழ்ச் சேவை இரண்டின் இரவு நிகழ்ச்சிகளைக் கேட்டு இரசிக்கலாம். தமிழ்ச் சேவை ஒன்றின் நிகழ்ச்சிகள் எவ். எம் அலைவரிசையில் ஒலிபரப்பாவதில்லை. எவ். எம் அலையரிசையுள்ள வானொலிப் பெட்டிகளை வைத்திருக்கும் நேயர்கள் இவ்விதமான முறையில் நிகழ்ச்சிகளைக் கேட்க முயற்சி செய்து பார்க்கலாம்.

### ✶ தேமதுரத் தமிழோசை

பி.பி.ஸி தமிழோசை நிகழ்ச்சிகள் வாரம் ஐந்து நாட்களாக அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதனைக் கேட்கும் இலங்கை நேயர்களின் தொகையும் பெருமளவில் அதிகரித்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். காரணம் இப்பொழுதெல்லாம் இலங்கையின் செய்திகளுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து தமிழோசை ஒலிபரப்புச் செய்கிறது. இலங்கைச் செய்திகள் உடனுக்குடன் ஒலிபரப்புச் செய்யப்படுவதால் நேயர்கள் பெருமளவில் அதனைக் கிரமமாகக் கேட்டு வருகிறார்கள்.

## இவ்வாரம்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

### கும்பம்

குருக்குவழித்தலையீடு சட்டத்தில் மாட்டிவைக்கும் கொள்வனவுகளில் நல்லதிருப்பம் ஏற்படும். இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிப்பீர் சிவசூரிய மூர்த்தியை வழிபடவும்.

### மீனம்

சீறிவரும் கோபத்தை அடக்கவும். பொறுமை வேண்டும். உடல்நலமும் பாதிக்கப்படலாம் கைத்தொழில் புரிவோருக்கு நல்லவருவாய் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. தீயசக்திகள் பலவழிகளிலும் உங்களை வீழ்த்தப்பார்க்கும் விழிப்புடன் செயற்படவும்.

திருமலை
க. வே. ரவீந்திரன்

பி.பி சி. செய்தி மூகவர்களான திரு மேவின் டி. சில்வா திரு மார்க்ரெலி ஆகியோர் அனுப்பி வைக்கும் இலங்கைச் செய்திகளுடன் இலங்கைச் செய்திகள் தொடர்பான பிரிட்டிஸ் செய்திப் பத்திரிகைகளின் கருத்துரைகளும் தமிழோசையில் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் மஞ்சரி

★ தொகுப்பு: என். செல்வராஜா

## நாடுகளும் தலைநகரங்களும்

| நாடுகள் | தலைநகரங்கள் |
| --- | --- |
| ஐக்கிய அமெரிக்கராஜ்யம் (USA) | — வாஷிங்டன் |
| சோவியத் ஒன்றியம் (USSR) | — மாஸ்கோ |
| இங்கிலாந்து (U.K.) | — லண்டன் |
| பிரான்ஸ் | — பாரிஸ் |
| இந்தியா | — புதுடில்லி |
| சீனு | — பீக்கிங் |
| யப்பான் | — டோக்கியோ |
| இத்தாலி | — ரோம் |
| மேற்கு ஜெர்மனி | — பேர்லின் |
| எகிப்து | — கெய்ரோ |
| லிபியா | — திரிபோலி |
| கனடா | — ஒட்டாவா |
| பிலிப்பைன்ஸ் | — மணிலா |
| மலேஷியா | — கோலாலம்பூர் |
| சிங்கப்பூர் | — சிங்கப்பூர் |
| யூகோஸ்லாவியா | — பெல்கிரேட் |
| செக்கோ செலவாக்கியா | — பேரு |
| போலந்து | — வார்ஸோ |
| கியூபா | — ஹவானு |
| இஸ்ரேல் | — டெல் அவீவ் |
| ஈரான் | — தெஹ்ரான் |
| ஈராக் | — பாக்தாத் |
| பர்மா | — ரங்கூன் |
| ஆப்கானிஸ்தான் | — காபூல் |
| ஆஜன்தீனு | — புவனஸ்அயர்ஸ் |

தொகுப்பு;
பொன் சிவசந்திரபாலன்

## கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டுகள்

| | |
| --- | --- |
| நுணுக்குக்காட்டி (Microscope) | — 1590 |
| தொலை காட்டி (Tlescope) | — 1608 |
| மடக்கை (Logarthms) | — 1614 |
| கணிக்கும் பொறி [Calculating machnie] | — 1642 |
| கடிகாரம் | — 1792 |
| தீப்பெட்டி | — 1855 |
| X - கதிர் [X-Ray] | — 1895 |
| தொலைக்காட்சி (Television) | — 1926 |
| யந்திரத்துப்பாக்கி | — 1861 |
| தந்தி | — 1837 |
| சைக்கிள் | — 1839 |
| சினிமா | — 1895 |

தொகுப்பு; ப ஜெ சங்கர்,
காரைநகர்.

## நகைச்சுவை

●

ராமு; எங்கள் பாட்டிக்கு மூன்று காதடா.

ரவி: எப்படியடா?

ராமு: வலக்காது, இடக்காது, கேட்காது.

●

ராமு: எங்கள் பாட்டாவுக்கு நாலு கை.

ரவி; எப்படியடா நாலு கை?

ராமு; வலக்கை, இடக்கை, பொக்கை, வழுக்கை.

●

குமார்; காகத்தைப்பிடித்துத் தண்ணீருக்குள் அமிழ்த்திளுல் என்ன செய்யும்.

சிவா: துடிக்குமடா.

குமார்; இல்லையடா கரையும்.

சிவா. நந்தகுமார்
யாழ். இந்துக்கல்லூரி

## பள்ளிப்பகிடி

●

ஆசிரியர்; (மாணவனின் தேர்ச்சி அறிக்கையைப் பார்த்துக் கொண்டு) ஏன் தம்பி, நீ எந்தப் பாடத்திலேயும் பதினறு மார்க்குகளுக்கு மேல் வாங்கவில்லையே, உன் பேர் என்ன?

மாணவன்: 'மார்க்' கண்டேயன் சார்!

●

பாபு; ஏன் கோபு, உன்சொந்தத்தம்பியையே தூரத்து உறவு என்கிறயே ஏன்?

கோபு: அவன் ஜேர்மனியில் அல்லவா இருக்கிறன். அதனல் தான்.

## நீங்களும் பாடலாம் [2]

சூசையின் மாமா இராசசுந்தரம்
ஓசை உடனே இயங்கும்——
பூசையில் ஐயர் சொல்வது——
மீசை நரியார் செய்வது——
பாரப் பொதியை சுமக்கும் கழுதை
பாம்பைப் போன்றே இருக்கும்—
பல் தீட்டிட எடு ஆலம்——
பாவலர் எழுத்தில வடிப்பது——
இனிக்கும் பதநீர் சுவைமிகு பானம்
முனிவர் தவத்தில் பெறுவது——
புனித தர்மம் அன்ன——
துணியால் மூடி மறைப்பது——
அரண்மனை வாசலில் இருப்பது காவல்
அரசியின் பணியாள் செய்வது——
மரத்துக்கு மரமெனக் குரங்கார்——
மதில் மீதிருந்தே கூவுது—

● கவிதையைக் கத்தரித்து நிரப்பி அனுப்பிவையுங்கள் பார்க்கலாம். சரியான விடையும் சரியாக எழுதியவர்களின் பெயரும் அடுத்த வாரம் பிரசுரிக்கப்படும்.

கடந்த 12-7-84 வார மலரில் இடம்பெற்ற நீங்களும் பாடலாம் பாடலுக்குச் சரியான விடை அனுப்பியவர்களில் சிலரின் பெயர் தாமதம் காரணமாகப் பிரசுரமாக முடியாமற் போய்விட்டது. அவை வருமாறு:

ச. நித்தியானந்தன், யாழ் இந்துக்கல்லூரி, சி. அபராஜிதன், துரை. சுரேந்திரன்,
சி. உமைபாலன் ஒரு பிழை.


உயர்வுக்கு ஓர் உதவிக்கரம்!
உங்களுக்கோர் வழிகாட்டி!!

"ஷப்ரா"

★ யாழ்நகரில் நிலையான வைப்பிற்கு அதிஉயர் வட்டி!
✶ உங்கள் ஆதனங்களுக்கு எதிராக நிதி உதவி!!
✶ வாகனங்களை வாங்க வாடகைக்கொள்வனவு வசதி!!!
✶ குறைந்த முற்பணத்துடன் விட்டுப்பாவனைப் பொருட்களைப் பெற தவணை முறை கொள்வனவுத் திட்டம்!!!!

நிதி உதவிக்கு நாம் உங்கள் தோழர்கள்


நம்பிக்கை! நாணயம்!! பாதுகாப்பு!!!

இவை உங்கள் முதலீட்டுக்கு உத்தரவாதம்.

SHABRA

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு – 4.
தொலைபேசி இல: 589310.

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22073.




## காட்சி 1
(அங்கம் 1 )

இடம்: சத்தியபுரி மன்னன் அவை.
காலம்: காலை நேரம்.

பாத்திரங்கள்: அரசன் சத்தியகீர்த்தி.
முதலமைச்சர்
மந்திரிமார்
புலவர்கள்
காவலர்
அடுத்த ஊர் மக்கள்

(சத்தியபுரி மன்னன் அரசவையில் வீற்றிருக்கின்றான். சபை நிகழ்வுகள் தொடங்கவுள்ளன, புலவர்கள் வாழ்த்துப் பாடுகிறார்கள்)

புலவர்—1

வாழிய வேந்தே; இந்த
வையகம் போற்ற வாழ்க
நாளெலாம் எமக்காய் வாழும்
நாயக வாழ்க; எங்கள்
சூழிருள் அகற்றும் வீரத்
தோன்றலே வாழ்க; மக்கள்
தோழனே வாழ்க உந்தன்
தோள் வலி வாழ்க வாழ்க.

புலவர்—2

பகைவரும் போற்றும் தூய
பண்பாளா வாழ்க; வாழ்க
குகையில் வாழ் சிங்கமன்ன
கொற்றவ வாழ்க செல்வம்
வகைவகை யாகத் தேடி
வாழவே வைப்போய் வாழ்க
தகைமையால் தரணி யாளும்
தந்தைதாய் போன்றோய் வாழ்க.

புலவர்—3

சத்திய கீர்த்தி என்னும்
தனிப்பெரும் தலைவா வாழ்க
உத்தம! உயிரைப் போல
உண்மையைக் காக்கும் செல்வா
வித்தகா கல்வி கேள்வி
விளங்கிட விளங்கும் வல்லோய்
நித்திய வாழ்வு பெற்றே
நிலமிசை நீடு வாழ்க.

அரசன்:

அறநெறி வழுவா நல்ல
அமைச்சர்காள்; பெரியோரே பே
ரறிவுடைச் சபையோரே நல்
ஆட்சியை நடத்து தற்கு
உறுதுணை யாக நிற்கும்
உத்தமத் தோழர்காள் ஊர்
தொறும் நீதி காக்கும் நல்ல
தொண்டர்காள் வணக்கம்; வாழ்க

என்னரும் முதல மைச்ச!
யாவரும் நலமா மக்கள்
இன்னலே யின்றி இங்கே
இன்பமே யடை கின்றாரா?
கன்னலை யொத்த மாதர்
கற்புடன் வாழ்கின் றாரா?
அன்னியர் எமக்குக் கப்பம்
அடிக்கடி கொடுக்கின் றாரா?

மந்திரி:

அரசே உன்ஆட்சியில் எவ்
அநீதியும் இல்லை; எல்லாம்
கிரமமாய் நடக்கு திங்கே
கிஞ்சித்தும் குறையே காணோம்;
வருபவர் போவோர் எல்லாம்
வாழ்க நின்கொற்றம் என்றே
பெருமையாய் வாழ்த்தும் போது
பேசவா வேண்டும்; ஐய

அரசன்;

நன்று நல்லமைச்ச: எங்கள்
நாட்டிலே புதின மேதும்
உண்டு கொல்; உரைக்க வேண்டும்

மந்திரி:

உண்டு: நல்அறவோன் என்பான்
அண்டை நாடதற்குச் சென்று
அரிதெனச் சேர்த்த செல்வம்
கொண்டொரு கோயில் கட்டிக்
கும்பாபிஷேகம் செய்தான்.

அரசன்:

இதுபோற்றற் குரிய தாகும்
இறைபக்தி வாழ்க; நன்றே.

மந்திரி:

அதுவல்லப் புதினம் வேந்தே
அவன் உங்கள் பெயரினலே
நிதம்அன்ன தானம் செய்ய
நிபந்தமும் விதித்தே யுள்ளான்
இதை அவன் அரசாள்வோர்க்கு
இதுவரை இயம்ப வில்லை

அரசன்:

புதுமைதான்; புகழ் விரும்பாப்
பொதுநல வாதி...

மந்திரி:

... ... ஆமாம்
நிதியென ஐந்து காசு
நீட்டிய பேர்கள் கூட
அதுபறை சாற்றப் பட்டு
அகிலமும் அறிதல் வேண்டும்
எனஎதிர் பார்க்குங் காலத்
திவனுமே வாழு கின்றான்

மந்திரி 2:

மன்னவ! எனக்கோர் ஐயம்
அரசன்:
மந்திரி சொல்க

மந்திரி 2:

... ... வேந்தே!
அன்னவன் ஆல யத்தை
அமைத்ததைப் போற்ற வேண்டும்
என்றாலும் அவனிடத் தோர்
இறுமாப்பு இருத்தல் வேண்டும்

அரசன்;

என்ன? நீசொல்லு கின்றாய்?
யாவரும் அறியக் கூறு

மந்திரி 2:

இதுவரை இந்த நாட்டில்
எந்தவோர் நிகழ்ச்சி யேனும்
அதிற் பங்கு பற்றுவண்ணம்
அரசரை அழைப்ப துண்டு
நிதிபடைத் திட்டோன் என்னும்
நெஞ்சுரம் போலும்; அன்னன்
புதுமையாய் நடந்து கொண்டான்
பொறுத்திட வேண்டும் என்னை

அரசன்:

மதிமிக வுடைய மூத்த
மந்திரி யாரே! நீங்கள்
இதுபற்றி யுரைக்க ஏதும்
உள்ளதோ; எடுத்துக் கூறும்

மந்திரி:

அதிபதி யான எங்கள்
ஐயனே! அறிவோன் நல்லன்
நிதிபதி என்னும் எண்ணம்
நெஞ்சிலே சிறிது மில்லான்

ஆண்ட வனிடத்தில் பத்தி
அதிகமாய் உடையோ னன்றி
வேண்டியோர் வேண்டார் என்னும்
வேறுபா டறியா நெஞ்சன்
ஈண்டிதைப் பெரிதாய் எண்ணல்
இறைவ! உன்தகுதிக் கேற்ற
மாண்பன்று; மதிப்பு மன்று
மற்றவர் நகைக்கக் கூடும்

(14ம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகம்பற்றி கண்ணதாசன் கருத்துக்கள்

- தேவனை ஒரு தடவை சைத்தான் பிடித்துக் கொண்டான். தேவன் ''என்னைவிட்டுவிடு'' என்று கெஞ்சினன். சைத்தான் ''எப்படியாவது உன்னை விடுவித்துக்கொள்'' என்று கெஞ்சினல், கிரேக்கர்கள் இதற்குத்தான் ஜனநாயகம் என்று பெயர் சூட்டினர்கள்.
- மக்கள் ஒரே ஒரு அயோக்கியனைச் சமாளிப்பதற்கு பெயர் சர்வாதிகாரம்; ஒவ்வொரு அயோக்கியனையும் சமாளிப்பதற்குப் பெயர் ஜனநாயகம்.
- பிரிட்டிஷ் பாராளுமன்ற ஜனநாகயத்தைத் தழுவி நமது ஜனநாயகத்தை அமைத்தது எப்படியிருக்கிறது? பசுக்களை மனிதர்கள் கூடி ஒரு கன்று பிறந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது.
- கழுதையையும்குதிரையையும் தோற்றத்தில் ஒரே மாதிரிப் படைத்திருக்கிறன் இறைவன். இதிலிருந்து அவன் முன்கூட்டியே ஜனநாயகத்தைப் பற்றிச் சிந்தித்திருக்கிறன் என்பது தெரியவருகிறது.
- யானையின் பலத்தைக் கழுதையிடமும் மயிலின் அழகைக் காக்கையிடமும், குயிலின் கானத்தைக் கோட்டானிடமும் எதிர்பார்க்கும் தத்துவத்திற்குப் பெயரே ஜனநாயகம்!
- தலைவர்கள் ஜனங்களை ஏமாற்றுவதற்குப் பெயர் ராஜதந்திரம். ஜனங்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதற்குப் பெயர் ஜனநாயகம்
- சம்பாதிக்காத மனைவி சம்பாதிக்கும் கணவனை மிரட்டுவதற்குப் பெயர் குடும்பம், புத்தியில்லாத மந்திரி புத்தியுள்ள மந்திரியை மிரட்டுவதற்குப் பெயர் ஜனநாயம்.
- இளைஞர்கள் ஓடுவார்கள், முதியவர்கள் நடப்பார்கள், தேசத்துக்கு ஓடுகிறவர்கள் தேவையில்லை. நடப்பவர்கள்தான் தேவை அதுவும் வெள்ளம் வரும்போது கூடமெல்ல நடப்பவர்கள்தான் தேவை. வாழ்க ஜனநாயகம்!
- ஜனநாயகத்தைப் போல் உயர்ந்த தத்துவம் உலகத்தில் எதுவுமில்லை. கையில்லாதவனிடம் கூர்மையான வாளைச் சமர்ப்பிப்பது அது ஒன்றே.
- பொலிஸ்காரன் திருடனைக் கைது செய்வதற்குப்பெயர் சட்டம்: திருடன் பொலிஸ்காரனைக் கைது செய்வதற்குப் பெயர் ஜனநாயகம்.
- ஜனநாயகத்திற்கு நீ தகுதியா* வேண்டுமா? சதுரங்கத்தில் காய்களை நகர்த்திப் பழகு தகுதி வந்ததும் தலைவனாக வேண்டுமா? உன்னோடு ஆடுபவனையே நகர்த்திப் பழகு.
- உணவு வகைகள் கலந்து விட்டன; நாகரிகம் கலந்து விட்டது; மொழிகள் கலந்து விட்டன; இன்னும் ஒன்றோடொன்று கலக்காமல் இருப்பவை - ஜனநாயமும் உண்மையும் தான்.
- நான் அலெக்சாண்டர், நெப்போலியன், ஹிட்லர், முசோலினி ஆகியோருக்குக் கோவில் கட்ட விரும்புகின்றேன். நமது ஜனநாயகத்தைப் பார்த்த பிறகு அவர்களிடம் எனக்குள்ள மரியாதை பன்மடங்கு அதிகரித்து விட்டது.
- இன்னும் மருந்து கண்டு பிடிக்கப்படாத நோய். வாத நோய். ஜனநாயகமும் அந்த வாத நோயால் தான் (வாதிக்கின்ற நோயால்) அவதிப்படுகிறது. உடம்பு வாதம் ஊரைக் கெடுப்பதில்லை. வாக்கு வாதம் அந்த வேலையைச் செய்து கொண்டிருக்கிறது!
- வளைந்த சாலைகளில் கார் மெதுவாகப் போகிறது. நேரான நெடுஞ்சாலைகளில் கண்மண் தெரியாமல் போய் விபத்துக்குள்ளாகிறது. கட்டுப்பாடில்லாத ஜனநாயகம் நெடுஞ்சாலைப் பயணம் போல!
- வயிற்றுக்குச் சோறு வேண்டுமா? நாக்குக்குப் பேச்சு வேண்டுமா! சோறு வேண்டுமென்றால் ரஷ்ய பாணியில் ஜனநாயகத்தைத் திருத்துங்கள். பேச்சு வேண்டுமென்றால் இதே ஜனநாயகத்தைக் கட்டி அழுங்கள்.

தொகுப்பு: என். எஸ்.

## நோயணுகா விதிகள்

நோய் வந்தபின் நீக்குவதிலும் பார்க்க அது வருமுன் காப்பது சுலபம் இதைக்கருதியே பழைய காலத்துச்சித்தர்கள் நோயணுகா விதிகளைப் பாடியுள்ளார்கள். 'நமனார்க்கு ஏது வேலை நாமிருக்குமிடத்தில்' என்று வீரம் பேசினர்கள். அந்த வீரத்தில் சந்திரனைப் பிடித்துப் பந்தாய் அடிப்போம் என்றார்கள். காட்டு மிருகங்களைக் கையால் அடித்துத் துரத்தினர்கள். யோக வலிமையினலே சிவனை நெஞ்சில் இணைத்தார்கள்.

யோகம் என்பதுவும் இணைப்புத்தான். காற்றினலும், நீரினலும் உணவினலும், சுற்றாடலாலும் நோய்கள் உண்டாகின்றன. இவற்றைத் தூய்மையாக்கிக் கொண்டால் நோய் வராது காற்றுமாசடையாமல் கவனமெடுத்தலும், நல்ல முறையில் சுவாசித்தலும் நன்மை பயப்பன. படுக்கும் போது சுவாசத்தை இடது கைப்பக்கம் சரிந்து படுத்தல் முறை. நீர் பருகும்போது அதை நன்றாகக் காய்ச்சி ஆறவிட்டு வடித்துப் பருகுதல் முறை உணவு கொள்ளும் போது வேளை அறிந்து தேவை அறிந்து அளவோடு அமைதியாக, ஆறுதலாக உண்ணல் முறை உணவு சமவுணவாய்ச் சத்துகள் எல்லாம் சரிவர அமைந்ததாய் இருத்தல் அவசியம். சத்துக்களில் உயிர்ச்சத்து என்னும் விற்றமின் அடங்கிய இலை, தழை, கீரை காய்கறி பழங்கள் என்பன அடங்குதல் வேண்டும்.

தொகுப்பு:
க. கனகராசா ச. நீ.

# மெக்சிக்கோ தரும் திடுக்கிடும் தகவல்கள்!

அனைத்து நாடுகளிலும் உள்ள ஓர் ''இதயபாரம்'' போன்ற பிரச்னை ஒன்று உண்டென்றால் அது நிச்சயம் சனத்தொகைப் பிரச்னையே தான். இந்தச் சனத் தொகையைக் கட்டுப்படுத்தும் மாநாடொன்று கடந்த வாரம் வட அமெரிக்க நாடான மெக்சிக்கோவில் நடைபெற்றது. ஏறக்குறைய எல்லா நாடுகளும் பங்கு பற்றின. ஒவ்வொரு நாடுகளும் தமக்குள்ள சனத்தொகைப் பெருக்கப் பிரச்னையையும் அவற்றால் ஏற்படும் விளைவுகளும், அதற்கு தாம் எடுத்த நடவடிக்கைகள் பற்றி விரிவாக விளக்கியிருந்தன. இந்தப் புள்ளி விபரங்களைக் கேட்கும் போது ஒருகணம் திகைப்புறுகிறோம்.

## சீனாவில்

## கட்டுப்பாடு

உலகில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட ஒரே நாடு எனும் பெருமை பெற்ற சீனாவில் இன்றுசுமார் 100கோடி பேர் வரை வாழ்கிறார்கள், அத்துடன் பெரியதொரு திட்டத்தின் கீழ் மக்கள் தொகையைக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ள நாடு எனும் பெருமையையும் சீனாவே பெறுகிறது.

ஆனால் இந்தப் பெருமையை கொண்ட சீனமக்கள் பெற்ற அனுபவங்கள் சொல்லிலடங்காது கடுமையான சட்டங்களின் துணைகொண்டுதான் சீனமக்கள் தொகை கட்டுப்படுத்தப்பட்டது' ஒரு தம்பதியருக்கு ஒரு பிள்ளை மட்டும் பெற்றுககொள்ளலாம் எனும் சட்டம் மிக முக்கியமானது இதற்கு மேல் பெறும் பிள்ளைகளுக்கு கல்விச் சலுகைகள் ரத்து, உணவுப் பங்கீடு ரத்து, வேலை வாய்ப்புச்சலுகைரத்து, பெற்றோர்க்குப் பதவியுயர்வில் பாரபட்சம் போன்ற கடுப் சட்டங்களின் அமுலினால் மக்கள் பெரிதும் வாட்டி எடுக்கப்பட்டனர் சீனமக்கள்தொகைக் கட்டுப்பாட்டுஇலாகாவின் கூற்றுப்படி இது போன்ற கடும் சட்டங்கள் இன்னும்சுமார் இருபது இருபத்தைந்து வருடங்களுக்குத்தான் இருக்குமாம். ஏனெனில் சீனாவின் பரப்பளவிற்கேற்ப சனத்தொகை அதற்குள் கட்டுப்படுத்தபட்டுவிடும் என்கிறார்கள். இப்படிப்பட்ட சீனாவில் அப்படியும் சில சட்டங்கள் இல்லாது போனால் தீர்க்கவே முடியாத மாபெரும் பிரச்னைகள் தோன்றியிருக்கும். உலகில் அதிகளவாகஅதாவது 4 கோடி இராணுவத்தையுடைய நாடும் சீனா தான்.

## சோவியத்தில்

## ஊக்குவிப்பு

சீனாவைப்போன்ற மற்றொரு கம்யூனிஸ்ட் நாடான சோவியத்ரஷ்யாவில் நிலைமை தலைகீழானது. பரப்பளவில் உலகின் ஆறில் ஒரு பங்கை ரஷ்யா வகிக்கிறது. ஆனால் சனத்தொகை அதற்கேற்பளவில் இல்லை. குறைந்தளவாக இருப்பதால் அங்கு அதிக பிள்ளைகள் பெற்றுக்கொள்ளும்படி நல்ல ஊக்கத்திட்டங்கள் அமுலில் உள்ளன. அதிக பிள்ளைகள் பெறும் தாய்மாருக்கு வருடா வருடம் ''வீரத்தாய்'' பதக்கம் வழங்கப்படுகிறது. அத்தோடு அதிக பிள்ளைகள் பெற்றவர்க்கு சலுகைகளும் வசதிகளும் அதிகம் ஏற்படுத்திக் கொடுக்கிறது ரஷ்யஅரசு. மற்றொரு கம்யூனிஸ்ட்நாடான கிழக்கு ஜேர்மனியிலும் இதே நிலைமைதான் நடைபெறுகிறது.

## இந்தியாவால்

## சமாளிக்க முடியவில்லை

சனப்பெருக்கத்தில்சீனாவுக்கு அடுத்த இடத்தை மற்றோர் ஆசியநாடான இந்தியாபெறுகிறது. இந்திய சனத்தொகை 70 கோடியையும் தாண்டிவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்தியாவைப் பொறுத்த மட்டில் சனப்பெருக்கம் ஒரு பெரிய சவால் என்றால் அத்தோடு இணையும் மற்றொரு சவால் வேலையில்லாப்பிரச்னை, இவ்விரண்டையும் சமாளிக்க இந்தியா பல்லாண்டு காலமாகப் பெரும் பிரயத்தனம் எடுத்து வருகிறது. இருப்பினும் பல்வேறு சமூக அமைப்புகளையும்' 23 மொழி பேசும் மக்களையும் உடைய இந்தியாவில் இப்பிரச்னைகளைத் தீர்ப்பதுபெரும் தலையிடியாகவே உள்ளது. இந்திய பிறப்பு வீதம் 6 4 ஆகும் புள்ளிவிபரங்களின்படி இது தொடர்ந்து 60 ஆண்டுகளுக்கு தொடருமாயின் இந்திய சனத்தொகை 1500கோடி அளவுக்குப் பெருகிவிடும் என அறியக்கிடக்கிறது. அப்போது காடுகள், வயல்கள் இல்லாமல் அங்கே வீடுகள், குடியிருப்புகள் வந்தாலும் வந்துவிடுமாம். அவ்வளவுக்கு அவ்வளவு இடநெருக்கடி தோன்றுமாம்.

பங்களாதேஷிலும் இந்த சனப்பெருக்கப் பிரச்னை ஒரு பெரும் தீர்க்கமுடியாத ஒன்றாகவுள்ளது அங்கே பிறப்பு வீதம் 6.7 இதன விளைவாக வேலையின்மை பட்டினிச்சாவு என்பன அங்கே தலையாய பிரச்னைகள் ஆகிவிட்டது.

## அமெரிக்கா

## குறைந்த வீதம்

அமெரிக்காவைப் பொறுத்த மட்டில் இறப்பு வீதம் 1 7 தான். இருப்பினும் அங்கே பல இலட்சம் பேர் வேலையின்றி அலைகின்றனர். அமெரிக்காவில் குற்றச்செயல்கள் அதிகரிக்க வேலையின்மையும் ஓர் முக்கிய காரணம் ஆபிரிக்க நாடுகள் ஆன அங்கோலா, மத்திய ஆபிரிக்கா போன்றவற்றில் தினமும் பல்லாயிரம் மக்கள் பட்டினியால் உயிரிழக்கிறார்கள். பிறந்த சில நாட்கள் சென்ற குழந்தைகள் கூட தாய்ப்பாலின்றி மடிகின்றன. இதற்கெல்லாம் மூல காரணம் அங்கேயுள்ள சக்தி மீறிய சனப்பெருக்கம் என்கிறது. உலக சுகாதார தாபனம் W. H. O. மெக்சிக்கோ மாநாட்டுத் தகவல்களின்படி இன்னும் 7 ஆண்டுகளில் சுமார் 65 கோடி பேர் உலகில் வேலைவாய்ப்புப் பெறும் வயதை அடைவர். ஆனால் உரிய வேலைவாய்ப்புக் கிட்டுமா? தினமும் 40 கோடி முதல் 60 கோடி வரையிலான மக்கள் பட்டினியுடன் இரவில் படுக்கச் செல்கிறார்கள். இவர்கள் ஆபிரிக்கா, ஆசியா நாடுகளைச் சேர்ந்தவர்களே. பட்டினியை தணிக்க பச்சைத் தண்ணியையே இவர்கள் குடிக்கிறார்கள். இந்தப் பச்சைத் தண்ணீர்கூட பெரும்பாலான ஆபிரிக்ககிராமங்களில் 44 5% அசுத்தமானது என்றும் இதனாலேயே அவர்கள் நோய்களினால் குறைந்த ஆயுளையுடையவர் என்றும் மெக்சிக்கோ மாநாடு கூறுகிறது. உரிய முறையில் சனத்தொகை கட்டுப்படுத்தப்படாது விட்டால் 35 ஆண்டுகளின் பின் சுவாசிக்கும் காற்றுக்கூட அசுத்தமாகிவிடுமாம். பூமியின் தட்பவெப்ப நிலையே மாறி காடுகள் அழிப்பால் மழையே இன்றியும் போகலாம் என்றும் கற்பனைக் கெட்டாத பயங்கர விளைவுகள் ஏற்படலாம் என்றும் மாநாடு எச்சரிக்கின்றது.

ஆர். எம். கிருபாகரன்

# இலக்கியத்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டங்களும் அவற்றின் வழிப்பூசல்களும் மிகும். இதனால் மக்கள் நலம் பேணப்படுவதற்குப்பதில் பாதிப்படைவது வெளிப்படை இவ்வாறு இலக்கியத்துறையில் வேறுபட்ட கருத்துடைய குழுக்கள் அரசியற் கட்சிகளைப் போன்று 'முற்போக்கு', 'பிற்போக்கு' என்று கட்சிகட்டிக்கொண்டு போராடிவருவது இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு.

[3] டார்வினின் கொள்கைக்கமைய குரங்கிலிருந்து தோன்றிய மக்களினம் எவ்வாறு வாழவேண்டுமென மார்க்சும் ஏஞ்சலும் சரியாகவும் அறுதியாகவும் கூறியிருப்பதாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிப்படையாகச் சொன்னால் பொதுஉடமை அமைப்பே மக்களினத்துக்கு ஏற்றமிகச் சிறந்த வாழ்க்கை முறை என்பது இதன் பொருள்.

## வேறுபாடுகள்

மக்கள் தம் இயல்பில் திறனில் உடல் அமைப்பில் அதன் வலுவில் எப்போதும் வேறுபாடுடையர். இது இயற்கை இத்தகைய வேறுபாடுகளோடு கூடிய மக்கள் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு அற்றஒரு நிலையைத் தோற்றுவிப்பது எப்படி? அதற்கென ஒருவழியை வகுத்துக்கொள்ளினும் அதனைச் செயற்படுத்த முனையும்போது தலைமை தாங்கி வழிநடாத்திச் செல்பவரும் அவரின் கீழ் பல்வேறு படிகளில் பிரிந்துநின்று செயற்படுபவர்களுமாக மக்கள் பாகுபாடடைகின்றனர் அதாவது பணிப்போரும் பணிவோரும் இன்றியமையாதவர்களாகின்றனர். இவ்வாறு இயங்கும் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு தலைகாட்டாது என்றும் சமத்துவமே நிலவும் என்றும் சொல்லாட யாராவது முனைவார்களா? அன்றியும் பொது உடமைக் கோட்பாட்டின் படிக்கு சமுதாயத்துக்கு வேண்டியன அனைத்தும் முன்கூட்டியே திட்டமிட்டுச் செயலாற்றப்படுதல் வேண்டும். திட்டமிட்டுச் செயலாற்றும் போது பல்வேறுபடிகளிலுமுள்ள செயற்திட்டங்களில் மேலாண்மை செய்வோரும் அவர்களுக்குக் கீழ் செயலில் ஈடுபடுபவர்களுமாக மக்கள் பல்வேறு படிகளில் பிரிந்து நிற்கவேண்டிய தேவை ஏற்படாதா? இதனைத்தடுப்பதோ அன்றேல் தவிர்ப்பதோ இயலுமா? ஆகவே பொது உடைமை அமைப்பை நாடும் ஒரு சமுதாயத்தில் பாகுபாடு ஏற்றத்தாழ்வு என்பன அகன்று சமத்துவம் நிலவவழி பிறக்கும் எனமுடிவு கட்டுவது தவறு என்பது வெளிப்படை. பொது உடமைக் கோட்பாடு இலக்கியலான ஓர் உயர்ந்த வாழ்க்கை முறையைக் குறிப்பது ஆனால் நடைமுறையில் கடைப்பிடிப்பதற்கு ஊறாக ஆட்சிமுறைத் தேவைகளும் இயற்கையாகவே வேறுபடும். மக்களியல்பும் அமைகின்றன. பொது உடமை நிலவுவதாகக் கூறப்படும் நாடுகளில் இன்று காணப்படுவது பொது உடமைச் சமுதாய அமைப்பன்று: ஒருவகை முடியாட்சியே என்க.

அன்றியும் மக்கள் ஆய்ந்து வெளியிடும் கருத்துக்கள் எக்காலத்தும் முடிந்த முடிபாக அறுதியாக இருந்ததில்லை. கால ஓட்டத்தில் புத்தறிவின்

(15ம் பக்கம் பார்க்க

# மண்டைதீவுப் பகிடி

★

ஒருவர்; மண்டைதீவு பிடிக்கவில்லை என்று சொன்னீர்களே அப்படியானால் எங்கள் நெடுந்தீவுக்கே வந்துவிடுங்கள்.

மற்றவர்: நான் ஊரைச் சொல்லவில்லை எங்கள் வானொலியைச் சொன்னேன்.

★

ஒருவர்: உங்கள் பேரப் பிள்களை வீட்டோடு வைத்திருக்கிறீர்களே, ஏன் அவர்களின் சங்கீதத்தை இரசிக்கிறீர்களா?

மற்றவர்: மண்டைதீவு வானொலி இயங்காததால் இனி இவர்களின் சங்கீதத்தை தானே இரசிக்க வேண்டும்.

ஒருவர்: ஏன் மண்டைதீவு வானொலி நிலையம் இயங்கவில்லை?

மற்றவர்: றைக் கோடிங்பார் காரரையும் வாழவைப்பதற்காக.

இ. பாலகுமார்

★

ரமேஷ்; என்ன கணேஷ்! பழைய வீட்டை விலக்கு வாங்கினீர். பாவித்த ரீ. வி. யை எடுத்தீர். நண்பரின் ஸ்கூட்டரை காசு கொடுத்து எடுத்தீர். இப்போது வந்து நாளை கலியாணம் என்கிறாயே. பெண் யார்?

கணேஷ்; ஒரு விதவையையே தெரிந்துள்ளேன்.

சபா. புஷ்பநாதன்

# நாகநாதன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் காங்கிரஸ் தலைவரிடம் தோல்வியடைந்தார். 1956 ஆம் ஆண்டு நடந்த மூன்றாவது பாராளுமன்றத் தேர்தலிலும் ஜி. ஜி யை எதிர்த்து டாக்டர் நாகநாதன் போட்டியிட்டார். அதிலும் அவர் தோல்வி கண்டார்.

நான்காவது பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் புதிதாக உருவாக்கப்பட்ட நல்லூர்த் தொகுதியில் நின்று 1960ம் ஆண்டு மார்ச் மாதத்திலும் ஜூலை மாதத்திலும் போட்டியிட்டு இரண்டிலும் வெற்றியீட்டினார். 1965ஆம் ஆண்டு நடந்த ஐந்தாவது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தலிலும் டாக்டர் நாகநாதன் நல்லூர்த்தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1958ஆம் ஆண்டு அவசர கால நிலையிலும் 1961ஆம் ஆண்டு மறியல் போராட்டத்தைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட அவசர காலநிலையிலும் இதர தமிழரசுக்கட்சித் தலைவர்களுடன் டாக்டர் நாகநாதனும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

பாராளுமன்றத்திலும் மூதவையிலும் தமது பங்கைச் சிறப்புறச் செய்து முத்திரை பதித்தவர் டாகடர் நாகநாதன்.

# ரீகனின் புதல்வி திருமணம்

அமெரிக்க ஜனாதிபதி ரீகனின் கடைசி மகளது திருமண விழா 17 நிமிடத்தில் முடிந்தது திருமணவிழா விழாவில் 137 பேர் மட்டும் அனுமதிக்கப்பட்டனர். பத்திரிகையாளருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மணமக்களை ரீகன் தம்பதிகள் வாழ்த்தியதும் அவர்கள் தேன்நிலவுக்குப் பயணமானார்கள்.

-சச்சி

●

ஒருவர்: என்ன நடந்தது? ஏன் எல்லோரும் ஓடுகிறார்கள்?

பையன்: மூலைக்கடையில் வெங்காயம் விற்கிறார்கள், அதுதான்.

— கிரி

# உலகம் கெட்டுப்போச்சு

உலகம் கெட்டுப்போச்சு- மனித
உள்ளம் பட்டுப் போச்சு!
கலகம்! கொள்ளை! குழப்பம்! இவையே
உலக மெல்லாம் பேச்சு

சதியே இங்கு மூச்சு!- அந்த
சத்தியம் சமாதியா யாச்சு!
நீதிதான் எங்கு போச்சு?- நல்ல
நேர்மை யென்ன ஆச்சு?

தர்மம் செத்துப் போச்சு!- எல்லாம்
தலைகீழ் நியாயம் ஆச்சு!
இரக்கம் அன்பு தேய்ஞ்சு- இங்கு
அரக்கத் தனங்கள் ஆச்சு!

தபோநிதி சண்முகநாதன்

## தருமத்தின்குரல்

(13ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரி 2:
மந்திரி யாரே உங்கள்
மறுமொழி நன்றென் றாலும்
இந்தநாள் வரைக்கும் உள்ள
இயல்பினை பரபை அன்னான்
சிதை செய்யாது விட்ட
செயல்மிகப் பெரிதே; ஏன்தான்
விந்தையாய் அவனைக் காக்க
விரும்புறீர் தெரிய வில்லை

மந்திரி: 1
நல்லன செய்தோன் தன்னை
நாடாள்வோன் அழைத்து வந்து
கொல்லவா வேண்டு மென்று
கூறுறீர்

மந்திரி 2:
... ... இல்லை இல்லை
பல்புகழ் படைத்தோ ரேனும்
பாராட்டத் தகுந்தோ ரேனும்
தொல்மர பதனை மாற்றப்
படாதெனச் சொல்லு கின்றேன்.

(வளரும்)

## எண் சோதிட நூல்கள்

இலங்கையில் இலக்கியப் படைப்புக்களைவிட சோதிடை நூல்களே அதிகமாக வெளிவருகின்றன என்ற உண்மை கணக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டால் தெரியவரும்.

சோதிடர் அன்புஜி எழுதிய அதிர்ஷ்ட எண்சோதிடப் பகுதி ஒன்று அண்மையில் வெளிவந்துள்ளது. எண்சோதிடம் பற்றிய பல புதிய தகவல்கள் நூலில் இடம்பெற்றுள்ளன.

எஸ். எஸ். கே

Shanthi (JAFFNA)
Daily 10-30, 2-30 and 4-45
MOVING VIOLATION
(Color)
(Action Thrilling Suspense)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
என் தம்பி

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ரவிச்சந்திரன் ராஜஸ்ரீ
உத்தரவின்றி உள்ளே வா

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜிஆர். - ஜெயலலிதா
என் அண்ணன்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவகுமார் - சுஜாதா
அன்னக்கிளி
(புத்தம் புதிய பிரதி-கலர்)

வின்சர் (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30, 6-15
எம்.ஜிஆர். - ஜெயலலிதா
நம்பியார்
அன்னமிட்டகை
[புதிய பிரதி]

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணம்மா
மனோகரா
(புதிய பிரதி)

றீகல் [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30, 6-30
Rex Harrison..
Darmendra..
Zeenath Aman..
in
SHALIMAR
Action-Packed-
English Movie

லிடோ யாழ் நகர்
தினசரி 10-30., 2-30 6-30,
ஜெய்சங்கர்
நீ ஒரு மகராணி

வெலிங்டன்
(யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எஸ். எஸ். ஆர் - விஜயகுமாரி
நீங்காத நினைவு
[புதிய பிரதி]

## இலக்கிய---

[14ம் பக்கத் தொடர்ச்சி]

தன்மைக்குத் தக கருத்துக்களும் மாறும். அறிவியற்கருத்துக்களே இதற்குவிலக்கு அல்ல இந்நிலையில் சமுதாய வாழ்க்கை முறைபற்றிய வரையறையற்ற நெகிழ்ச்சியான கோட்பாடுகளின் நிலைபற்றிக் கூறுவதற்கு யாதுளது? வேதம், உபநிடதம் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களையும் ஆய்ந்து தெளிதல் வேண்டுமென மார்க்சின் கொள்கையால் ஈர்க்கப்பட்ட இளைஞராயிருந்த காலத்தில் பேராசிரியர் கைலாசபதி, தனது 'அடியும் முடியும்' என்னும் நூலில் மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார். இவர் குறிப்பிட்டவாறே இவற்றை ஆய்ந்து தெளிதல் நன்றே இதேபோன்று மார்க்சின் பொது உடமைக் கோட்பாட்டையும் கால ஓட்டத்தில் பெற்ற புத்தறிவின் துணைக்கொண்டு அலசி ஆய்ந்து புதிய முடிபுகளைக் காணுதல் கூடாதா? அவ்வாறு ஆய்ந்து புதிய கருத்துக்களை வெளியிடுவோரை அவற்றைக் கடைப்பிடிப்போரை 'சீராய்வினர்' (Revisionist) என எள்ளி நகையாடுவதும், பொது உடமைக் கோட்பாட்டின் தீவிர எதிரிகளாகக் கருதுவதும் எதற்காக? சீனாவில் பொது உடமைக் கோட்பாட்டைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க முயன்ற மாஓ அதே கோட்பாட்டைத் தழுவி நிற்கும் இன்னொரு நாடான சோவியத் ரசியாவைத் சீராய்வில் வீழ்ந்து சீரழியும் நாடு என எள்ளி நகையாடிப் பகைமை பாராட்டி வந்ததை இந்த உலகு நன்கறியும். மாஓவின் மறைவுக்குப்பின் இன்று சீனாவில் காணப்படும் மாற்றங்கள் எத்தகையவை? அவை பொது உடமையை நாடிச் செல்பவையா? அல்லேல் அதனின்றும் விலகிச் செல்பவையா?

### காலப்போக்கும் கருத்து மாற்றமும்

[4] மேலே தெரிவிக்கப்பட்ட கருத்துக்களைப் பின்புலமாகக் கொண்டு நோக்கும்போது, ஓர் இலக்கியவாதி ஒரு சார்புடையவனாக மாறி தான் போற்றும் ஒரே கோட்பாட்டை முன்னிறுத்தி எப்போதும் சமுதாயத்தை அதனூடாகவே நோக்குபவனாக இருந்தால் ஏற்படக்கூடிய விளைவு எத்தகையதென்பது தெளிவாகிறது. காலப்போக்கில் கருத்துகள் மாறித்தெளிவு ஏற்படுவது இயற்கை அதற்கேற்றவாறு உள்ளத்தைத் திறந்த நிலையில வைத்திருக்கவேண்டியது அறிவுடைமை. புத்தறிவின் ஒளியில், தமது மனக்கோலங்களையும், கருத்துக்களையும், சீர்செய்துகொள்ளும் பக்குவமில்லாதோர் கால ஓட்டத்தில் சமுதாயத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களை எப்படி உணர்ந்து தெளிய முடியும்? ஒரு சார்புடைய இலக்கியவாதியைப் போன்றே இலக்கியத் திறனாய்வாளனும் இருந்தால் யாது நிகழும்? அவரது ஆய்வு நடுவுநிலை பிறழ்வு கருத்துக்களின் வெளியீடாக இருக்குமா? அல்லது தான் சார்ந்த கோட்பாடுகளுக்கு இயைந்த சார்புடைய கருத்துகளாக இருக்குமா? எண்ணிப்பார்க்க.

இலக்கியம் ஒரு கவின் கலை அது மக்களுக்காகத்தான் என்பதில் கருத்து வேறுபாடெதுவும் இல்லை ஆதலின் மக்கள் நலத்தில் நாட்டமுடையோராய் ஒரு தலைசார்பினை ஒதுக்கி உண்மையாக உண்மையைத் தேடிக் கலையை வழிநடத்திச் செல்லும்போது கலை தன்னளவில் மக்களுக்கு நன்மை பயப்பது தவிர்க்க முடியாததாகின்றது. இந்த நற்போக்கு நெறியின் கலையை வழிப்படுத்தவேண்டியது கலைஞன் எனத் தன்னைக் கூறிக்கொள்ளவிளையும் ஒவ்வொருவரதும் தலையாய கடனாகும்.

## கிளிநொச்சியின் அருளூற்றான

# முருகன் திருவிழா ஆரம்பம்

கிளிநொச்சியின் பெருங்கோயில் என வழங்கும் கிளிநொச்சி கந்தசாமி கோயில் திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

### நா. சோதிநாதன்

கிளிநொச்சிவாழ் சைவ மக்களின் வழிபாட்டிற்கென 1920 தசாப்தத்தின் நடுப்பகுதிகளில், சேர். பொன். இராமநாதன் அவர்களால் ஒரு கோவில் கட்டுவதற்கான காணிக்கு விண்ணப்பஞ் செய்யப்பட்டு, சீமாட்டி இராமநாதன் அவர்களின் பெயரில் காணி பெறப்பட்டு, கௌரவ சு. நடேசபிள்ளை அவர்களின் ஆலோசனையின் பேரில் கட்டப்பட்ட கோவில் கிளிநொச்சிக் கந்தசாமி கோவில். கிளிநொச்சியில் இரணைமடுக்குளம் கட்டப்பட்ட காலத்தில் முதலாவது அரச திணைக்களமாகக் கிளிநொச்சி நீர்ப்பாசனக் கந்தோர் அமைக்கப்பட்டது. அத்திணைக்கள ஊழியர்களாலும் அக்காலத்தில் கண்டியுடன் கிளிநொச்சிக்கு ஊடாக நெல்வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வடமராட்சி தென்மராட்சிப் பகுதி நெல்வியாபாரிகளாலும் ஆதரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டதுஇக்கோவில்.

படிப்படியாக வளர்ச்சி பெற்றுவந்த இக்கோவிலில் வெற்றிவேலு விதானையாரின் பராமரிப்பில் இருந்தபோது 1950களின் ஆரம்பத்தில் பத்து நாள் அலக்காரத் திருவிழா நடத்தப்பெற்றது. இப்பகுதிக் குடியேற்ற வாசிகள் இத்திருவிழாக்களை நடத்தினர். பின்னர் 1960களில் முன்னைநாள் கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் திருப்பணிகள் நடைபெற்றன. அதன் பின்னர் 1970களின் ஆரம்பத்தில் கிளிநொச்சியின் தலைசிறந்த கொடை வள்ளல் திரு. ஆ. சி. முருகேசு அவர்களைத் தலைவராகவும் பிரபல வர்த்தகரும் கோவில் திருப்பணிகளுக்குப் பெருமளவில் நன்கொடை வழங்கியவருமான திரு. வே. இ. தம்பிப்பிள்ளை அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு அமைக்கப்பட்ட சபை திருப்பணிகளை ஓரளவு நிறைவு செய்து 1972ல் கும்பாபிஷேகம் நடாத்தியது.

இக்கும்பாபிஷேகத்தின் பின்பு ஆவணி ஷஷ்டியில் கொடியேறி, பூரணைக்குத் தீர்த்தத்திருவிழா நடைத்தக்கதாக பத்துநாள்பெற திருவிழா நடைபெற்று வருகிறது.

இவ்வாண்டு உற்சவம்

(16ம் பக்கம் பார்க்க)

## யோகமுனி பாடியது

அன்றிலேன் இரக்கமில்லேன்
அடியர்பால் உறவுமில்லேன்
என்பெலாம் உருக நின்றிங்
கேத்திடேன் பாடேன்
அந்தோ
துன்பமே மிகவுமுள்ளேன்
சோதியே அமரரேறே
இன்பமே இலங்கை வாழும்
இறைவனே என்னை
ஆள்வாய்

●

ஆறணி சடையினனே
அழகு சேர் மேனியானே
நீறணி பலா நெற்றிக்
கண்ணனே நேரிலானே
ஏறமா செல்வா உனை
ஏத்தி நான் பாடமாட்
டேன்
ஏறிலா வளங்கள் சேரும்
இலங்கை மாநகருளானே

★ யோகசுவாமிகள் 1933ம் ஆண்டில் கண்டியில் வைத்துப் பாடியதாக, இப்பாடலை அனுப்பி உதவியவர்; நா. சுப்பிரமணியன்

## முதலாவது

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

வரான மங்களராணி கதை, கவிதை எழுதுவதிலும் வல்லவராவார் இவரது "ஓ! சமுதாயமே" என்ற கவிதைத் தொகுப்பு 1981ஆம் ஆண்டு யாழ் பலகலைக்கழகத்தில் வெளியிடப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கதாகும் தனது சக்திக்கெட்டியவரை சமூக நலன்களில் அக்கறை காட்டி வரும் இவரது முயற்சி என்றும் பாராட்டுக்குரியதாகும்

பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெறுவதற்கு அனுமதி கொடுத்த கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு மங்களராணி நன்றியைத் தெரிவித்தார்.

இ. க.

மன்னார் பல நோ. கூ. சங்கம்
(வரையறுள்ளது)

மீள விளம்பரம் செய்தல்

**பதவி வெற்றிடம்-**
**கணக்காளர் இல. 104.10**

எமது 10-8-84ந் திகதிய மேற்படி பதவிக்கான விளம்பரம் மீளவும் இச்சங்கத்தால் விளம்பரம் செய்யப்படுகிறது.

இலங்கை பிரஜைகளிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சங்கத்தால் அச்சிடப்பட்ட விண்ணப்பத்தில் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு தேதி:- 12-9-84 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும்.

விண்ணப்பப் பத்திரமும், மேலதிக விபரமும் ரூ. 5/ஐ செலுத்தி சங்கத் தலைமைச் செயலகத்திலிருந்து தபால் மூலமோ, நேரடியாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்,
மன்னார் ப நோ. கூ. சங்கம்,
வயல்வீதி,
மன்னார்.
தொலைபேசி 023/2335. (1553)

Computer Programming and Data Processing Course

(BASIC LANGUAGE)

8-வது பிரிவு

**ஆரம்பம்:**

STREAM I
(வார நாள் வகுப்புகள்) — 5-09-84

STREAM II
(வார இறுதி வகுப்புகள்)—15-09-84

கட்டணம்: Rs. 1500/-

பயிற்சியின் விபரம்

PART I — A. INTRODUCTION TO COMPUTER SYSTEM AND DATA PROCESSING.
B. NUMBER SYSTEM ALGORITHM, CODING METHODS, FLOW CHARTING, DECISION TABLE.

PART II PROGRAMMING LANGUAGE INCLUDING FILE HANDLING.

PRACTICAL: எங்கள் நவீன வசதிகளுடன் கூடிய முற்றாகக் குளிரூட்டப்பட்ட கொம்பியூட்டர் அறையில் உலகில் மிகப் பிரசித்தி பெற்றதும் இலங்கையில் பல வியாபார ஸ்தாபனங்களில் வர்த்தக ரீதியாகப் பயன்படுத்தப்படும் COMMODORE PET 8000 SERIES (96 K) COMMODORE 4000 SERIES (32 K) COMMODORE 64 (64 K) VIC 20 முதலான பலதரப்பட்ட கொம்பியூட்டர்களில் 50 மணித்தியாலங்களுக்குக் குறையாத பயிற்சி.

சான்றிதழ்; பயிற்சி முடிவில் சித்தியெய்தும் மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

(வெளிநாடு செல்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்)

CANTABIA INSTITUTE
21, Main Street, Jaffna.
T' Phone: 24201

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை காலமானார் இவர் பார்வதியின் அன்புக் கணவரும். ஜெயராணி, ஜெயராஜா, [மரக்கறி வர்த்தகர்] இந்துமதி [ஜெஸ்மிர் ரெக்ஸ் ரெஜில்ஸ் கோப்பாய்] செல்வராஜா[மஸ்மன் கொம்பனி ஈவினை] சிவராஜா [கனடா] தேவராஜா [இத்தாலி] புஸ்பலதா திலகரர்ஜா, தவராஜா, சாந்தினி, ஜெயந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வீரகத்தியின் அன்பு மாமனாரும், கிருஷ்ணவேணியின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 02-09-84 ஞாயிற்றுக் கிழமை பகல் 12 மணியளவில் தோற்பிட்டி இல்லத்திலிருந்து கோப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோல்பிட்டி, கோப்பாய் தகவல்

1581 ஜெயராஜா

## மரண அறிவித்தல்

### செல்லாச்சி பரமலிங்கம்

செல்லாச்சிப்பிள்ளை பரமலிங்கம் காலமானார் அன்னார் காலம்சென்ற மு. பரமலிங்கம் ஓய்வுபெற்ற அத்தியட்சகர் தபால் இலாகாவின் அன்பு மனைவியும், திருமால் பொறியியலாளர். உலக வங்கி (சம்பியா) மகேஸ்வரி. நாகேஸ்வரி (London) யோகேஸ்வரி, Dr. சிவராஜா D. M. O. பிபிலை, மகாதேவா A. M. P. வவுனியா ஆகியோரின் அன்புத் தாயாரும். குமாரகுலசிங்கம் ஓய்வு பெற்ற பொறியியலாளர் இணுவில், க. செல்வராஜா (London) கா மாணிக்கவாசகர் உதவி அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம், விமலா அரசினர் வைத்தியசாலை பிபிலை, லலிதர் அரசினர் வைத்தியசாலை வவுனியா, ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனத்திற்காக கோப்பாய் வடக்கில் இருந்து கோப்பாய் மயானத்திற்கு இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல் தருபவர்

1583 கா. மாணிக்கவாசகர்

## மரண அறிவித்தல்

### திருமதி அழகம்மா முருகுப்பிள்ளை

நந்தாவில் கொக்குவிலைச் சேர்ந்த திருமதி அழகம்மா முருகுப்பிள்ளை கொழும்பில் காலமானார், அன்னார் இளைப்பாறிய தபாலதிபர் முருகுப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னையா, அன்னமுத்து ஆகியோரின் அன்புமகளும் இந்திராணி, சண்முகரத்தினம்-(Chartered Accountant- Managing Director, Quality Textiles Industries Ltd) புவனராணி, தெய்வேந்திரன் (Chartered Accountant, London) குமரேந்திரன், கலாநிதி, சர்வேந்திரன், ராஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சச்சிதானந்தன் General Manager, Sasi Garment, Uduvil) சிவமலர், கலைவாணி (London), காலஞ்சென்ற பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுபத்திரை இராஜலிங்கம், நவரத்தினம், காலஞ்சென்ற துரைக்குட்டி, துரையப்பா, துரைச்சாமி ஆகியோரின் சகோதரியுமாவர். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 3-9-84ம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு கொட்டாஞ்சேனை புதுச்செட்டித்தெரு 150-ம் இலக்க இல்லத்திலிருந்து கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

1562

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் பொன்னுத்துரை



முன்னாள் யாழ். அரசினர் வைத்தியசாலை மருந்தாளர் திரு இராமலிங்கம் பொன்னுத்துரை காலமானார். இவர் ரேவதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் இ. போ. ச. பரிசோதகர் இராமலிங்கம், பாலிதராஜா புவனேஸ்வரி, சன்மார்க்க மகா வித்தியாலய ஆசிரியை நாகபூஷணி, ஒலிபரப்புக் கூட்டுத்தான சந்தானலக்ஷ்மி ஆகியோரின் அன்புத் தந்தையும், புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை டாக்டர் நாகேந்திரம், வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர் பாக்கியராஜா, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (மன்னார்) ஸ்ரீகணேஷராஜா, சிவராணி ஆகியோரின் அன்பு மாமனருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (2-9-84) ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணியளவில் கோம்பையன்மணல் மயானத்துக்கு யாழ். மணிக்கூட்டு வீதி, 96-ம் இலக்க இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

1582

## திருட்டுக்கள் அதிகரிப்பு

(ஊரெழு),

அண்மைக் காலங்களாக ஊரெழுப் பகுதியில் திருட்டுகள் பெருமளவில் அதிகரித்து வருகின்றன.

தோட்டங்களில் பயிரிடப் பட்டுள்ள பீட்ரூட், மரவள்ளி போன்ற பயிர்வகைகளுடன், வீடுகளிலுள்ள கோழி, ஆடு, மாடுகள் என்பனவும் திருடப் பட்டுவருகின்றன. பயிர்வகைகள் திருடப்படுவதனால் பயிர்ச் செய்கையாளர்களுக்குப் பெருமளவில் நட்டம் ஏற்பட்டுவருகிறது.

பெரும்பாலும் இரவு வேளைகளிலேயே இந்தத் திருட்டுகள் நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது.

நள்ளிரவு நேரத்தில் இங்குள்ள சிலரின் வீடுகளிலும் சிலர் உட்சென்று திருட முயன்ற பொழுது வீட்டுச் சொந்தக்காரர்கள் அதனை முறியடித்த சம்பவங்களும் நடந்துள்ளன.

சுன்னாகம் பொலிஸ் நிலையம் மூடப்பட்டுள்ளதாலும் பொதுவாக பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் இப்பொழுது இல்லாத காரணத்தினாலும் திருடர்கள் தொகை பெருமளவில் அதிகரித்து வருவதாகப் பலரும் பேசிக்கொள்கிறார்கள்.

## மரண அறிவித்தல்

### முத்தம்மா சந்தியாபிள்ளை

1-9-84 ஈழநாடு அறிவித்தலில் தொடர்பான அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று ஞாயிற்றுக் கிழமை 2-9-84 பிற்பகல் 4-15 மணிக்கு 4, கோவில் வீதி, யாழ்ப்பாண இல்லத்திலிருந்து புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். 1580

# லோட்ஸில் இலங்கை வீரனின் கணிக்கத்தக்க ஆட்டம்

ஜி. எஸ். சவரிமுத்து

1983ம் ஆண்டு இந்தியாவில் இலங்கையர்கள் ஆடிய சிறப்பாட்டத்திற்குப் பின் அவர்களின் மற்றொரு சிறப்பாட்டம் லோட்சிலே அமைந்தது. லோட்சிலே இலங்கை வீரர்கள் ஆடிய போது பந்து வீச்சு, துடுப்பாட்டம், பந்துத்தடுப்பு ஆகிய முத்துறைகளிலும் சிறப்பாகவே ஆடினார்கள்

**சாதனைகள் பல . . .**

இலங்கை ஆடிய 12 டெஸ்ட் ஆட்டங்களிலும் அதிகூடிய ஓட்டங்களை எடுத்த பெருமையை லோட்சிலே அடித்த 491 ஓட்டங்கள் மூலம் பெற்றது இலங்கை அணிக்காக அதிகூடிய ஓட்டங்களை எடுத்த பெருமை வெற்றிமுனிக்கே செல்கிறது. 190 ஓட்டங்களைப் பெற்ற இவர் லோட்ஸ் போட்டியிலே சிறந்த ஆட்டக்காரராகத் தெரியப்பட்டார். இவர் மேலும் 10 ஓட்டங்களைப் பெற்றிருந்தால் உலகிலேயே மிக மெதுவாக இரட்டைச் செஞ்சரியைப் பெற்ற வீரர் என்ற பெருமையைப் பெற்றிருப்பார். இப்போட்டியிலே 100 ஓட்டங்களுக்கு மேலான 3 இணைப் பாட்டங்கள் காணப்பட்டன. மற்றொரு 100 ஓட்ட இணைப் பாட்டத்தை பெற்றிருந்தால் உலக சாதனையை சரிநிகர் ஆக்கியிருப்பார்கள். இலங்கையரின் பந்துவீச்சு சாதனை புரியத்தக்கதாக இருக்கவில்லை என்றாலும் சிறப்பாக இருந்தது.

இதேவேளையில் இலங்கை அணியின் முகாமையாளரான நீல் சண்முகம் இலங்கையரின் ஆட்டம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் அது சிறப்பான ஆட்டமாக இருந்தது என்றார். அப்படியாயின் இலங்கையின் முதல் டெஸ்ட்வெற்றி அண்மையில் தானே உள்ளது?

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் ஜீவரத்தினம்

(கோண்டாவில் கிழக்கு)

2-9-84 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த இவரது மரணச்சடங்குகள் 3-9-84 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். 1574

## மரண அறிவித்தல்

### செல்லையா இராசரத்தினம்

செல்லையா இராசரத்தினம் [தியாகு] F. P. L. (Railways) காலமானார். அன்னார் உரும்பிராய் வக்கு காலஞ்சென்ற செல்லையா தம்பதிகளின் மகனும், ஆனந்தராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற S. ஆறுமுகம், திருமதி ஆறுமுகம் ஆகியோரின் மருமகனும், சித்திராங்கன், வரதன், ரஞ்சன் ஆகியோரின் தந்தையும், தவமணி இரத்தினசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியை, உரும்பிராய் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற பவளமணி, திரு. நவரத்தினம் (இலங்கை வங்கி, சுன்னாகம்). மூர்த்தி (அட்டம்பிற்றியா எஸ்ரேற்) ஆகியோரின் சகோதரனும், N. S. இரத்தினசிங்கம் (இளைப்பாறிய அதிபர் யாழ். மத்திய கல்லூரி), மீனா தவரத்தினம் (ஆசிரியை உரும்பிராய் இந்துக் கல்லூரி), தெய்வேந்திரன் (லண்டன்), மகேந்திரன் (மருந்துக் கூட்டுத்தாபனம்), நாகேந்திரன் (லண்டன்), கணேசராணி (லண்டன்), நந்தராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக ''இராணி வாசம்'', கோண்டாவில் மேற்கு, K. K. S. வீதி இல்லத்திலிருந்து 2-9-84 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தாவடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

1561

## ரூபவாஹினியில் போல் பாடுகிறார்

[கொழும்பு]

பிரபல சங்கீதக் கலைஞர் திலகநாயகம் போலின் இசைக் கச்சேரி நாளை இரவு 7.15 க்கு ரூபவாஹினியில், ஒளிபரப்பாகிறது. இவர் யாழ் மத்திய கல்லூரியின் சங்கீத ஆசிரியராக இருக்கிறார்.

## ஆதனவரி கட்டாதவர்க்கு எச்சரிக்கை

(பண்டத்தரிப்பு)

யாழ் அபிவிருத்திச்சபையின் பண்டத்தரிப்பு உப அலுவலகப் பகுதியிலுள்ள பொதுமக்கள் தங்கள் ஆதனவரியை தாமதமின்றி செலுத்தவேண்டும் என்றும் செலுத்தாமல் இருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எஸ். ரி. கதிரவேற்பிள்ளை அறிவித்துள்ளார்.

கிராமசபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் மேற்படி ஆதனத்தை கைப்பற்றி விற்பனை செய்வதின் மூலம் நிலுவையை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

## நீதி அமைச்சர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாயகாவுடன் நடத்திய பேச்சுக்கள் பற்றி டாக்டர் நிஸங்கா விபரமாக எதுவும் வெளியிடவில்லை, ஆனால் ''நான் பின் கதவால் செல்லவில்லை, முன் கதவால் சென்று முன் கதவாலேயே வெளியில் வந்தேன்'' என்று பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார்.

இதேசமயம் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் பதவி விலகப் போவதாகச் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

''நிஸங்காவின் அழைப்பின் பேரிலேயே பேச்சுவார்த்தை நடாத்தினேன்'' என்று திருமதி ஸ்ரீமாவோ அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## முருகன்----

(15ம பக்கத் தொடர்ச்சி)

நேற்று சனிக்கிழமை கொடியேறியுள்ளது. நாட்டுநிலைமை காரணமாக பகல் திருவிழாக்களை பகல் இரண்டு மணிக்கும் இரவுத் திருவிழாக்களை ஏழு மணிக்கும் முன்னதாக முடிக்க வேண்டுமெனத் திருவிழா உபயகாரர்களைக் கோவில் பரிபாலனசபை கேட்டுள்ளது. இருப்பினும் பலமைல் தொலைவிலிருந்துவரும் அடியார்களின் நலன்கருதி ஸ்தம்ப பூசை வசந்தமண்டப பூசை என்பன வழமைபோல் ஒருகுறிப்பிட்ட நேரத்தில் நடைபெறும்.

இக்கோவில் ஒன்றுதான் கிளிநொச்சி மாவட்டத்திலேயே கொடியேறித்திருவிழா நடைபெற்றுத் தேரோடுகின்ற கோவில் மிகப்பழையதும் நித்திய நைமித்தியச் சிறப்புகள் உடையதுமான கோவிலுமிதுவேயாகும்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389 — 24126